# ஞானச்சுடர்




தை 2024

313ஆவது மலர்


வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு.**

**பொருள் :** சேனை, குடி, பொருள், மந்திரிமார், நண்பர், கோட்டை என்னும் ஆறையுமுடையவன் அரசருள் சிங்கம் போல்வான். (381)

**அஞ்சாமை யீகை அறிவூக்க மிந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தற் கியல்பு.**

**பொருள் :** அரசனுக்கு இயல்பானது மன உறுதி, கொடை, அறிவு, ஊக்கம் ஆகிய நான்கும் எப்பொழுதுமிருத்தல். (382)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

**தொண்டு செய்வார்**



தொண்டுசெய் வாருக் குண்டே ஞானம்
தொண்டுசெய் வாருக் குண்டே மோனம்
தொண்டுசெய் வாருக் குண்டே தானம்
தொண்டுசெய் வாருக் குண்டே கானம் 01

எல்லா ரிடத்தும் அடியேன் வாழ்வேன்
எல்லா ரிடத்தும் அடியேன் தாழ்வேன்
எல்லார்க்கு மென்றும் அடியேன் கேள்வன்
சொல்லாற் பயனிலை யென்றே சூழ்வன் 02

எல்லா ருருவமு மென்னுரு வாகும்
எல்லார் நலன்களு மென்னல மாகும்
எல்லார் பலமு மென்பல மாகும்
நல்லோர் என்னுரை நயந்துகொள் வாரே 03

வருவன வெல்லாம் வந்தே யேகுக
கருதுவ வெல்லாங் கருதித் தீருக
ஒருவரு மறியா வொண்செஞ் சீறடி
குருபரன் திருவடி கொண்டா டுதுமே 04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 313




2024 **பொருளடக்கம்** தை


| | | |
|---|---|---|
| எண்ணங்களே வாழ்க்கை | சி . நற்குணலிங்கம் | 01 - 03 |
| மனிதமும் தெய்வீகமும் | மு. செல்லத்தம்பி | 04 - 06 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 07 - 09 |
| எனக்குள் என்னைக் காட்டிய... | அ. நளினாசினி | 10 - 14 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 15 - 16 |
| பண்டைய கல்வி அறிவில்லாத... | பு. கதிரித்தம்பி | 17 - 19 |
| நல்லூர் தேரடிச் சித்தர் | கு. சோமசுந்தரம் | 20 - 24 |
| தை அமாவாசைத்தினம் | திரு சிவசங்கரநாதன் | 25 - 26 |
| கொக்குவிலை வரமாக்கிப்... | கே.எஸ். சிவஞானராஜா | 27 - 29 |
| சதுர்யுகங்கள் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 30 - 31 |
| தை அமாவாசை சிறப்புக்களும்... | க.கு.க. சிவபாலன் | 32 - 35 |
| நினைக்க முத்தி அளிக்கும்... | திருமதி தி இந்திரா | 36 - 40 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 41 - 44 |
| சந்நிதியான் ஆச்சிரமத்தினால்... | தொகுப்பு | 45 - 58 |
| தமிழ்ப் பெண் கவியரசிகள் | இரா. செல்வவடிவேல் | 59 - 62 |
| வாசகர் போட்டி | சந்நிதியான் ஆச்சிரமம் | 63 - 64 |



**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்*

*இரண்டாவது குருமகா சந்நிதானம் அவர்கள்*

*வழங்கிய*

# ஆசிச் செய்தி



1998ஆம் ஆண்டு முதல் இற்றைவரை மாதம் ஒரு மலராக தொடர்ச்சியாக வெளிவந்து இன்று 313ஆவது மலராக ஞானச்சுடர் வெளியாகும் இந்நேரத்தில் யான் இந்த ஆசிச் செய்தியை வழங்குவதில் பேருவகை கொள்கின்றேன்.

இம் மலரானது நாட்டில் இடம்பெற்ற பலவிதமான இடர்பாடுகளையும் கடந்து உயரிய சமய கருத்துக்கள் கொண்ட தூய சஞ்சிகையாக வெளிவருவது சந்நிதி வேலவனின் திருவருள் என்றே கூறவேண்டும்.

இம் மலர் தொடர்ந்தும் பல்லாண்டு பல்லாண்டு மலர்ந்து பிரகாசித்து சமய பணியாற்றிட நாம் அனைவரும் உறுதுணையாக நிற்கவேண்டும்.

"வாழ்க ஞானச்சுடர்"

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவின் 27ஆவது அகவை ஆசிச் செய்தி



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளிவரும் ஞானச்சுடர் சஞ்சிகையின் 27ஆவது ஆண்டு 313ஆவது மலருக்கு ஆசியுரை வழங்குவதையிட்டு பேருவகை அடைகின்றேன்.

இம் மலர் நல்ல ஆக்கங்களுடன் மாதந்தோறும் தவறாமல் வெளிவருவது அந்த ஆற்றங்கரையானின் திருவருள் என்று தான் கூறவேண்டும். தொடர்ந்து இம் மலர் வெள்ளிவிழாவுடன் நின்றுவிடாது பொன்விழா, பவளவிழா, அமுதவிழா, நூற்றாண்டு விழா கொண்டாட எனது நல் ஆசிகளையும், நல் வாழ்த்துக் களையும் தெரிவித்து அமைகின்றேன்.

"இன்பமே சூழ்க; எல்லோரும் வாழ்க"

"வாழ்க வளமுடன்"

"சுப மங்களம்"

"அன்பே சிவம்"

சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவை போஷகருமாகிய
*சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்* J.P
பிரதமகுரு:
வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் ஆதீனகர்த்தா
தென்புலோலி புற்றளைச் சித்தி விநாயகர் தேவஸ்தானம்
சைவக்குருமார் சபை பீடாதிபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான பிரதம குருவின் ஆசிச்செய்தி

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் சைவப் பெருமக்கள் நலன்கருதி தொடர்ந்து 313ஆவது மலராக ஞானச்சுடர் பிரகாசிப்பதையிட்டு வாழ்த்துகிறேன்.



மக்கள் மத்தியில் கலாசாரப் பண்பாடுகள், சமய விழுமியங்கள் அருகிவரும் நிலையில், சிறப்பான கட்டுரையாளர்கள்மூலம் தரமான கட்டுரைகள் பல மாதங்கள்தோறும் வெளிக்கொணரப்படுவதை மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றேன்.

வேற்பெருமான் பக்த அடியார்களை ஞானச்சுடர் மூலம் பிரமமாய் இணைத்து வருவது எல்லாம் ஆற்றங்கரை வேற்பெருமானின் சக்தியே ஆகும். சிறப்பான கட்டுரை எழுத்தாளர்கள் பணி மென்மேலும் சிறக்கவும், ஞானச்சுடர் ஆசிரியர்கள் குழாமினையும் வாழ்த்தி சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை உறுப்பினர்களையும் ஆசிகூறி வாழ்த்துகின்றேன்.

எல்லாம் இறைவன் பணியாகட்டும்.

சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவை போஷகருமாகிய
கிரியா க்ரம ஜோதி, கிரியா கலாப முக்தாமணி
***சிவஸ்ரீ ப. மனோகரக் குருக்கள்***
**பிரதமகுரு:**
வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்.
வல்வெட்டித்துறை.
**தலைவர்:**
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் அவர்கள் வழங்கிய பிரார்த்தனை உரை

## ஞானச்சுடர் சைவசமய வரலாற்று ஆவணம்

பத்திரிகைத் தாள் தட்டுப்பாடு, அச்சுக்கூலி அதிகரிப்பு ஆன்மீகச் சஞ்சிகைகளின் மீதான வாசகரின் ஈடுபாடு குறைவுபடல் என எந்தக் காரணத்தையும் சொல்லி மறை சிந்தனை கொள்ளாமல் உரிய நாளில் உரிய தரத்துடன் வெளிவருகின்ற ஒரே ஆன்மீகச் சஞ்சிகை ஞானச்சுடர்.

தமிழகத்தில் இருந்து வெளிவரும் ஆன்மீகச் சஞ்சிகைகள் தோஷபரிகாரம் கிரக பலன்கள் என அலட்டிக் கொண்டிருக்கும் சூழலில் பாரம்பரியம் குன்றாமல் ஈழச் சூழலுக்குத் தேவையான விடயங்களை தொகுத்துத் தரும் பணியை ஞானச்சுடர் நேர்த்தியாக மேற்கொண்டு வருகின்றது.

எப்படி இவை எல்லாம் சாத்தியமாகின்றது என்று கேட்டால் ஆச்சிரம சுவாமிகள் கூறும் ஒரே பதில் அவன் (சந்நிதியான்) இயக்குகின்றான். நாங்கள் இயங்குகின்றோம் என்பதுதான்.

நான் சார்ந்த கோப்பாய் ஆசிரிய கலாசாலை எந்த நாளில் தொடங்கப்பட்டது என்ற தகவலை 1923ஆம் ஆண்டில் செப்ரெம்பர் மாதத்தில் வெளிவந்த இந்துசாதனம் ஆன்மீக இதழின் ஊடாகவே பெற்றுக்கொண்டோம். "நூலகம்" இணையத்தளத்தில் இந்து சாதனத்தின் பழைய இதழ்கள் தரவேற்றப்பட்டுள்ளமையால் இது சாத்தியமாயிற்று. நான் அறிந்தவரையில் 2022இற்கு முன்னர் ஓர் ஐம்பதாண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கலாசாலையின் தொடக்க நாள் பற்றிய தகவலை யாருமே அறிந்திருக்கவில்லை.

ஞானச்சுடரில் வெளிவரும் தகவல்கள் எதிர்காலத்தில் ஈழத்தில் சைவத்தின் நிலைத்திருப்பு அதன் வரலாறு என்பவற்றை எடுத்துரைக்கும் ஆவணமாகவே கொள்ளப்படும் எனவேதான் நான் அடிக்கடி குறிப்பிடுவதுண்டு சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு அப்பாலும் ஆன்மீகத் தளத்தில் இடம்பெறும் நிகழ்வுகளை ஞானச்சுடர் ஆவணப்படுத்த வேண்டும். இது காலத்தின் கட்டாயம் எனக் கருதுகின்றேன்.

1998 இல் சந்நிதியான் ஆச்சிரமத்தின் மூலம் ஓர் ஆன்மீக சொற்பொழிவாளனாக சிவத்தமிழ்வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்களால் வெளியுலகுக்கு அறிமுகம் செய்யப்பட்ட நிகழ்வை இன்றும் நினைத்துப் பார்க்கின்றேன். அன்றுமுதல் முருகப்பெருமானின் திருவருளும் ஆச்சிரம சுவாமிகளின் குருவருளும் என்னை நல்வழிப்படுத்துவதாக உணர்கின்றேன்.

ஞானச்சுடர் இன்னும் செழித்துச் சுடர்விட்டுப் பிரகாசிக்க முருகப்பெருமான் திருவருள் பாலிப்பாராக.

*-திரு ச. லலீசன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்
# மார்கழி மாத வெளியீடு

## வெளியீட்டுரை:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியீடு செய்யப்பட்டுவரும் மார்கழி மாத ஞானச்சுடர் மலரின் வெளியீட்டுரையினை இளைப்பாறிய கிராம சேவையாளரும், ஆச்சிரமத்தால் ஆற்றப்படும் பல பணிகளுக்கு தன்னாலான பங்களிப்பினை வழங்கிவருபவருமான திரு சோ. பரமநாதன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.



அவர் தம் ஆரம்ப உரையில் இம் மலர் வெளியீடு என்பது சமூகத்திற்கு பயனுள்ளதாகவும், காத்திரமாகவும் இருப்பதை மலரின் வளர்ச்சியினை உற்று நோக்கும்போது எம்மால் காணக்கூடியதாகவுள்ளது. தொடராக 312ஆவது மாத இதழாக வெளிவருவதையிட்டும் இம் மலரின் வெளியீட்டுரை நிகழ்துவதன் காரணமாக நாமும் தொடராக ஒவ்வொரு வருட மார்கழி மாதமும் வெளியீட்டுரை ஆற்றக்கூடிய சந்தர்ப்பத்தை அருளிக்கொண்டிருக்கும் சந்நிதி வேலவனை போற்றி வணங்குகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஆன்மீக மலர் தொடராக வெளிவருவது எங்குமே காணமுடியாத ஒரு அற்புத நிகழ்வு என்றே கூறலாம். அதற்கு அமைவாக ஆக்கங்களை எழுது வோரையும் நாம் பாராட்டியேயாகவேண்டும். இம் மாத மலரில்கூட பலவிதமான ஆக்கங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இம்மலர் தொடர்ந்து பிரகாசிக்க சந்நிதி வேலவனை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

## மதிப்பீட்டுரை:

312ஆவது மலராக வெளிவந்த ஞானச்சுடர் மலருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகாலத் தொடர்பில் உள்ளவரும், இளைப்பாறிய பிரதி கல்விப் பணிப்பாளராக விளங்கிய திரு ஆ. ஸ்ரீஸ்கந்த மூர்த்தி அவர்கள் மதிப்பீட்டுரையை ஆற்றினார்கள்.



அவர் ஆற்றிய உரையில் சந்நிதியான் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் சகல சமூகப் பணிகளின் செயற்பாட்டினையிட்டு சந்நிதி வேலவனுக்கும் ஆச்சிரமம் சார்ந்தோருக்கும் எனது பணிவான வணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றேன் என்று கூறியதுடன், வெளியீட்டுரைக்கு வருகை தந்த திரு சோ. பரமநாதன் அவர்களும், நானும் இம் மாத மலரின் வெளியீட்டின் காரணமாக இருவரும் ஒருவரையொருவர் சந்திப்பதற்கும் சந்நிதி வேலவனை வணங்குவதற்கும் சந்நிதியான் ஆச்சிரமமும், பேரவையும் ஒரு காரணமாக அமைந்திருக்கின்றது என்று கூறி மலரில் இடம்பெற்ற ஒவ்வொரு ஆக்கங்களின் தன்மைபற்றி சபையில் இருந்த அடியார்களுக்கு விளக்கிக் கூறியதுடன் குறிப்பாக ஆச்சிரமத்தின் அச்சுக்கூடத்தில் பணிபுரியும் அனைவரின் செயற்பாட்டையும் மிகவும் பாராட்டியே ஆகவேண்டும். காலம் தவறாது இம் மலர் வெளிவருவதற்கு அவர்கள் ஆற்றும் பணியே காரணமாய் அமைகின்றது என்று கூறி தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

"ஞானச்சுடர்" தனது 26 வயதினைப் பூர்த்திசெய்து 27ஆவது வயதினில் காலடி பதிப்பதையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம்.

விளம்பரம் எதுவுமின்றி, அரசியல் கலப்பின்றி, கடைகளில் விற்பனைக்கு வைக்காமல் சராசரி 60 பக்கங்களுடன் சந்தாதாரர் கைகளில் ஞானச்சுடர் பிரகாசிப்பது சந்நிதி வேலவனது அருள் என்றே கூறவேண்டும்.

கட்டுரைகள், கவிதைகளிற்காக ஆச்சிரமம் சார்ந்தோர் வீடுகளிற்கு சென்று காத்திருந்த காலம் மாறி இன்று தபால் மூலமும், நேரிலும் வந்து சேரும் கட்டுரைகளையும், கவிதைகளையும் சரி பார்த்து தரம் பிரித்து அச்சுப்பகுதிக்கு அனுப்புவதென்பதே பெரும் விடயமாகவுள்ளது.

ஒரே கட்டுரையாளர்களின் கட்டுரைகள் அவற்றின் கனம் கருதி அடிக்கடி வெளிவந்தாலும் அறிமுக எழுத்தாளர்களையும், அவர்களின் ஆற்றல்களையும் வெளிக்கொணருவதிலும் முன்னிற்பதில் நாம் பெருமையடைகிறோம். இந்த நோக்கில் கடந்த ஆண்டில் பல புதிய எழுத்தாளர்களையும், கவிதை வடிப்போரையும் அறிமுகப்படுத்தி இருக்கின்றோம்.

மாதா மாதம் 2100 மலர்கள் வெளிவருவதற்கு உறுதுணையாகவிருக்கும் சந்தாதாரர்களுக்கும், வாசகர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதில் என்றும் நாம் பின்நிற்கப்போவதில்லை. ஆச்சிரமத்தில் ஆற்றும் சகல பணிகளுக்கும் உறுதுணையாய் இருந்து எம்மையெல்லாம் வழிநடத்திச் செல்லும் சந்நிதி வேற் பெருமானுக்கு நன்றி கூறுவதோடு, ஆக்கங்களை வழங்கிவரும் அன்பர்களுக்கும், சிறப்புப்பிரதி பெறுவோர்களுக்கும் மாதந்தோறும் வெளியீட்டுரை - மதிப்பீட்டுரையில் பங்குபற்றுவோருக்கும் நன்றியைக் கூறி நிறைவு செய்கின்றோம். தொடர்ந்தும் மலர் பிரகாசிக்க மலரோடு சம்பந்தப்பட்ட நல்லுள்ளங்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

## மக்கள் வங்கி இளைப்பாறிய உத்தியோகத்தர்கள்

திரு சி. பத்மநாதன்
திரு வ. சண்முகநாதமுதலி
திரு சி. நித்தியானந்தன்
திரு க. சுசீந்திரன்
திரு ந. நாகேஸ்வரன்
திரு இ. யோகராசா
திரு தி. சிவகுமாரன்
திரு க. சண்முகலிங்கம்
திரு இ. சிவஞானசுந்தரம்பிள்ளை
திரு க. ஞானசீலன்
திரு த. சிவகுமார்
திரு பொ. தங்கராசா
திரு எஸ். இராஜேந்திரம்
திரு க. ஞானச்சந்திரன்
திரு க. ஸ்ரீதரன்
திரு கி. அமிர்தலிங்கம்
திரு து. பாலேந்திரா
திருமதி சு. விஜயகுமார்
திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
திரு K. சிவப்பிரகாசம்
செல்வி விமலா கந்தையா
திரு த. தவேந்திரராஜா
திரு க.து. ஜெகநாதன்
திரு சி. மனோராஜ்
திரு செ. பாலசுந்தரம்
திரு சி. ஸ்ரீரங்கநாதன்
திருமதி ப. சுஜித்திரா
திருமதி ஜெ. பத்மநாபன்
திரு செ. கந்தசாமி
திரு R. சந்திரகோபன்
திரு பி. கிருஸ்னானந்தன்
திரு R. ஸ்ரீஸ்கந்தராஜா
திரு த. பாலசிங்கம்

## மக்கள் வங்கி யாழ். பிரதேச காரியாலய உத்தியோகத்தர்கள்

திரு K. கோடீஸ்வரன்
திருமதி ந. கிருஷாந்தி
திரு P. தேவநேசன்
திரு W. சிவபாலன்
திருமதி T. பிரதீபா
திருமதி P. ருக்ஷலா
திருமதி பி. மயூரி
திருமதி S. சிந்துஜா
திரு ப. உதயணன்
திரு S. ஜெயராசா
திரு T. பாரத்ரமணா
திருமதி பி. ஜனனி
திருமதி ஆ. மாதுஷா
திரு S. விஜயகுமார்
திருமதி சு. யாழினி
திருமதி சு. வனஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லிவீதி உத்தியோகத்தர்கள்**

திரு இ. ஜெயகாந்தன்
திரு ப. பார்த்தீபன்
திரு தி. பிரதாப்
திரு சி. ஜெரோன்
திரு பே. ராஜ்குமார்
திருமதி உ. தனுசுயா
திருமதி தி நித்தியா
திருமதி சு. பிரசாந்தினி
செல்வி யோ. சுபாஜினி
திருமதி க. புவனகுமாரி
திருமதி உ. கலைவாணி
செல்வி மு. தர்சனா
திருமதி பி. சிவசொரூபி
திரு ப. ஆரணன்
திரு த. லங்கரன்
திரு R. சுகிர்தன்
திருமதி ஜெ. சயந்தினி

**மக்கள் வங்கி யாழ். பிரதான வீதி உத்தியோகத்தர்கள்**

திருமதி R. பத்மகலா
திரு ந. பாலமுரளி
திருமதி செ. உஷாந்திகா
திரு T. ரஜிந்தன்
திருமதி R. சரண்யா
திருமதி S. நிலோசனா
திருமதி ப. யசிக்கா
திருமதி I. அனோஜா
செல்வி ச. சுகிர்தகுமாரி
திரு செ. சரத்சந்கர்

**மக்கள் வங்கி யாழ். பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள்**

திரு க. ஶ்ரீதரன்
திருமதி த. அனுஜா
திரு தெ. ஹர்ஷன்
திருமதி தி சசிதேவி
திருமதி உ. குகன்யா
திருமதி கி. மனஸ்வினி
திரு ம. மாலவன்
திரு R. ரஜீவன்
திரு A. சஜீவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் வங்கி யாழ். கன்னாதிட்டி உத்தியோகத்தர்கள்**

திருமதி P. ரம்யா
திருமதி T. தேனுதயா
திருமதி V. லிதியாமிஷானி
திருமதி சி. தமயந்தி
திருமதி S. விஜிதா
திரு P. கிருஷ்ணகுமார்
திரு P. புவிராஜ்
திருமதி கா. மீரா
திரு K. வேணுகோபால்

**மக்கள் வங்கி சுன்னாகம் உத்தியோகத்தர்கள்**

திருமதி P. சிந்துளா
திருமதி ந. கோபிகா
திருமதி து. சுபாஜினி
திருமதி ம. அனுஷா
திருமதி ல. நிஷங்கா
திருமதி ந. தனுஷா
திரு சி. மோகனச்செல்வன்
திரு கா. நிஷாந்தன்
திரு ச. கிரீடன்
திருமதி செ. லாவண்யா

**மக்கள் வங்கி சங்கானை உத்தியோகத்தர்கள்**

திரு ந. தனேஷ்
திரு செ. உமாசங்கர்
திருமதி அ. சுகன்யா
திருமதி P. ஜிந்துஜா
திருமதி ச. கிருபாளினி
திரு ச. கோணேஸ்வரன்
திருமதி ப. சுதர்சினி
திருமதி தி. புசாளினி
திருமதி ச. கிரிஜினி
திரு தி. பிரதீபன்

**மக்கள் வங்கி தெல்லிப்பளை உத்தியோகத்தர்கள்**

திருமதி P. கிருபாலினி
திரு S. சிவகுமார்
திரு க. கமலக்ஷன்
செல்வி மு. ஹேமப்பிரியா
திருமதி S. உஷாநந்தினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி K. செல்வமலர்
திரு வி. கஜதீபன்
திரு T. தனரஞ்சன்
திரு A. கோகுலரூபன்

**மக்கள் வங்கி சாவகச்சேரி உத்தியோகத்தர்கள்**

திரு S. சஜீவன்
திருமதி சி. பானுஜா
திரு கு. வெங்கடேஸ்
திருமதி S. லக்ஷாந்தி
திருமதி S. ஆசாயினி
திருமதி இ. தட்சிகா

**மக்கள் வங்கி கொடிகாமம் உத்தியோகத்தர்கள்**

திருமதி வி. பிரியகாந்தினி
திருமதி சே. கிருஷிகா
திருமதி வி. உஷா
திருமதி சு. பவித்திரா
திருமதி ர. சோபிதா
திரு க. கஜீபன்
திரு த. அங்குசன்

**மக்கள் வங்கி அச்சுவேலி உத்தியோகத்தர்கள்**

திருமதி K. சசிகலா
திருமதி ஜெ. பகீரதி
திருமதி H. இசைவாணி
திரு சீ. சற்சொரூபன்
திருமதி P. சாருலதா
திரு V. பிரகாஸ்
திரு S. அருணா

**மக்கள் வங்கி பருத்தித்துறை உத்தியோகத்தர்கள்**

திரு ச. சர்வானந்தன்
திரு அ. பிரகலாதன்
திரு தெ. முகுந்தன்
திருமதி கி. பிரசாந்தினி
திருமதி அ. சிந்துஜா
திரு ஆ. பரணன்
திரு ச. நிலோஜன்
திருமதி க. சசிதா
திரு தா. தவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் வங்கி நெல்லியடி உத்தியோகத்தர்கள்**

திருமதி சு. மாதங்கி
திருமதி அ. மீரா
திருமதி U. சுபாசினி
திரு ப. சுமன்

**மக்கள் வங்கி ஊர்காவற்றுறை உத்தியோகத்தர்**

திரு க. ரமேஸ்நேசன்

**மக்கள் வங்கி வல்வெட்டித்துறை உத்தியோகத்தர்கள்**

திருமதி A. கானப்பிரியா
திருமதி P. யாழினி
திருமதி கே. உதயசாந்தி

**மக்கள் வங்கி பரந்தன் உத்தியோகத்தர்கள்**

திரு A. பிரான்ஸிஸ்
திரு க. ஜெயகணேசன்
திருமதி P. சுபாசினி
திருமதி ச. சிந்துஜா
திரு ந. சஞ்சீவ்
திரு தே. ரஜீவன்
திரு ச. சுஜன்
திரு தி. சிவப்பிரகாசம்
திரு ச. இராஜாராம்
திருமதி S. வித்யா
திரு க. லதீகரன்
திருமதி பி. நீரஜா

**மக்கள் வங்கி முல்லைத்தீவு உத்தியோகத்தர்**

திருமதி ம. அகிலா

**மக்கள் வங்கி கிளிநொச்சி உத்தியோகத்தர்கள்**

திரு த. லிங்கராஜ்
திரு ந. கோபி

**மக்கள் வங்கி திருமலை மாவட்ட உத்தியோகத்தர்கள்**

திரு அ. ஐங்கரன்
திரு க. மதிவதனன்
திரு ம. பிறேம்குமார்
திருமதி கு. வைஜெயந்தி
திருமதி த. கலைச்செல்வி
திருமதி M. கிருஷ்னானந்தி
செல்வி வ. கனகசபை

**திரு த. கணேசமூர்த்தி**
(இளை. நிறைவேற்று அதிகாரி, இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்வி சரண்யா சத்தியநாதன்**
(கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம்)
**திருமதி கலைச்செல்வி தயாளன்**
(திருகோணமலை)
**திரு S. திருநாவுக்கரசு**
(அச்செழு, நீர்வேலி)
**திரு பொ. பாலசிங்கம்**
(காசாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)
**செல்வி ஹரினி ஹரிதரன்**
(நுணாவில் மேற்கு, சாவகச்சேரி)
**செல்வி ஹம்ஷாலினி ஹரிதரன்**
(நுணாவில் மேற்கு, சாவகச்சேரி)
**திரு பா. இராசேந்திரம்**
(இளை. கி. சேவகர், உடுப்பிட்டி)
**திரு செ. மதியாபரணம்**
(வளர்மதி புடவை அகம், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்)
**திரு நீ. சுப்பிரமணியன்**
(இளை. உத்தியோகத்தர், ப.நோ.கூ.ச, உடுப்பிட்டி)
**செல்வி தட்சாயிணி செல்வமாணிக்கம்**
(நாவலடி, உடுப்பிட்டி)
**திரு சி. சர்வானந்**
(சண்டிலிப்பாய்)
**திரு சி. கணேசலிங்கம்**
(தமிழ்ப்பூங்கா, நெல்லியடி)
**உரிமையாளர்**
(பெசன் ஹவுஸ், யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(பெற்றா ஏசென்ஸ் விநியோகத்தர், யாழ்ப்பாணம்)
**செல்வன் செ. ஷஷ்டிகன்**
(மானிப்பாய்)
**திரு தட்சணாமூர்த்தி பவனேசன்**
(நீர்வேலி)
**உரிமையாளர்**
(சாரங்கா நகைமாடம், யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு வல்லிபுரம் சிவகுமாரன்**
(சங்கானை)
**உரிமையாளர்**
(வெங்கடேஸ்வரா, யாழ்ப்பாணம்)
**திரு இ. இராசநாயகம்**
(துர்க்கா மரக்காலை, சண்டிலிப்பாய்)
**திரு ஆ. சுந்தரலிங்கம்**
(இளை. பிரதம அஞ்சல் அதிபர்)
**திரு நா. கந்தப்பு**
(தோப்பு, அச்சுவேலி)
**திரு க. தர்மலிங்கம் J.P.**
(நீர்வேலி)
**உரிமையாளர்**
(மலாயன் கபே, யாழ்ப்பாணம்)
**திரு ஜெ. இராஜகோபால்**
(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)
**திரு சேனாதிராசா சற்குணராசா**
(பண்டத்தரிப்பு)
**திருமதி பாலகிருஸ்ணன் சிவனேஸ்வரி**
(முருகமூர்த்தி வீதி, சங்கானை)
**திரு க. இராஜதுரை**
(நீர்வேலி)
**திரு த. சிவசுப்பிரமணியம்**
(லீலா வெதுப்பகம், சங்கானை)
**செல்வி ஆகித்தியா சயந்தன்**
(யாழ்ப்பாணம்)
**செல்வன் ப. ஆரணன்**
(கொக்குவில்)
**செல்வி கு. சோதிநாயகி**
(யாழ்ப்பாணம்)
**செல்வன் தி. திருநாத்**
(சுதுமலை)
**திரு சிவஞானம் கிருபாகரன்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு மு. சரவணபவான்**
(கலைமகள் விலாஸ், சங்கானை)
**செல்வி நா. ஜெயராணி**
(இளை. அதிபர், சங்கானை)
**திரு இ. கோபாலசுந்தரம்**
(சதா வெதுப்பகம், உரும்பராய்)
**திரு J. பிரபாகரன் மாஸ்ரர்**
(நெல்லியடி)
**திரு இ. சிவசுப்பிரமணியம்**
(சுழிபுரம்)
**திரு இ. சொக்கலிங்கம்**
(இளைப்பாறிய ஆசிரியர், நாவற்குழி, கைதடி)
**திரு கு. கங்கைவேணியன்**
(உரிமையாளர், வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்)
**திரு ந. சத்தியரூபன்**
(சிறி நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)
**திரு க. சோமசேகரம்**
(மகாராணி புடவையகம், யாழ்ப்பாணம்)
**திரு ஐ. சிவகுமார்**
(சுதுமலை கிழக்கு, மானிப்பாய்)
**திருமதி வ. தபேந்திரன்**
(உப அஞ்சல் அதிபர், குப்பிளான்)
**திரு க. இராசநாயகம்**
(பிள்ளையார் ஸ்ரோர்ஸ், தொட்டிலடி, சங்கானை)
**திரு R.S. தனபாலன்**
(பாலன் மில், வட்டுக்கோட்டை)
**திரு சி. சச்சிதானந்தம்**
(சச்சியா இரும்பகம், வட்டுக்கோட்டை)
**உரிமையாளர்**
(V.M.K. நகைமாளிகை, யாழ்ப்பாணம்)
**திரு வே. பொன்னம்பலம்**
(பாக்கியரெத்தினம் இரும்பு விற்பனை நிலையம், சங்கானை)
**திரு க. நாகராசா**
(காங்கேசந்துறை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களே வாழ்க்கை

– திரு சி. நற்குணலிங்கம் அவர்கள் –

மனதில் தோன்றுகின்ற ஒரு கருத்து, அபிப்பிராயம் என்பன எண்ணம் எனலாம். எண்ணங்களைத் தொடர்ந்து உணர்வுகள் உருவாவதால் எண்ணங்களை உணர்வுகளின் விம்பங்கள் எனலாம். அல்லது உணர்வுகள், உணர்ச்சிகள் எண்ணங்களின் நிழல்கள் ஆகலாம். மனிதர்கள் தமது எண்ணங்களுக்கு கொடுக்கும் வடிவமே அவர்களது செயல் களாக பரிணமிக்கின்றன. எமது மூளையின் மேற்பகுதி மூளை மேற்பட்டை எனப்படும். அதில் முன்பக்கமாக அதாவது நெற்றிப் பக்கமாக இருக்கும் ஒரு சோணைதான் முன்நுதல் சோணை ஆகும். அதுதான் எண்ணங்களுக்குப் பொறுப்பான அதிபர் எனப்படுகிறது.

இளமைக் காலத்தில் நாம் நல்ல, தீய எண்ணங்களின் உரிமையாளர்களாகின்றோம். நல்ல எண்ணங்களின் கருவிகளாக செயற்பட்டால் தூய்மை அடைவோம். தீய எண்ணங் களின் கருவிகளாக செயற்பட்டால் மாசடைவோம். நாம் இருக்கும் நிலைமைக்கு நாம்தான் பொறுப்பாளிகள். நாம் எப்படி வாழவேண்டும் என எண்ணுகின்றோமோ அதை நம்மாலேயே உருவாக்கிக்கொள்ள முடியும். பலவிதமான எண்ணங்கள் பலவிதமான மனிதர்களை தோற்றுவிக்கின்றன. நல்ல எண்ணம் தோன்றும் நாள் நல்ல நாளாக அமையும்.

நமது எண்ணங்கள் நம்மைச் சுற்றி இருப்போரிடம் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் சக்தி படைத்தது. நம்மிடம் உயர்வான எண்ணம் இருந்தால் அது நமது குடும்பமும், நம்மைச் சுற்றி இருப்பவர்களையும் முன்னேற்றப் பாதையில் செலுத்தும். நம்மிடம் உள்ள பாதகமான எண்ணங்களால் நமது குடும்பமும் பாதிப்பு அடைவதுடன் சில சமயம் நமது சமுதாயத்தையும் பாதிப்படையச் செய்யும் நிலை தோன்றும். எண்ணங்கள் வலிமையானவை.

எண்ணம் எனும் செயல்வெளி அன்றாட வாழ்வில் நடத்தை வெளிப்பாடுகள் ஊடாக வெளிப்படுகிறது. ஒவ்வொரு நடத்தை வெளிப்பாடுகளின் பாற்பட்டதாகவும் எண்ணங்கள் இயங்குநிலை பெறுகிறது. இதயத்தில் எண்ணுகின்றவாறு இருக்கின்றான் மனிதன். இதன்படி பாமரர் முதற்கொண்டு படித்தோர் வரை எண்ணத்தின் செயல்நிலை இடம்பெறுகிறது. எமது எண்ணங்களின்படியே செயல் இடம்பெறுகிறது. மனிதன் எதை எண்ணுகின்றானோ அதற்குரிய பயன்தான் அவனுக்குக் கிட்டும். செயல்கள் அனைத்தின் விளைவுகளும் எண்ணத்தைப் பொறுத்தே அமைகின்றன. எமது எண்ணங்களை நாம் மறைத்தாலும் செயல் அவற்றை அம்பலப்படுத்திவிடும். எனவே எண்ணமானது எவ்விடத்திலும் துளிர்விட்டுக்கொண்டே இருக்கும். எங்கள் எண்ணம் உறுதியாய் இருந்தால் எத்தகைய சிரமங்களையும் முறியடிக்க முடியும். எனவே உயிருள்ளவரை எண்ணங்களை சரியாக வடிவமைத்து வாழவேண்டும். எண்ணம் என்பது ஒலி வடிவமாக, ஒரு சொல்லாக, சொற் தொடராக, ஏதேனும் மொழியாகவும் அமையலாம். எண்ணம் எமக்கு சாதகமாக, பாதகமாக

*ஒரு வருடம் என்பது 365 நாட்களைக் கொண்டதல்ல. 365 வாய்ப்புக்களைக் கொண்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கலாம். ஆனால் எம்மை அச்சுறுத்துவதாக இருக்க இடம் அளிக்கக்கூடாது. பயனில்லாத, ஆரோக்கியமற்ற எண்ணங்களுடன் உறவாட முனையக்கூடாது. எண்ணம் புத்திசாலித்தன மானதாக இருக்கவேண்டும். மனம் ஒரு குரங்கு. இயல்பில் எமது மனம் பல வகையான எண்ணங்களுக்குள் அலைமோதிக்கொண்டிருக்கும். கடந்தகால, நிகழ்கால, எதிர்காலம்பற்றி எண்ணிப் பார்க்கும். பல திட்டங்கள் தீட்டும். இந்தத் தாறுமாறான ஓட்டத்தை குறைக்க வேண்டும். எண்ணங்களை உருவாக்கும் சுயமும் அதை அவதானிக்கும் சுயமும் வேறானவை. எம்மை எப்போதும் அவதானிக்கும் சுயத்தை வலிமைப்படுத்துவது ஆரோக்கியமானதாகும் என அண்மைக்கால ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

"எண்ணிய முடிதல் வேண்டும். நல்லவை எண்ணல் வேண்டும்" என்று வேண்டினான் பாரதி. அப்படி ஒருமித்த மனதுடன் எண்ணும் எண்ணங்கள் யாவும் என்றும் வெற்றி தரும். "எண்ணம் மிக்கான்" என்று சேக்கிழார், சுந்தரமூர்த்தி நாயனாரைப்பற்றிக் கூறும்போது "அறிவில் வல்ல ஆரூரான்" என்றுதான் கருதுவார். அன்றாட வாழ்வில் நேர்மறையான செயல்களை நாம் கைக்கொள்கின்றபோது தடைகள் ஏற்படலாம். அத் தடைகளை எதிர் மறையான எண்ணங்கொண்டு கைக்கொள்ளக்கூடாது. அதிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும். "நீங்கள் பலவீனமானவர்கள் என்று எண்ணிக்கொண்டிருந்தால் நீங்கள் பலம் அற்றவர் களாகவே ஆகிவிடுவீர்கள். நீங்கள் பலம் பொருந்தியவர்கள் என்று எண்ணினால் பலமுடைய வர்களாக ஆகிவிடுவீர்கள்" இது சுவாமி விவேகானந்தரின் பொன்மொழியாகும்.

மனிதனது மனதில் தோன்றும் சகல எண்ணங்களையும் செயற்படுத்துவது எளிதன்று. எமது மனதில் தோன்றும் எண்ணங்களை வடிகட்டி எவை வாழ்வுக்கு உகந்தவை? எவை வாழ்வுக்கு பொருத்தமற்றவை? என்பதை நன்கு சிந்தித்து, விளங்கி வாழ்வுக்குப் பொருத்த மான சிறந்த எண்ணங்களை மட்டும் ஏற்று அதன் வழி வாழ்ந்தால் வாழ்வு சிறக்கும். மனம் திறந்து பேசுவது, நேர்மையாக இருப்பது, அன்பாகப் பழகுவது போன்ற விழுமியங் களோடு முரண்படாமல் எமது எண்ணங்களை வடிவமைத்துக்கொண்டால் வாழ்வு ஒளிரும்.

உலகில் மனித எண்ணங்களின் ஓட்டங்கள் பலவாறாக விரிந்து செல்கின்றன. சில மனிதர்கள் தம்மைப் பிறருடன் ஒப்புநோக்கும் எண்ணம் கொண்டவர்கள். இது ஒரு தவறான எண்ணமாகும். இதனால் நமக்குள் தாழ்வு மனப்பான்மை தோன்றி எம்மை பலவீனமாக்கி பிறரிடமிருந்து பிரித்தும்விடக்கூடும். அத்துடன் ஒப்பீடு செய்பவர்களின் மனம் பாதிக்கப்படவும் கூடும். ஒப்பீடு என்பது நம்மோடு தொடர்புடையதாக அமையின், அது நம் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும். மற்றவர்களுடன் ஒப்பிடும் தேவையற்ற ஒப்பீட்டு எண்ணத்தை மட்டும் தவிர்த்தல் நல்லது. முதலில் ஒருவன் தன்னுடைய எண்ணங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். பின் அவன் தனது எண்ணங்கள்மீது முழுமையான விழிப்புணர் வுடன் இருக்கவேண்டும். விழிப்புணர்வு என்பது அறிவை விழிப்புடன் இருக்கச் செய்வதாகும். ஒரு குழந்தையின் பிறப்பிலிருந்து ஐந்து வயது வரையான காலப்பகுதியில், எவ்வித எண்ணங் களின் வெளிப்பாடு கண்டு குழந்தைகள் ஈர்ப்பினைப் பெறுகின்றனரோ அதன்பாற்பட்ட விளைதிறனே அந்தக் குழந்தையில் வெளிப்படும். சில குழந்தைகளை நாம் அவதானிக்கின்ற போது மிகச் சிறிய வயதிலேயே மற்றவர்களுடன் மரியாதையாகவும், அன்பும் கொள்வதைக்

*வாழ்க்கையில் ஒருநாள் எல்லாம் மாறும். ஆனால் ஒரே நாளில் எதுவுமே மாறாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். இதற்கான காரணம், அந்தக் குழந்தையின் பெற்றோர், உறவினர், சுற்றத்தாரின் நேர்மறையான எண்ணங்களும், வெளிப்பாடுகளும் ஆகும். அதேவேளை, அவர்களிடம் எதிர்மாறான எண்ணங்கள் காணப்படின் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தி விடும். “வெறும் உடல் வளர்ச்சி மனிதனை உருவாக்குவதில்லை. அறிவுபூர்வமான எண்ணங்கள்தான் மனிதனை உருவாக்குகின்றன” என்றார் ஐசக்டைலர்.

இந்த உலகில் வாழும் மனிதர்களில் பலர் சுயநல எண்ணத்துடன் வாழ்கின்றனர். சுயநல எண்ணத்தின் செயற்பாடுகள் பிறருக்கு பயன் கிடைக்கக்கூடாது என்கிற ஒரே எண்ணத்தைக் கொண்டவையாகும். தம்முடைய செயலால் பிறர் எந்த வழியிலும் நன்மை அடைந்துவிடக்கூடாது என்று எண்ணுவதுடன் அதற்காக தவறான வழிகளையும் கையாளு கின்றனர். இந்தத் தீய எண்ணத்தைத் தவிர்ப்போமாயின் சமூகத்தில் உயர்ந்தவர்களாக மதிக்கப்படுவோம்.

மனித குலத்தின் மிகப்பெரிய கண்டுபிடிப்புக்களில், நம் எண்ணத்தை மாற்றினால் நம் வாழ்க்கையை மாற்றலாம் என்பது மிக முக்கியமானது. மனித இனம் ஒன்றை நினைக்க முடிந்தால் அதை சாதிக்க முடியும் என்பதுதான் மனிதகுல வரலாறு. விமானத் தைப் பற்களால் இழுப்பது, கண்ணாடித் துண்டுகளை வாயில் போட்டுத் தின்பது, பார்வை இழந்தவர்கள் மரதன் ஓட்டம் ஓடுவது, மலையேறுவது இவை யாவும் எண்ணம் செயலாகிய சாதனைகள்தான். எண்ணம்தான் வாழ்க்கை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கவிஞர் கண்ணதாசன் தனது பாடலில் பூமியில் இருப்பதும் வானத்தில் பறப்பதும் அவரவர் எண்ணங்களே என்கிறார். வாழ்வை நாம் விரும்பும் வண்ணம் அமைத்துக்கொள்ள எண்ணம் தான் முதற்படியாகும். வாழ்வின் தாற்பரியமே நல்லெண்ணம் என்ற ஒரே சொல்லில் அடங்கி இருக்கிறது. அன்றில் இருந்து இன்றுவரை எல்லா மதங்களும் உபதேசிக்கும் வேத நூல்களின் சாரத்தைப் பிழிந்து எடுத்தோமானால் மிஞ்சும் ஒரே வார்த்தை அன்பு என்ற ஒன்றுதான். அன்பின் மாற்றுப்பெயர்தான் நல்லெண்ணம். அன்பின் தொடக்க இடம்தான் நல்லெண்ணம். எனவே நம் மனதில் நல்லெண்ணத்தை வளர்க்க வேண்டும். மனிதனின் எண்ணங்களின் உயர்வுக்கு ஏற்ப அவனது வாழ்வின் உச்சமும் அமைகிறது.

எண்ணங்களே வாழ்வின் அடிப்படை. தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்று எண்ணுபவனின் எதிர்காலம் ஒளிமயமாக மாறும். அவனிடம் அனைத்தையும் வெற்றிகொள்ளக் கூடிய தன்மைகள் இருக்கும். எமது வெற்றிக்கான பாதை எப்போதும் சமமானதாகவே இருக்கும் எனச் சொல்லமுடியாது. மேடு பள்ளங்களுடன்தான் இருக்கும். அதைச் சந்தித்துக் கொள்ளும் மனப்பக்குவமும், சுயகட்டுப்பாடும் எமக்கு இருக்க வேண்டும். இறுதியில் எல்லாம் சரியாகிவிடும் என்ற எண்ணம் இருந்தால் மட்டுமே வெற்றி எமது கையில்.

உங்களால் உங்களை நிச்சயமாக மாற்றமுடியும். இந்த உலகத்தில் உங்களால் மாற்றக்கூடிய ஒரே உயிர் நீங்கள் மட்டுமே என்ற எண்ணத்தை மனதில்கொண்டு தீய எண்ணங்களை மனதில் இருந்து அகற்றி நல்லெண்ணங்களை மனதில் நிறுத்துவதன்மூலம் வாழ்வில் கடின உழைப்பு, விடாமுயற்சி, திட்டமிடல் என்பவற்றை இலகுவாகப் பின்பற்றி பலத்தை அதிகப்படுத்தி எந்தவித மனக்கவலையும் இன்றி மகிழ்ச்சியுடன் வாழலாம். எண்ணங்களே வாழ்க்கை. எனவே உங்கள் எண்ணம் உயர்ந்ததாக இருக்கட்டும்.

*தோல்விக்குப் பயந்து முயற்சிகூட செய்யாமல் இருப்பது மிகப்பெரிய தோல்வி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதமும் தெய்வீகமும்

– திரு முருகுப்பிள்ளை செல்லத்தம்பி அவர்கள் –

என்னை யென்னா லெனக்கறி வித்தவன்
தென்னை மாப்பனை சேரும்நல் லூருளான்
அன்னை தன்னிலும் மேம்படு மன்புளான்
தன்னை நாடினன் தந்தன னோர்வரம்.

இயற்கையின் தாபத்தினால் இளையோடிய கோலங்களில் பரிணாம பாங்கினால் பல்லுயிர்கள் தோற்றம் பெற்றன. இயற்கையே இறைவன் என்றும் அவனே பரமாத்மா என்றும் கொள்ளும்போது இயற்கையிலேயே உருவான உயிர் இனங்கள் யாவும் ஜீவாத் மாக்கள் ஆகும். பரமாத்மாவின் படைப்பிலே பக்குவம் மேலோங்கவே ஜீவாத்மாக்களின் விருத்தியிலே பல வளங்களும் நிறைவாகக் கொள்ளும் பகுத்தறிவு கொண்ட மனிதவர்க்கமும் உருவானது. பரமாத்மாவின் நோக்கம் நிறைவேறவே ஜீவாத்மாக்களின் நிர்ணயம் பேணப்பட வேண்டும். இதற்கு படைத்தவனின் படியளப்பு மிகவும் அவசியமாகும். இதுதான் எப்படி உருவாக வேண்டும்.

ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான் என்பது உறுதியாகும்போது அகிலம் என்றதொன்று இல்லாது போனாலும் ஆண்டவனே ஆண்டவன்தான். ஆனால் அகிலம் என்றதொன்று இல்லாதபோது ஆண்டவன் என்றதொன்று எதற்காக அதற்காகவே அகிலம் உருவானது.

மேற்படி இந்த மனிதவர்க்கமானது தன்னைத்தானே வளப்படுத்திக்கொள்வதற்கு ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான் என்பதோடு அவன் அருளைப் பெற்றாகவே வேண்டும். அதுதான் எப்படி அதற்குத்தான் பாடலொன்று உருவாகியுள்ளது. அப்பாடல்தான் “இறை வனிடம் கேட்டுப்பாருங்கள் அவன் இல்லை என்று சொல்லுவதில்லை” என்பது. தெய்வம் என்பது என்ன? அது எங்கே இருக்கின்றது? அதன் இயல்புகள்தான் என்ன? உண்மை, இயற்கை, இறைமை இவையே தெய்வம். இது உருவம் இல்லாதது. எந்தப் பாகுபாடோ, சூதுவாதோ, வஞ்சனையோ துளிகூட இல்லாதது. அதற்கேற்ப ஜீவாத்மாக்களும் தூய்மையான வாழ்வை முன்னெடுக்க வேண்டும் என்பதே இறைவனின் பேரவா ஆகும். உண்மையைப் பேசி உத்தமனாக வாழ்ந்து தன் உயிர்போல் மன்னுயிரையும் பேணி தயாள சிந்தையோடு தரணியில் வாழ்ந்து அதன் பயனாக முத்தியடைய வேண்டும் என்பதே இறைவனின் வேற்கைக் குணமாகும். முடிவில்லாத ஆற்றலைக் கொண்ட இறைவன் மனிதன் மனிதாபிமானம் நிறையப் பெற்றவனாய் வாழ வைப்பதற்கு பகுத்தறிவின் பயன்பாட்டை உணர்த்தி வைத்தான். இதனால் மனிதாபிமானம் மேலுற்ற பகுத்தறிவாளன் பக்குவம் அடைந்து உயிருக்கு மேலான

*நம்மால் நேற்றை சரிசெய்ய முடியாது. ஆனால் நாளையை உருவாக்க முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்க நெறியில் உயர்ந்து நின்றான். இதுவே இறைவனின் படி அளப்பும் பங்களிப்புமாக உதவப்பெற்றன. இதன் அடிப்படையில் ஆங்காங்கே பற்பல ஆன்மீகவாதிகளும் அருளாளர்களும் அறிவாளர்களும் உதயம் கொண்டனர். இவர்களின் உதயம் மானிடவர்க்கம் மண்ணில் நல்ல வண்ணம் வாழும் மகத்தான வாய்ப்பை தன் அகத்தே கொண்டுள்ளது. இத்தகைய நிலையில் மனிதன் அகத் தூய்மையாலும் புறத் தூய்மையாலும் உந்தப்பட்டு மனிதாபிமான நிலையில் மேலோங்கும் கல்வி கலாசாரத்துடன் கூடிய ஒழுக்க விழுமியங்களாகிய அன்பு, அறம், பண்பு, பாசம், கடமை, கட்டுப்பாடு, பொறுமை முதலிய புண்ணிய குணங்களில் பொலிவுபெற்று விளங்கினான்.

அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தை உருவாக்குவதிலும் அதிக கவனம் செலுத்துவதிலும் ஆர்வம் கொண்டான். கற்பது கல்வி மனத்தில் உள்ள அறியாமையை நீக்குவது கல்வி. அது உண்மைதான் ஆனால் பெரும்பாலானோர் கல்வியை நன்றாக கற்கிறார்கள். அறிவை வளர்க்கிறார்கள். அந்த அறிவை தீய பழக்கங்களில் பயன்படுத்த செலவிடுகிறார்கள். தீமையை வளர்த்துக்கொள்கிறார்கள். "கற்றதனால் ஆய பயன் என் கொள்வார் எனின் நற்றார் தொழார் எனின்" என்று கேட்கும் வள்ளுவர் "கற்கக் கசடறக் கற்றபின் நிற்க அதற்குத் தக" என்று வலியுறுத்துகின்றான். எனவே கசடறக் கற்ற கல்வியானது கடும் தாபம் கொண்டு சுயநல வேற்கையால் உலகத்தை உய்விக்கும் தெய்வீகம் எவ்வளவு தூரம் மளுங்கடிக்கப்படுகிறது என்பது புலனாகிறது. இதில் முத்திரை குத்தப்பட்ட மனிதாபிமானம் எங்கே? அந்த மனிதாபிமானத்தால் ஏற்படும் மாண்புமிகு தெய்வீகம் எங்கே இதையே மனிதன் எல்லாம் தெரிந்துகொண்டான் வாழும் வகை புரிந்துகொண்டான். கொல்லும் பாம்பின் கொடும் விஷத்தை சொல்லிக் கொடுக்கத் தெரிந்துகொண்டான். குள்ளநரிபோல் தந்திரத்தால் குடியைக் கெடுக்க புரிந்துகொண்டான். வெள்ளிப் பணத்தால் மற்றவரை விலைக்கு வாங்கத் தெரிந்துகொண்டான். மனிதனாக வாழ மட்டும் மனிதனுக்குத் தெரியவில்லை. இதையே கவிஞன் வழிமொழிந்தான்.

அதிகம் படித்தவர்கள் என்று பட்டம் பதவி கௌரவம் என்பவற்றிற்கு ஆசைப்பட்டு ஈற்றில் எல்லாவற்றிற்கும் சேதம் விளைவித்து மக்கள் ஆணைக்கும் உட்படாது, விரட்டி அடிக்கப்படுகிறார்கள். இவர்களால் உலகில் சாதிக்கப்படுவதொன்றும் இல்லை. இவர்களின் கல்வி சாதனைகளுக்கோ சாதுரியத்திற்கோ எவரும் துணைபோவதும் இல்லை. துணை போனதும் இல்லை. என்றும் மக்கள் மத்தியில் களங்கத்தையே ஏற்றுமதி செய்கிறது. எனவே ஒழுக்கம் இல்லாக் கல்வி ஒன்றுக்கும் உதவாது. ஒழுக்கம் உயிரினும் மேலானது. ஒழுக்கமும் தூய சம வாழ்வும் கொண்டவர்கள் உலகாளும் தன்மைக்கு ஏற்புடையவர்கள். இவர்கள் தங்களைவிட வேறு தக்காரும் மிக்காரும் இல்லாதவர்கள். இதையே "கல்வி இல்லாக் கன்றுகளும் தாயை அழைக்கும் காட்டுள் கவரிமானும் பெண்களைப்போல் மானம் காக்கும் பள்ளி சென்று இவைகள் எல்லாம் படித்ததில்லையே என்றும் பாசத்தோடும் நேசத்தோடும் வாழவில்லையா என்றும் படித்ததினால் அறிவு பெற்றார் ஆயிரம் உண்டு பாடம் படிக்காத மேதைகளும் பாரில் உண்டு" என்று பாடி வைத்தான் கவிஞன். ஒருவன்

*கவலைகள் ஒருபோதும் வெற்றியைத் தருவதில்லை. முயற்சிகளே தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பிறப்பின் நோக்கத்தை நன்றாகவே நிவர்த்தி செய்யும் வகையில் அன்றாட வாழ்க்கையின் கடைப்பிடிக்கும் நன்நெறிகள் பழக்கவழக்கங்கள் பண்பாடுகளினால் அதி உயர்ந்த அர்த்தம். மொழிந்த மனிதாபிமானம் நிறைந்த வாழ்வை பெற்றுவிடுகின்றான். இவனையே

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்று கூறியுள்ளார் பொய்யாமொழிப் புலவர். இன்னும் இதற்கு மேலும் மேலும் அர்ப்பணிப்பு செலுத்தி முற்றுப்புள்ளி வைப்பதுபோல் தெய்வீக தாபத்தை வெளிக்காட்டும் முகமாக உலகத்தையே உருவாக்கி உருண்டோட வைக்கும் மாதர் குலக் கொழுந்தின் மங்காத குணம் படைத்த ஒரு மாணிக்கத்தையே மேற்கோள் காட்டி உவமையாக வைத்து அவளின் தெய்வீக ஒழுக்கத்தை உலகறியச் செய்கின்றான். அதுவே

"தெய்வம் தொழா அள் கொழுநற் றெழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" என்பது.

## அலைகடல் அருகே அருட்பே ரொளியாய்

வானம் பார்ப்பாய் வெளி பார்ப்பாய்
வளரும் பிஞ்சு முகம் பார்ப்பாய்
தேனும் திணையும் கொண்டங்கு
கிளறி நிற்கும் கரம் பார்ப்பாய்.

ஊனம் என்று யாருமே
உலகில் இல்லை நீ பார்ப்பாய்
கானம் பாடும் குயில் தன்னை
ஊனம் பார்க்க யாருண்டு.

வேரும் உண்டு கிளையும் உண்டு
பூக்கள் பூக்க நாதியில்லை
நீரும் உண்டு நிலமும் உண்டு
பயிர் வளர்க்க யாருமில்லை.

மொழியும் உண்டு கலையும் உண்டு
நினைத்துப் பார்க்க யாருண்டு
விழியும் உண்டு செவியும் உண்டு
கேட்டு ரசிக்க யாருமில்லை.

தெய்வம் உண்டு கோவில் உண்டு
கீதம் பாட யாருண்டு
தெய்வயானை உடனிருக்கும்
வள்ளி முருகன் துணையுண்டு.

சும்மா யிருந்தாய் சொல்லற் றமர்ந்தாய்
ஐயா நின்முகம் அருள் பொழிமுழுமதி
திருவடி வைத்தோம் தேவாதி தேவா
குருவடிவாகியே குவலயம் காப்பாய்.

அலைகடல் அருகே அருட்பேரொளியாய்
வேதப் பொருள் நீ விளம்பிய தெல்லாம்
அலையாய் கலையாய் தானெழுந்துவந்து
பெய் தெமை வருத்தும் பிணியைப் போக்குவாய்.

-பொ. பாலேஸ்வரன் -

*நீ சுமக்கின்ற நம்பிக்கை நீ கீழே விழும்போது உன்னைச் சுமக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

## அத்தியாயம் - 11

(தொடர்ச்சி...

## தியான யோகம்

– திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

### 07) நடுவழி

பொன்மயமான நடுவழியே ஒழுக்கமனப்பான்மையின் சாரமாகக் கருதப்பெறுகிறது. பொன்மயமான நடுவழி என்பது மயிரிழைபோல மிக நுண்மையானது. அது ஓர் உணர முடியாத உண்மையாகும். ஒத்திசைவான முறையில் காரணிகளை ஒழுங்கமைப்பது புலன்கருவிகளுக்குத் தோன்றாத, உணரமுடியாத ஓர் உண்மையாகும். ஆனால் நாம் முயற்சி யோடு நமது மனங்களில் அதனை ஓரளவுக்குக் கருதிக்கொள்ள வேண்டும். அதிகம் உண்பவனுக்கும், சற்றும் உண்ணாதவனுக்கும், அதிகம் நித்திரை செய்பவனுக்கும், சிறி தேனும் நித்திரை செய்யாதவனுக்கும், அதிகம் வேலை செய்பவனுக்கும், சிறிதளவேனும் வேலை செய்யாதவனுக்கும், அதிகம் விளையாடுபவனுக்கும், சற்றும் விளையாடாத வனுக்கும் யோகம் உரியதன்று. இவை பொதுவான கருத்துக்களே. எனினும் இவை முக்கியமான விடயங்களாகும்.

### 08) இயல்புநிலை

பெரிய யோகிகள் மிகச் சாதாரண மனிதர்களே. அவர்கள் தங்களைப் பகட்டானவர் களாகக் காட்டிக்கொள்ளும் உலகவயப்பட்ட சந்நியாசிகளைப்போல விந்தையான தோற்றம் உள்ளவர்கள் அல்லர். யோகப் பயிற்சியில் எவ்விதமான பகட்டும் கிடையாது. அது ஒருவர் தன்னைச் சமூகச் சூழலில் காட்டிக்கொள்ளும் ஓர் அசாதாரண வாழ்க்கையும் அன்று. நாம் உண்மையான யோகிகளாக இருப்போமாயின் ஒருபோதும் ஒரு யோகிபோலக் காட்டிக்கொள்ளமாட்டோம். நாம் ஏன் அவ்வாறு காட்டிக்கொள்ள வேண்டும்? முகபாவங்கள் எவற்றையும் நாம் வைத்திருக்கவேண்டிய தேவையில்லை. வாழ்க்கையின் முழுமையைப் புரிந்துகொள்வதில் இருந்து வரும் இயல்பான நிலையே சாதாரண நடத்தையாகும். அதுவே அடிப்படையில் யோகமாகும்.

### 09) ஆன்ம நிறைவு

எல்லாவற்றையும் பொறுத்து ஆரோக்கியமான முறையில் மனதின் இத் தயார் நிலையோடு ஒருவர் உண்மையின் பல்வேறு மட்டங்கள் உண்டு என்பதை உணர்ந்த

*திட்டங்களில் வெற்றி என்பது இல்லை. திட்டமிடலிலே வெற்றி தங்கியுள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னரே தியானத்திற்காக அமரவேண்டும். அந்தப் பல்வேறு மட்டங்களில் இருந்து தெரிவு செய்யவேண்டிய குறித்த ஒரு மட்டமே இஷ்ட தேவதை ஆகும். முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் நாம் இஷ்டதேவதை பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். அந்த இஷ்டதேவதையில் உருகி அன் போடும் மேலான எண்ணத்தோடும் ஆன்ம நிறைவில் மூழ்கி இருப்பது அதுபற்றிய எமது யோகமாகும். மனம் பெருமளவு விரும்பும் ஒன்றினது இருப்பின்போது முழுமையாக நிலைத்து நிற்கிறது. எமது உடமையாக நாம் உயர்வாய் மதிக்கும் ஒன்றின் இருப்பினால் மூழ்க ஓர் ஆனந்தநிலை வந்தமைபவர்களாக இருப்போம். ஏனெனில், அத் தேவையே நாம் விரும்புவதும், விரும்பும் ஓரேயொரு விடயமும் ஆகும். பின்பு அவ்வேளையில் வேறெதனையும் சிந்திப்பதற்கு மனதிற்குச் சாத்தியமில்லாது போகும்.

## 10) இலட்சியம்

நாம் இந்த உலகில் விரும்பும் ஏதாவது ஒரு விடயம் உண்டா? அப்பொருள் அதன் இயல்பினால் வேறெதனையும் நாம் சிந்திக்கமுடியாததா? தியான நுண்முறைக்குள் தீட்சை என அழைக்கப்படுவதன் முக்கியம் இங்கேயே உள்ளது. தியானத்தின் இலட்சியத்தை அல்லது குறிக்கோளைத் தெரிவு செய்வது மிக முக்கியமானது. அது ஒரு ஆசிரியரது அல்லது குருவினது வழிகாட்டலின்படி மேற்கொள்ளப்பட வேண்டும். எம்மில் பலரும் எமது இலட்சியத்தைத் தெரிவுசெய்ய ஆற்றல் இல்லாதவர்களாக இருக்கின்றோம். இன்று ஒரு இலட்சியம் நல்லதென்றும், நாளை வேறொன்று நல்லதென்றும் ஒன்றில் இருந்து வேறொன்றுக்கு மாறிக்கொண்டு இருக்கின்றோம்.

## 11) குருவும் குறிக்கோளும்

ஆரம்பக் கட்டங்களில் உள்ளவர்களுக்கு, உளவிருத்தியில் சில கட்டங்களைத் தாண்டிய மனம் உள்ளவர் ஒரு நல்ல வழிகாட்டியாக அமைவார். அவ்வாறான மனமுள்ள ஒருவரே குரு அல்லது ஆசான் ஆவர். மற்றவர்கள் தாண்டாத சில கட்டங்களை ஒருவர் தாண்டி இருப்பாராயின் அவர் தியானப் பாதையில் எதிர்பார்க்கக்கூடிய விடயங்கள் எவை என்று மற்றவர்களுக்கு வழிகாட்டிக் கூறமுடியும். பூரண கவனத்தை ஈடுபடுத்தக்கூடிய குறித்த இலட்சியம் அல்லது குறிக்கோளுக்கு மனதை அறிமுகப்படுத்துவது யோகத்தில் தீட்சையாகும். அதன் விளைவாக அதன் இலட்சியம் சாதகனின் ஓரேயொரு உண்மையாக வந்து அமைகிறது. மனம் தனக்குத்தேவை என எதிர்பார்க்கும் எல்லாவற்றில் இருந்தும் விலகித் தன்னில் மட்டுமே பூரணமாகத் தாரணை செய்யமுடியும். எமது தேவைகள் ஒவ் வொன்றையும் திருப்தி செய்யப்போகும் ஒன்று எமக்கு உறுதியாயின் வேறெதனையும் சிந்திக்கவேண்டிய தேவை எமக்கு இருக்காது. ஆனால் மனதில் ஒரு சந்தேகம் எஞ்சி இருக்கிறது. அதுமட்டும்தான் வாழ்க்கையில் வேண்டப்படும் ஓரேயொரு விடயம் அன்று என்பதுதான் அச் சந்தேகம். அதேயளவு முக்கியம் வாய்ந்த வேறு விடயங்களும் இருக் கின்றன. குறைந்தபட்சம் ஏதோ ஒரு வகையில் அவையும் அத்தியாவசியம் ஆனவையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் தகுந்த முறையில் தனது இலட்சியத்தைத் தெரிவுசெய்து கொள்ளவில்லை என்பதை அது வேறு வழியில் சொல்வதாகவே அமைகிறது. தியான இலக்காகத் தெரிவு செய்த அந்தப் புகழ்பெற்ற குறிக்கோளில் நமது நம்பிக்கை விசுவாசம் இருக்காது.

## 12) தியானப்பொருள்

தியானப்பொருளான இஷ்ட தெய்வமே குறித்த வடிவிலுள்ள கடவுள் அதிகாரமாகும். ஒருவர் கடவுளிடத்திலே நம்பிக்கை இல்லாதவராயின் அவர் நம்புவதற்காக எதிர்பார்க்கக் கூடியது வேறு என்னதான் இருக்கின்றது? தியானப் பொருளின் தெரிவிலேயே ஓர் அடிப்படைத் தவறு இருக்கக்கூடும். அதனால் மனம் தெரிவு செய்த அப்பொருளில் நிலைத்து நிற்காது அலைகிறது. அந்த மனம் தனக்குத் தேவையானவற்றைத் தேடி ஒரு பொருளிலிருந்து வேறொரு பொருளுக்கு மாறி மாறி அலைகிறது. உண்மையில் தனக்குத் தேவை என்ன என்பதை மனம் அறிவதில்லை. ஒருவர் தியானத்துக்காக அமருமுன் தியான உளவியலை நன்கு அறிந்திருக்க வேண்டும். கடவுள் ஒவ்வொரு பொருளிலும் பிரசன்னமாக இருக்கிறார். கடவுள் எங்கும் உள்ளவர். ஒருவர் தியானத்திற்குப் பொருத்தமான எந்த ஒரு வடிவத் தையோ, கருத்தையோ தெரிவு செய்யலாம். ஏனெனில் அவற்றிலும் கடவுள் இருக்கிறார் அல்லவா! கோட்பாட்டு ரீதியாகக் கடவுள் எல்லாவற்றிலும் இருக்கிறார் என்பது அங்கு முக்கியமில்லை. தெரிவுசெய்த பொருளில் கடவுளைத் தனது இதயத்தில் உணர்ந்து அவரை அதில் ஏற்றுக்கொள்வதே முக்கியமாகும். இதனால் அதற்காக அதனைப் புரிந்து கொள்வது அவசியமாகும். கடவுளின் எங்குமுள்ள தன்மை எதனையும் விலக்கவில்லை. எனவே நாம் தியானத்துக்குத் தெரிவு செய்யும் பொருள் எமது வாழ்வில் மிகச் சிறந்ததாகக் கருதக்கூடியதாக இருக்கவேண்டும். அத் தகுதி உள்ளதாயின் எப்பொருளும் தியானத்துக்குப் பொருத்தமானதே.

## 13) மனதைக் கடத்தல்

தியானத்தின் நோக்கம் மனம் தான் கட்டிய கோட்டையிலிருந்து தன்னை வெளியேற்றிக்கொள்வதே. இந்த உடம்பு என்ற சிறைச்சாலையில் மனம் தன்னை மிகப் பாதுகாப்பாக வைத்திருக்கின்றது. அது உலகில் உள்ள குறித்த விடயங்களில் அதிக பற்றுள்ளதாக இருக்கின்றது. அத்துடன் மனதின் இருப்பு பலவிதமான தோற்றப்பாடுகளின் ஆசைகளில் ஒரு தனி எண்ணமாக இருக்கிறது. ஒரு தனி அலகாக மனதினது இருப்பை இல்லாமல் செய்வது என்பது அந்தத் தனிப்பொருள்களைச் சிந்திப்பதில் இருந்து நீங்குவ தாகும். வேறெதனையும் எண்ணாது ஒரு குறித்த பொருளையே மனம் தாரணை செய்வது மனதைத் தூளாக்கி மனக்குமிழியை உடைத்துவிடும். மனதில் ஒரு கருத்தை மட்டும் தொடர்ந்து வைத்திருப்பது மனம் தன்னையே கடக்கச் செய்யும். அதனால் ஒருவர் கனவில் இருந்து புதிய விழிப்புணர்வுக்கு வருவதுபோல உணர்கிறார். தோற்றப்பாடுகளில் இருந்து மெய்மைக்கு மனம் எழுவது கனவிலிருந்து மனம் நனவுக்கு எழுவது போன்றதாகும்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குள் என்னைக் காட்டிய மகான்

– அ. நளினாசினி அவர்கள் –

ஏதோ ஒரு தேடல் வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு மனிதனுக்கும் இருந்துகொண்டே இருக்கும். செல்வத்திற்கான தேடல், புகழிற்கான தேடல், அங்கீகாரத்திற்கான தேடல் என பல வகைகளில் எம் தேடல்கள் தினமும் விரிவடைந்துகொண்டே செல்கின்றன. ஏன் இந்த தேடல்கள் எம்மிடம் தோன்றுகின்றன என ஆராயின் இவற்றின் பின்னால் ஏதோ ஒரு இன்பம் கிடைப்பதாக ஒவ்வொருவரும் உணர்கின்றனர். ஏன் மனிதர்கள் இன்பத்தைத் தேடுகிறார்கள்? ஏனெனில் இன்பம் என்பது ஜீவன்களின் சுபாவம். உண்மையில் இவை எல்லாவற்றிற்கும் பின்னணியில் இருப்பது பேரானந்தத்தை அடைவதற்கான தேடலின் சிறு முனைப்பே. ஆனால் மனிதன் அதற்கான வழியைப் புற உலகில், பொருள் வழியில், புகழ் வழியில், போதை வழியில் சாதனைகளைப் புரிகிறேன் என்ற நினைப்பில் தன்னை இந்த உலகிற்கு நிரூபிப்பதன் வழியில் தேடிக்கொண்டிருக்கிறான். அத் தேடுதலுக்கான பாதை மெய்ஞானத்தின் ஊடாக அகவழியில் மட்டுமே இருக்கிறது என்பதை காணத் தவறிவிடுகிறான். எது நிலையானது, எது அழிவில்லாத வஸ்து என்று சத்தியத்தைத் தேடி எம் தேடல்கள் உருமாற்றம்பெறும்போது "நாம் யார்" என்ற தெளிவை பெறும்போது துன்பமில்லா இன்பப் பெருவாழ்விற்கான சத்திய தரிசனத்தை பெறுகிறோம். நான் யார் என்று அறிகையில் உள்ளே பேராசானாக பரிபூரணமாக நாம் இருக்கும் நிலைகண்டு புற உலகின் நாம் தேடும் வாழ்க்கை பொருளற்ற ஒன்று என்ற தெளிவு பிறக்கிறது. இந்த தெளிவானது நித்திய வஸ்துவாய் உள்ளது எதுவோ அதோடு எம்மை இணைத்து பேரின்ப நிலையை அருள்கிறது.

சகல ஜீவன்களும் தன்னிடத்திலேயே பரமபிரியமாய் இருப்பதாலும் (எம்மை நாமே நேசிப்பதாலும்) பிரியத்திற்கு சுகமே காரணமாய் இருப்பதாலும், தன் சுபாவமான அச்சுகத்தை அடைவதற்கு தன்னைத் தன்னால் அறிதல் அவசியமாதலாலும், நான் யார் எனும் ஞான விசாரமே (ஆத்மவிசாரம்) இதற்கு மூலமாய் அமைவதாலும், ஆத்மவிசாரத்தை ஜீவன் களிடையே விதைத்த ஞானபிதா பகவான் ரமணமகரிஷியைப் பற்றிச் சற்று அறிந்து கொள்வோம்.

## யார் இந்த ரமண மகரிஷி

1879 மார்கழி 30 புனர்பூச நட்சத்திரத்தில் அவதரித்தார். 16 வயதுவரை சாதாரண சிறுவனாகவே வளர்ந்த வேங்கடரமணனுக்கு (ரமணருக்கு) ஒருநாள் மரணபயம் ஏற்பட்டு அதைப்பற்றிய கேள்வி எழுகிறது. மரணம் வந்தால் என்ன நடக்கும் என்ற ஒத்திகையை செய்து பார்த்தார். கண்களை மூடி கற்பனை செய்தார். திடீரென உடலில் ஏதேதோ மாற்றங்கள் நிகழ்வதை அறிந்தார். அசைவற்று கிடந்தார். ஏதோ ஒரு மாற்றம் அவர் உள்ளூர நிகழ்ந்துவிட்டது. சில மணிநேரங்களில் கண் விழித்தார். புதிய பிறவியாக

*வெற்றி அடைவதற்கு முயற்சித்தால் மட்டும் போதாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ந்திருந்தார். கிட்டிய அவ்வனுபவம் முன்னெப்பொழுதும் இல்லாததாக இருந்ததால் அது எவ்வகையானது என்று அப் பதினாறு வயது சிறுவனுக்குப் புரியவில்லை. இதன் பிற்பாடு சில தினங்கள் கழித்து அவர் வீட்டிற்கு ஒரு யாத்திரீக விருந்தினர் வந்திருந்தார். அவர் தான் திருவண்ணாமலையில் இருந்து வருவதாகவும், அண்ணாமலையானின் பிரசாதம் கொண்டுவந்திருப்பதாகவும் கூறினார். சிறுவன் ரமணருக்கோ உள்ளே மூண்டிருந்த சிறு ஆன்மபொறியானது திருவண்ணாமலை எனும் பெயரைக் கேட்டவுடனேயே சுழன்றுழல தொடங்கிவிட்டது. அந்த விருந்தினரிடம் திருவண்ணாமலையா? அது எங்கிருக்கிறது? என்று புதுமையாக பெரும் ஆர்வத்துடன் வினாவினார். அவர் தனக்கும் திருவண்ணாமலைக்கும் ஏதோ தொடர்பிருப்பதாக உணர்ந்தார். வீட்டில் "என் அப்பனைத் தேடிப் போகிறேன்" என்று கடிதமொன்றை எழுதி வைத்துவிட்டு புறப்பட்டார். இடம் தெரியாது, அச் சிறுவன் 3 நாட்களாக புகையிரதத்திலும் கால் நடையாகவும் திசைமாறிச் சென்றும், அங்கும் இங்குமாய் அலைந்து திரிந்து ஒரு வழியாக திருவண்ணாமலையை அடைந்தார். வாழ்வின் சத்தியத்தைத் தேடிய அவர் பயணம் பூரணமடைகையில் திருவண்ணாமலையை அடைந்ததும் தன் வேட்டியைக் கிழித்து கௌபீனம் தரித்து (கோவணம்) திருவண்ணாமலையானின் கருவறை நோக்கி நடக்கலானார். அச் சிறுவன் கருவறை நுழைகையில் யாரும் தடுக்கவுமில்லை. நேராக அண்ணாமலையானின் முன்னிருந்து தியானித்தார். பின்னர் தனிமையை விரும்பி பாதாள லிங்கத்தினுள் சென்று தியானித்தார்.

பாதாள லிங்கத்தினுள் எவ்வளவு காலம் இருந்தார் என்று யாருக்கும் தெரியாது. அச் சிறுவன் தன் உடலை மறந்தான். தான் யார் என்பதை மறந்தான். அவன் உடலினை கறையான்கள் துளைக்க ஆரம்பித்துவிட்டன. உடலிலிருந்து சீழ் வடிந்துகொண்டிருந்தது. ஒருநாள் காட்டிற்கு விறகு வெட்டச்சென்ற ஒரு பெண் பாதாள லிங்கத்தினுள் ஏதோ ஒரு உருவம் இருப்பதை பார்க்கிறாள். உள்ளே சென்று அவருக்குத் தான் கொண்டுவந்த கஞ்சியை பருக்கிப் பார்த்தாள். அது உடலெங்கும் வழிந்தோடியது. உடனே சேஷாத்திரி மகரிஷியிடம் சென்று பாலசுவாமி ஒன்று இப்படியாக பாதாள லிங்கத்துள் தியானத்தில் இருப்பதாக விபரத்தைக் கூறினாள். தன் ஞான திருஷ்டியால் சேஷாத்திரி, ரமணரைப் பற்றி அறிந்து கொண்டார். உடனே அவர் ரமணரை மீட்டு பச்சிலைகள் கொண்டு முதலுதவி செய்து அவரைக் காத்தார். மௌன சுவாமியாக ரமணர் சில காலம் திருவண்ணாமலையில் திரிந்துவிட்டு பின் மீண்டும் தியானம் செய்ய விருபாட்ச குகைக்குச் சென்றார். அங்கு அண்ணாமலையானே வந்து நீ பெற்ற ஞானத்தை மக்களுக்கும் கொடு என்று பணித்தாராம். அதன் பின்னரே மக்களுக்காக மலையிலிருந்து இறங்கிவந்து ஆத்மீக பணிகளை ரமணர் ஆற்றினார். அதுவரை யாருடனும் பேசாமல் மௌன சுவாமியாக வலம்வந்த பகவான் ரமணர் பின்னர் அருணாச்சல அட்சரமணமாலை அருளியதுடன் உள்ளது நாற்பது உபதேச உந்தியார் போன்ற நூல்களை அருளி பக்தர்களின் ஆன்மீக சந்தேகங்களைக் களைந்தார். பகவான் போதனைகள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக அமைவது அத்வைத வேதாந்தத்தின் உட்பொருளேயாகும். எனக்கும் பரமனுக்கும் என்ன சம்பந்தம்? நான் அப்பரமனிலிருந்து

*முயற்சி செய்துகொண்டே இரு. ஒருநாள் தோல்வி தோற்றுப்போகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு வேறுபட்டிருக்கிறேன்? பரமனும் என்னுள் ஒளிரும் அந்த வெளிச்சமும் ஒன்றுதானா? அப்படியாகில் அதை நான் ஏன் உணராமலிருக்கிறேன்? என்னுள் மிளிரும் அந்த வெளிச்சமாக, அந்த இடைவிடாது இயக்கும் சக்தியாக எப்போதும் துலங்க நான் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விகளுக்கு பதில் காணும் வழியைக் காண்பித்தவர் ரமணர். அதாவது நான் யார் என்ற தேடலை விதைத்து உண்மையை அறியவைத்து, இவ்வுலகின் ஏகத்துவத்தில் எம்மை நிலைபெற செய்வதற்கான ஏற்பாடே அதுவாகும். பகவான் போதனைகள் அனைத்தும் ஆத்மவிசாரத்தை மற்றும் சரணாகதியை ஏற்படுத்துவதாகவே அமைகிறது.

## நான் யார்?

நாம் அனைவரும் அறிந்துகொள்ளவேண்டிய தலையாய விடயங்களுள் முதன்மை யானது இதுதான். உடல் அழியக்கூடியது. உடல் அழியும்போது சேர்த்து வைத்தலும், ஞாபகங்களும், அதன் கூட்டும் (மனதும்) அழியக்கூடியது. நாம் சம்பாதித்த சொத்து சுகம் தேடியறிந்த கல்வி, அறிவு எல்லாம் அழியக்கூடியது. அப்படியாயின் எது அழியாதது? எது நித்தியமானது? உண்மையில் நான்.... நான் என்று நாள்தோறும் விளித்துச்சொல்லும் இந்த நான் யார்? எதை நான், நான் என்றும் என்னுடையது என்றும் எனக்கானது என்றும் சொல் கிறேன்? இந்தக் கேள்விகளை ஒவ்வொருவரும் இடையறாது சிந்திக்க வேண்டும்.

துன்பம் வருங்கால், நோய் வருங்கால் யாருக்கு இந்த துன்பம் என்று வினாவ வேண்டும். உடல் துன்பமடைகிறதா அல்லது மனம் துன்பமடைகிறதா என்று அறியவேண்டும். ஒருவேளை உடல் என்றோ மனம் என்றோ பதில் வந்தால், யாருடைய உடலிற்கு துன்பம், யாருடைய மனதிற்கு துன்பம் என்று வினாவ வேண்டும். அதற்கு அநேகமாக என்னுடைய உடலிற்கு, என்னுடைய மனதிற்கு என்றே பதில் வரும். அந்த தருணத்தில் என்னுடையது என்று சொல்வது - நான் என்று வெளிப்பட்டு நிற்பது, யார் என்று உற்றுநோக்கிப் பார்க்க வேண்டும். இந்த "உரிமைப் போராட்டத்திற்கு" அப்பாலே தனித்துவமாக ஏதோவொன்று இவையனைத்தையும் சாட்சியாக அவதானிப்பதை உணரும்கால், எது சாட்சியாக அவதானிக் கின்றது என்ற கேள்வியை எழுப்ப வேண்டும். இதைத்தான் ஆத்மவிசாரம் என்று சொல்லு வார்கள். இதை அடிக்கடி பயிற்சி செய்ய மனம் படிப்படியாக ஒடுங்குவதைக் காணலாம். மனம்தான் துன்பங்களுக்கு மூல காரணம். மனதை அகற்றிவிட்டால் மீதமாய் இருப்பது எம் சுபாவமான ஆனந்தம் மட்டுமே.

ஒரு அன்பர் பகவானிடம் கேட்கிறார், நான் முத்தி அடையவேண்டுமெனில் என் வீடு, வாசல், மனைவி, மக்களைத் துறந்து நான் சந்யாசம் பூணவேண்டுமா என்று. அதற்கு பகவான் சொல்கிறார் நீ காட்டிலிருந்தாலும், வீட்டிலிருந்தாலும், கிரகஸ்தனாக இருந்தாலும், துறவியாக இருந்தாலும், நீ உன் மனதை வைத்திருக்கும் வரை எங்கிருந்தாலும் எப்படி இருந்தாலும் குழப்பங்களுடன்தான் இருப்பாய். மனம் நாசமாக்கப்படும் பொழுது (மன ஓட்டம் முற்றாக அழிக்கப்படும்போது) நீ வேறு எதுவும் செய்யத் தேவையும் இல்லை. எதையும் துறந்து செல்லவேண்டிய அவசியமும் இல்லை. மனோ நாசம் மட்டும் போதும். நீ இல்லறத்தில் இருந்தும் முக்தியடையலாம் என்றார்.

*உனக்கான பாதையை உன்னைத் தவிர யாராலும் தேர்ந்தெடுக்க முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரமணருக்கும் ஈழத்திற்குமான தொடர்பு

ஒருமுறை ஈழத்துச் சித்தர் யோகர்சுவாமி திருவண்ணாமலையில் பகவான் ரமண மகரிஷியை சந்தித்தார். இருவரும் நீண்ட நேரமாக ஒருவரை ஒருவர் நோக்கியபடி இருந்தார்கள். ஆனால் ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை. சில நேரத்தின் பின்னர் யோகர் சுவாமி வெளியில் வந்ததன் பிற்பாடு அவரிடம் அடியார்கள் கேட்டார்கள், "ஏன் நீங்கள் இருவரும் பேசிக்கொள்ள வில்லை" என்று. அதற்கு யோகர்சுவாமி நாங்கள் பேசவேண்டியதெல்லாம் பேசி முடித்து விட்டோம் என்றார். யோகர்சுவாமியிடம் ரமணரைப்பற்றி வினாவினார்கள். அதற்கு அவர் "அவன் மகாவீரன்" என்றுரைத்தார். இரு பூரணங்கள் ஒன்றை ஒன்று சந்தித்துக்கொள்ளும் போது என்னதான் பேச முடியும். எல்லாம் பூரணமாயே அமைந்தது.

பின்னாளில் ரமணரைத்தேடி திருவண்ணாமலை சென்ற ஈழத்தவர்களான செல்லத் துரை சுவாமிகள் மற்றும் மயில்வாகனம் சுவாமிகள் ரமணருடன் சிறிதுகாலம் இருந்ததன் பிற்பாடு ரமணர் செல்லத்துரை சுவாமிகளை அழைத்து இன்னார் இவ்விடத்தில் உள்ளார், அவரிடம் சென்று அவருக்கு பணியாற்று என்று யோகர் சுவாமிகளின் நாமத்தைக் கூறி அனுப்பி விட்டாராம். பின்னாளில் யோகர்சுவாமி சமாதி அடையும் வரையிலும் செல்லத்துரை சுவாமிகள் அவர் கூடவே இருந்து அவருக்கான பணிவிடைகளை செய்து பின்னாளில் சிவதொண்டன் நிலையத்தையும் இயக்கினார்.

இவரைப் போலவே மயில்வாகனம் சுவாமிகளையும் நாடு திரும்பி அங்கே மக்களுக் குத் தேவையான பணிகளைப் புரியுமாறு பணித்ததன் பிரகாரம் அவர் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திற்கு அருகில் ஆனந்தாச்சிரமத்தை அமைத்து அன்னதானப் பணிகளை ஆரம்பித்தார். அவர் ஆரம்பித்த அப்பணியை இந்நாள் வரையிலும் மோகன் சுவாமிகள் சிறப்பாக நிறைவேற்றுவதைக் காணலாம். யாழ்ப்பாணத்தில் கிடைக்கக்கூடிய மிக அற்புத மான அன்னதான நிலையமாக சந்நிதியான் ஆச்சிரமமும் ஒன்றாகத் திகழ்வதற்கு காரணம் அவர்கள் அருளைத் திரட்டி அன்னமாக தரும் ரசவாதக் கலையை அறிந்திருப்பதாகும்.

ஈழத்து இந்த சித்தர்களைத் தவிரவும் எழுத்து சித்தராக குறிப்பிடப்படும் திரு பாலகுமரன் அவர்களின் குரு யோகிராம் சுரத்குமார் (விசிறி சாமியார்) ரமணரின் நேரடித் தொடர்பில் இருந்தனர். மற்றும் சுவாமி சின்மயானந்தர் இளமைக் காலத்தில் ஊடகவிய லாளராகவும், நாத்திகவாதியாகவும் இருந்தபோது அவர் பகவான் ரமணரை பல கேள்விகள் கேட்டு திக்குமுக்காடச் செய்யும் நோக்கில் ரமணரைச் சந்திக்க ஆசிரமத்தின் உள்ளே நுழைந்தவர் ஒரு கேள்வியும் கேட்கமுடியாதபடி ஒரு அமைதி அவரைச் சூழ்ந்து கொள்ளவும் அதை அனுபவித்த வண்ணம் திரும்பிவிட்டார். பின்னாளில் அவர், குரு தபோவன் ஸ்வாமி களின் ஆச்சிரமத்தில் பயிலும் காலத்தில், கங்கை உருவாகும் கங்கோத்ரி என்ற இடத்தில், முதன் முதலில் ரமணரை சந்தித்த அனுபவத்தை பற்றிக்கூறும்போது, பகவான் ரமணரை சந்தித்தபோது ஏற்பட்ட அனுபவத்தில் இருந்து கங்கையின் உற்பத்தி ஸ்தானமான கங்கோத்ரியில் கிடைத்த அனுபவம் துளியும் வேறுபட்டதில்லை என்று கூறினார். ரமணரைச் சந்திக்க செல்ல முன் இருந்த பாலன் (சின்மயானந்தரின் ஆரம்பப் பெயர் பாலன்) வெளியில் வரும்போது இல்லை. புதிய ஆளாக, தான் வெளியில் வந்ததாகக் குறிப்பிடுகிறார். பெரும் ஞானியான ஓஷோ தான் சிறுவனாக இருந்தபோதே ரமணரைச் சந்திக்க ஆசைப்பட்ட

*வேதனைகளை ஜெயித்துப் பார். அதுவே ஒரு சாதனையாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகவும் பின்னாளில் அவர் சமாதிக்குச் சென்றபோது அவரின் அதே ஆத்மவாசம் இன்னும் அங்கே குடிகொண்டு இருப்பதை உணரமுடிவதாகவும் பல இடங்களில் ரமணரைப்பற்றியும் அவர் போதனைகள் பற்றியும் எடுத்துக்கூறியிருக்கிறார்.

இவ்வாறாக பல ஞானிகள் - மகான்கள் ரமணருடன் தொடர்புபட்டிருப்பதைக் காண முடிகிறது. ஈழத்தவர்களுக்கும் ரமணருடனான தொடர்பு யோகர்சுவாமி, செல்லத்துரை சுவாமி ஆனந்தா ஆச்சிரம மயில்வாகனம் சுவாமி என்று விரிவடைவது நாம் பெற்ற பாக்கியம்.

நான் யார் என்ற ஆத்மவிசாரத்தை தூண்டி நாம் எல்லோரும் மெய்ப்பொருள் அறியும் பாதைக்கு ஒரு ஒளியாகத் திகழ்ந்த ரமணமகரிஷியை மார்கழி 30 அவரின் பிறந்த தினத்தில் நினைவுகூர்வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

---

பாரதப் போர் முடிந்ததும் திரௌபதிக்கு தனக்கு மிகவும் வயதானதைப்போல உணர்ந்தாள். உடல் ரீதியாக மற்றும் மன ரீதியாகவும் கூட அஸ்தினாபுரம் நகரைச் சுற்றி விதவைகள் அதிகமாக இருந்தனர். ஒரு சில ஆண்கள் மட்டுமே காணப்பட்டனர். அனாதைகள் அங்குமிங்கும் சுற்றித்திரிவதைக் கண்ட அவர்களின் அரசி திரௌபதி, அஸ்தினாபுரம் அரண்மனையில் அசையாமல் வெற்றிடத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். ஸ்ரீ கிருஸ்ணர் அறைக்குள் நுழைய திரௌபதி கிருஸ்ணரைப் பார்த்ததும் ஓடி வந்து அவரைச் சேவித்துக்கொண்டாள். கிருஸ்ணர் அவள் தலையைத் தடவிக்கொடுக்கிறார். அவளோ அழத்தொடங்கினாள். நேரம் மெல்ல நகருகிறது. அவளிடமிருந்து விலகி பக்கத்து படுக்கையில் உட்கார்ந்த கிருஸ்ணர் கேட்டார், திரௌபதி என்ன நடந்துவிட்டது. ஒன்றும் நடக்கவில்லையே கிருஸ்ணா!

"விதி மிகவும் கொடூரமானது பாஞ்சாலி... நாம் நினைப்பதுபோல் வேலை செய்யாது! அது அதன் போக்கில் அதனுடைய செயல்களைச் செய்கிறது. முடிவுகளையும் மாற்றுகிறது. நீ பழிவாங்க நினைத்தாய்... வெற்றி பெற்றாய் திரௌபதி! உன் பழிவாங்கள் முடிந்தது... துரியோதனனும் துச்சாதனனும் மட்டுமல்ல, கௌரவர்கள் அனைவரும் மடிந்துவிட்டனர். நீ மகிழ்ச்சியாக இருக்கவேண்டும்!" என்று கிருஸ்ணர் கூறினார்.

"சகோதரா, என் காயங்களை ஆற்றவந்தீர்களா... அல்லது அதன்மீது உப்புத் தூவ வந்தீர்களா? என்றாள் திரௌபதி. இல்லை திரௌபதி... உண்மை நிலையை உனக்கு உணர்த்தவே வந்துள்ளேன். எல்லாம் நமது தொலைநோக்குப் பார்வையற்ற செயல்களின் விளைவு என்பதை உணர்த்த வந்தேன். அதனால் என்ன? இந்தப் போருக்கு நான்தான் முழுப்பொறுப்பு கிருஸ்ணா? இல்லை திரௌபதி நீ மட்டுமே காரணம் என்று கருதாதே. ஆனால் உன் செயல்களில் நீ கொஞ்சம் தொலைநோக்குப் பார்வையைக் கொண்டிருந்திருப்பாயேயானால் நீ இவ்வளவு துன்பங்களை அனுபவித்திருக்க மாட்டாய். நான் என்ன செய்திருக்க முடியும் கிருஸ்ணா? நீ நிறைய செய்திருக்க முடியும் பாஞ்சாலி. உனது சுயம்பரம் நடந்தபோது கர்ணனை அப்படி அவமானப்படுத்தாமல், போட்டியில் கலந்துகொள்ள அவனுக்கும் வாய்ப்பளித்திருந்தால் ஒருவேளை முடிவு வேறு ஏதாவதாக இருந்திருக்கக்கூடும். அதற்குப் பிறகு குந்தி உன்னை ஐந்து கணவர்களுக்கு மனைவியாகும்படி கட்டளையிட்டதை அப்போது ஏற்றுக்கொள்ளாதிருந்தாலும் முடிவு வேறு விதமாக இருந்திருக்கும். அதற்குப் பிறகு உன் அரண்மனையில் துரியோதனனை அவமானப் படுத்தினாய். பார்வையற்றவரின் மகன்கள் குருடர்கள் என்று. அவ்வாறு நீ சொல்லாதிருந்தால் நீ மானபங்கப் பட்டிருக்கமாட்டாய். அப்போதும் ஒருவேளை சூழ்நிலைகள் வேறு விதமாக இருந்திருக்கும். "நம் வார்த்தைகள்கூட விளைவுகளுக்கு பொறுப்பு திரௌபதி" "நீ பேசுவதற்கு முன் உன் ஒவ்வொரு வார்த்தையையும் எடைபோடுதல் மிகவும் முக்கியமானது. இல்லையெனில் அதன் தீய விளைவுகள் உன்னை மட்டுமல்ல, உனது சுற்றுப்புறத்தையும் மகிழ்ச்சியற்றதாக ஆக்கிவிடும். பற்களிலே விசமில்லா மலேயே பேசும் வார்த்தைகளில் விசம் கக்கும் ஒரே இனம் இவ்வுலகில் மனிதன் மட்டுமே". எனவே வார்த்தைகளை புத்திசாலித்தனமாக பயன்படுத்துங்கள். அதாவது யாருடைய மனதையும் புண்படுத்தாதீர்கள். ஏனென்றால் மகாபாரதம் நமக்குள் மறைந்திருக்கிறது.

*உன்னால் முடியும் என்று நம்பு. முயற்சிக்கும் அனைத்திலும் வெற்றியே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 79

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 கிடைத்ததோர் வாழ்க்கையது சிறிதோ பெரிதோ
திருப்தியோடு வாழ்வதே பெருவாழ்வு வாழ்வதாகும்
பெருவாழ்வு வேறென்று வாழாமல் இருந்திட்டால்
வாழ்க்கையே முடிந்துவிடும் வாழ்வது பின் எப்போதாம்.

02 கிழியல் ஒன்றினை நீர் கிழிந்தவுடன் தைத்திட்டால்
மேலுமது கிழியாது கிழிந்ததோடு நிற்றல்போல்
விரிசலும் வந்திட்டால் வந்தவுடன் தீர்க்க வேண்டும்
விரிவடைய விட்டிட்டால் பெரும்போரில் அதுமுடியும்.

03 சந்தேகத் திரையரங்கில் தோன்றிடும் காட்சிகளை
உண்மைபோல் உள்ளத்தில் உருவகித்துக் கொள்ளாதீர்
உருவகித்துக் கொண்டவைகள் உருவங்கள் மாறிப்பின்
உயிருக்கே உலைவைக்கும் உட்பொருளாய் மாறிவிடும்.

04 மானிடர் படைத்திட்ட பொன்னையும் பொருளையும்
வானிலும் உயர்ந்தென மகிழ்தலுமோர் துயரமாகும்
நானிலம் தனைப்படைத்தோன் படைத்திட்ட நல்லறிவை
மானிலம் துயர்ந்ததென சேர்ப்பதுவே மகிழ்வாகும்.

05 பொன்னோடு பொருளையும் பொக்கிசமாய்க் கொண்டிருப்போர்
செல்வந்தர் எனத்தம்மை எண்ணிடுதல் தவறாகும்
நாளைக்கும் உழைக்கின்ற நலத்துடனே இருப்பவரே
ஏழையெனப் பெயர்தாங்கும் ஏற்றமிகு செல்வராவார்.

06 எவ்வளவு தான் எண்ணையது விளக்கினுள்ளே இருந்தாலும்
திரிவழியே செல்லாமல் அது தீபமென்று ஆகாது
செல்வமும் அப்படித்தான் அறிவுவழி செல்லாமல்
அதுயாற்கும் பலன்தராது அழிவிற்கே வழிவகுக்கும்.

*அழகு என்பது மனதுதானே தவிர, முகமல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 உறக்கத்தில் நாமெல்லாம் விட்டுவிட்டு உறங்குதல்போல்
இறப்பிலும் நாமெல்லாம் விட்டுவிட்டே இறக்கின்றோம்
இறப்போடு உறக்கமதில் எல்லாமே விட்டிடும் நாம்
இறவாமல் இருக்கையிலே சிலவிடுதல் இழிவாமோ.

08 கைப்பொருளை வாழ்க்கையிலே நிலையென்று நம்பிநாம்
மெய்ப்பொருளை உணராமல் இருப்பதுவே தவறாகும்
கைப்பொருள் சிலநேரம் உயிருக்கும் உலை வைக்கும்
மெய்ப்பொருளே இறவாத பெருவாழ்வை எமதாக்கும்.

09 குப்பையைக் கிளறுவதில் கோழிகட்கு வாழ்க்கையுண்டு
குப்பையைக் கூட்டுவதில் மானிடற்கு வாழ்க்கையுண்டு
கூட்டுவது கோழிகளாய் கிளறுவது மானிடராய்
இருப்பதால் பலனுண்டோ பழையவற்றைக் கிளறாதீர்.

10 சட்டைப் பையினுள் பணத்தினைப் போன்றதுதான்
நமக்கென்று இருக்கின்ற வாழ்நாளின் காலமதும்
பணம் முடிய முன்னரேதும் பலனுள்ள செய்தல் போல்
வாழ்நாள் முடிய முன்பும் வரலாறு படைத்திடுவீர்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**

செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**

செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*எதையும் விட்டுவிடாதே அனைத்தையும் கற்றுக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய கல்வி அறிவில்லாத மக்களுக்கு பழமொழிகள் பேருதவி புரிந்தன

– *திரு பு. கதிரித்தம்பி* அவர்கள் –

பண்டைய கல்வி அறிவில்லாத மக்களுக்கு இறையருள் பெற்ற அறிஞர்களால் பழமொழிகள் ஆக்கப்பெற்றன. அறிஞர்கள் இறைவனை வேண்டி பழமொழிகளை ஆக்கியதால் அது எக்காலத்துக்கும் உடையதாக அமைந்து விடுகின்றன. பண்டைய மக்களும் இறைவனை வேண்டி பழமொழிகளைக் கடைப்பிடித்தார்கள். இதனால் அவர்களது வாழ்க்கை நெறிப்பட்ட வாழ்க்கையாக அமைந்து சந்தோசமாக வாழ்ந்தார்கள்.

மக்கள் பழமொழிகளின் உண்மைத் தன்மையையும் விளங்கிக்கொண்டார்கள். பழமொழிகளுக்கு உதவியாக ஔவைப்பிராட்டியார் நூல்களும், தெய்வப்புலவர் வள்ளுவர் நூல் திருக்குறளும் பக்கபலமாக அமைந்தன. பிறந்தவுடன் கவியாக “கல்லினுட் தேரைக்கும் கருப்பை அண்டத்துயிர்க்கும் புல்லுணவு அளித்துக் காக்கும் புனித்துளாய் கண்ணியண்ணல் என்னையும் கைவிடுவானோ” என்று கூறியதும், அன்னை ஆதி அவளைவிட்டு பகவானுடன் சென்றதாக வரலாறு உள்ளது. ஔவையார் ஆத்திசூடி, மூதுரை, கொன்றைவேந்தன், நல்வழி என்னும் நூல்களை பாடியருளினார்.

ஆத்திசூடி நூலிலிருந்து

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

தெய்வப்புலவர் வள்ளுவர் இயற்றிய நூலிலிருந்து

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன்
முதற்றே உலகு.

கற்றதனால் ஆயபயனென் கொல்வாலறிவன்
நற்றாள் தொழா ரெனின்.

இவற்றை பண்டைய மக்கள் அறிஞர்களின் உதவியால் கற்று, அதன்வழி ஒழுகத் தொடங்கினர்.

**பழமொழிகள்**

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
கூட்டத்திற்கு ஒரு கல், கலியாணத்துக்கு ஒரு சொல்.

*நிம்மதியான வாழ்க்கை வாழ ஆசை இல்லா மனம் வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
உண்ணாச் சொத்து மண்ணாகும்.
அழுத பிள்ளை பால் குடிக்கும்.
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
ஆறிய கஞ்சி பழங்கஞ்சி.
உப்பு இட்டவரை உள்ளளவும் நினை.
கழுதை தேய்ந்து கட்டெறும்பானது.

இப் பழமொழிகளை மக்களுக்கு உதவ அறிஞர்களும், அரசர்களும் ஆதரவாக இருந்தனர்.

தற்காலத்தில் மக்கள் கல்வி கற்கத் தொடங்கிவிட்டார்கள். கல்வியினால் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள் தோன்றிவிட்டார்கள். விஞ்ஞானம் அதி உச்சக் கட்டத்தை அடைந்துவிட்டது. இப்பொழுது வீட்டில் இருந்தவாறு வெளி உலக மக்களுடன் தொலைபேசியில் கதைக்கிறார்கள். அவர்கள் உருவங்களையும் பார்க்கிறார்கள். அதுமட்டுமன்றி குறுகிய நேரத்தில் வெகு தூரம் செல்லக்கூடிய ஆகாய விமானங்களையும் கண்டுபிடித்து விட்டார்கள். மக்களும் விஞ்ஞானத்தில் அதி நம்பிக்கைகொண்டு நடக்கத் தொடங்கிவிட்டார்கள். இறை நம்பிக்கை குறையத் தொடங்கிவிட்டது. விஞ்ஞானத்தில் நம்பிக்கை கொண்டாலும் மெய்ஞ்ஞானம் பெரியது என்ற உண்மையை உணரவேண்டும்.

மெய்ஞ்ஞான நிகழ்வான கூடுவிட்டு கூடுபாய்ந்த அருணகிரிநாதரின் செயல் எடுத்துக் காட்டுகின்றது. அருணகிரிநாதர் தனது உடலை ஒரு இடத்தில் வைத்துவிட்டு இறந்து கிடந்த கிளியின் உடலில் தனது உயிரைப் புகுத்தி பாரிஜாத பூப்பறிக்கச் சென்றார். பூப்பறித்து திரும்பி வந்து பார்த்தபொழுது உடல் தகனம் செய்துவிட்டதாக அறிந்தார். கிளி உருவிலிருந்துதான் ஏனைய இரு நூல்களையும் பாடினார் என்பது வரலாறு. மூலனும் கூடுவிட்டு கூடு பாய்ந்தார். நாயன்மார்களும் பல அற்புதங்களைச் செய்து சைவ சமயத்தை அழியாது காப்பாற்றினர். சமணசமயம் சைவசமயத்தை அழிக்க முயன்றபோது, இறைவன் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரைத் தோற்றுவித்து சமணருடன் அனல்வாதம், புனல்வாதம் செய்து சைவசமய உண்மையை உலகறியச் செய்தனர். மெய்ஞ்ஞானத்தின் உண்மைத் தன்மையை உணர வைத்தனர். ஈழத்தில் ஒட்டுசுட்டானில் கல் மாடு புல் தின்று ஒல்லாந்தப் பிரதானியை அடிபணிய வைத்ததை வரலாறுமூலம் நாம் அறிவோம்.

விஞ்ஞான வளர்ச்சியால் கடவுள் நம்பிக்கை குறைய ஆரம்பித்து, பழமொழிகளின் பாவனையும் குறைந்துவிட்டதெனலாம். இலங்கையில் சைவ ஆலயங்கள் பல தோன்றி, அருள் புரிந்து இறை அருளை ஊட்டுகின்றன. தற்பொழுது இலங்கையிலுள்ள ஆலயங்களில் கோபுரங்கள் கட்டப்பட்டு விழாக்களும் நடைபெறுகின்றன. கோபுரம் இல்லாத தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம், நாம் இருக்க பயம் ஏன்? நிம்மதியை சந்நிதியான் அருளுகின்றானென்று வாசகங்கள் காட்சியளிக்க, மக்களை ஈர்க்க கல்லோடைக் கந்தன் பல அற்புதங்களைச் செய்துகொண்டிருக்கின்றான். பூசை முடிந்ததும் பூசகரிடம் விபூதி வாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் முண்டியடிக்கின்றனர். உச்சியில் பூசகர் போடும் விபூதி மக்களின் நோயை இல்லா தொழிக்கின்றது. செல்வச்சந்நிதியான் ஆட்கொண்ட தொண்டன் முகப்பு முன் வீதியில், சந்நிதியான் ஆச்சிரமம் என்ற பெயருடன் அன்னம் பாலித்துக் கொண்டிருக்கின்றான்.

பண்டைய காலத்தில் பழமொழிகள் கல்வி அறிவு இல்லாத மக்களுக்கு பேருதவி புரிந்ததுபோல் இன்று செல்வச்சந்நிதியான் மக்களின் கவலையை நீக்க வேலும் மயிலுடன் ஆலய முகப்பில் காட்சியளித்துக்கொண்டிருக்கின்றான். எனவே கவலையுள்ள மக்கள் தினமும் கோவில் (சந்நிதியான்) சென்று வழிபட்டு வாருங்கள். அவன் கடைக்கண் பார்வை உங்களிடம் படும் என்பது நிச்சயம். இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

---

ராமன் செலுத்திய அம்பில் காயம்பட்டு குற்றுயிராய்க் கிடந்த ராவணனிடம் உயிர் பிரியாமல் இருந்தது. அப்போது ராமர் லட்சுமணனைப் பார்த்து "லட்சுமணா ராவணன் அனைத்துக் கலைகளையும் அறிந்தவன். ராஜதந்திரம் மிக்கவன். நமக்கு அவனுடைய அரசியல் அனுபவம் மிகவும் பயனுள்ளதாயிருக்கும். நீ அவனிடம் போய் நான் கேட்டதாகக் கூறி அவனுடைய சிறந்த அறிவுரைகளைப் பெற்றுவா" என்று கூறி அனுப்பினார்.

லட்சுமணன் பவ்யமாக ராவணனின் காலடியில் நின்று "இலங்கேஸ்வரா உன்னுடைய ஞானம் உன்னோடு அழிந்துவிடக்கூடாது. நீ எனக்கு உபதேசிப்பதன்மூலம் அதை இந்த உலகம் அறிந்து பயன்பெறும். எனவே எனக்கு உபதேசியுங்கள்" என்று வேண்டி நின்றான்.

லட்சுமணனை சிரித்துக்கொண்டே வரவேற்ற ராவணன், ராமர் தன்னிடத்தில் வைத்திருக்கும் மதிப்பு அறிந்து மகிழ்வுடன் தன் அறிவுரைகளைச் சொன்னான். "லட்சுமணா ஒரு காலத்தில் சர்வ வல்லமை படைத்தவனாக இருந்தேன். நவக்கிரகங்களும் எமனும் இந்திரனும்கூட எனக்குக் கீழ்ப்படிந்தனர். அப்போது நான் எண்ணியது என்ன தெரியுமா? நாட்டில் அனைவரும் சொர்க்கம் செல்ல வேண்டும். நரகம் யாருக்கும் இல்லையென உத்தரவு பிறப்பிக்க வேண்டும். ஒரு பறக்கும் ஏணி அனைவரையும் ஏற்றிச் செல்ல எமனைக் கொண்டே உருவாக்கப்பட வேண்டும் என்பதே. ஆனால் இந்த நல்ல எண்ணத்தைச் செயற்படுத்தாமல் தள்ளிப் போட்டேன். அதன் விளைவாகவே இன்று நான் அவதிப்பட்டேன். சூர்ப்பனகை வந்து சீதாதேவி அழகின் சிகரம். அவள் உனக்கு ஏற்றவள் என்று கூறியதும் உடனே அந்தச் செயலை தள்ளிப்போடாமல் புறப்பட்டேன். விளைவு அனைவருக்கும் நாசம். அதனால் நான் முக்கியமாகச் சொல்ல விரும்புவது,

நல்ல செயலை உடனடியாக செய்து முடி. அது பலன் தரும். தீய செயலைத் தள்ளிப்போடு. தள்ளிப்போடுவதால் அந்த தீய செயல் நடைபெறாமல் இருக்க வாய்ப்புண்டு. உன் சாரதியிடமோ, வாயிற் காப்பானிடமோ, சகோதரனிடமோ பகை கொள்ளாதே. உடனிருந்தே கொல்வார்கள். தொடர்ந்து நீ வெற்றிவாகை சூடினாலும் எப்போதும் வெல்வோம் என்று எண்ணாதே. உன் குற்றங்களை சுட்டிக் காட்டும் நண்பனை நம்பு. நான் அனுமனை சிறியவன் என்று எடைபோட்டதுபோல் எதிரியை எப்போதும் எளியவன் என்று எடைபோட்டுவிடாதே. வானின் நட்சத்திரங்களை வளைக்கமுடியும் என்று நம்பாதே. அவை நம் வழிகாட்டிகள். பொறுமையைவிட மேலான தவமுமில்லை. திருப்தியைவிட மேலான இன்பமுமில்லை. இரக்கத்தைவிட உயர்ந்த அறமுமில்லை, மன்னித்தலைவிட ஆற்றல்மிக்க ஆயுதமில்லை என்று சொல்லி முடித்தான் ராவணன்". லட்சுமணன் ராவணனை வணங்கி உபதேசங்களைப் பெற்றுக்கொண்டான்.

*எப்போதும் தன்னம்பிக்கையை மட்டும் இழக்கக்கூடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகள்

(தொடர்ச்சி...

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

செல்லப்பாச் சுவாமிகள், அவ்வப்போது தாம் உதிர்த்த மகா வாக்கியங்களுக்கு அருள் கொடுத்தார். அவற்றிற்குப் பொருள் கொடுத்து; உலகத்தவர்க்கு அம் மகா வாக்கியங் களின் அருமை பெருமைகளை உணர்த்துவதற்கு, ஆளுமை வாய்ந்த, ஆன்மீக நாட்டங் கொண்ட ஒரு சீடரைத் தேடிக்கொண்டிருந்தவேளை கிடைக்கப்பெற்றவர்தான் யாழ்ப்பாணம் சிவயோக சுவாமிகள். "எப்பவோ முடிந்த காரியம்" என்னும் மகா வாக்கியத்திற்குப் பொருள் கொடுத்ததுபோல செல்லப்பாச்சுவாமிகள் சிவயோக சுவாமிகளை ஆட்கொண்ட தெய்வீக நிகழ்வு அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

செல்லப்பா சுவாமிகளின் புறத்தோற்றத்தையும்; நடை, உடை, பாவனைகளையும் பேச்சுக்களையும் கண்டு மருட்சியடைந்தவர்கள் அவரின் உள்ளத்து அழகு பற்றியும் உண்மைநிலைபற்றியும் அறிந்திராதவர்களேயாவர். அத்தகையவர்களே சுவாமியைச் சித்த சுவாதீனம் அற்றவர் என்ற பொய்க் கதையைப் பரப்பினர். உண்மையில் செல்லப்பாச் சுவாமிகள் பித்தம் தெளிந்தவர்; சித்தம் அழகியவர்; தூயவர் என்பதைக் கண்டு உணர்ந்து கொண்டவர் சிவயோக சுவாமிகள் ஆவார்.

"பழவினைகள் பாறும் வண்ணம்; சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்" என மாணிக்கவாசக சுவாமிகள் திருப்பெருந்துறையில் சிவபெருமான் குருவடிவம் தாங்கி குருந்தமர நீழலில் அமர்ந்து தமக்கு ஞானோபதேசம் தமது திருவருட் பார்வையால் நிகழ்த்தி ஆட்கொண்ட இறைவனை விழித்துத் திருவாய் மலர்ந்தருளினார். அதேபோன்ற அகம் சார்ந்த ஓர் அற்புத நிகழ்வு நல்லூர்த் தேரடியில் வில்வமர நீழலில் குருவாக அமர்ந்த செல்லப்பா சுவாமிகளுக்கும் சீடனாக வாய்க்கப்பெற்ற சிவயோக சுவாமிகளுக்குமிடையே மானசீகமாக நடந்தமை கருத்தில்கொள்ளற்பாலது.

செல்லப்பாச் சுவாமிகள் தாம் யார் என்பதை மற்றையவர்களுக்குக் காட்டிக்கொள்ள விரும்பாதவர். அதனாலேயே தாம் ஒரு சித்தராக அகத்தில் விளங்கியபோதிலும்; சித்துக்கள் செய்தும், வேடங்கள் பூண்டும், பிறரைத் தம்பால் ஈர்க்கவோ; பொருள், புகழ், செல்வாக்குச் சேர்க்கவோ; நாட்டமற்றவராகக் காணப்பட்டார். தாம் விரும்பிப் பூண்ட விசர்க்கோலத்தை இறுதிவரை கலைக்காது, காப்பாற்றிப் பற்றற்றவராக வாழ்நாட்களைக் கழித்துவிட்டார்.

சாதி, சமய, குல ஆச்சாரங்கள் யாவற்றையும் செல்லப்பா சுவாமிகள் விட்டொழித்தார். சமரச ஞானியாகத் திகழ்ந்தார். எந்த நெறியிலோ, மார்க்கத்திலோ அவர் தம்மை இணைத்துக்

*விழுவதெல்லாம் எழுவதற்குத்தானே தவிர அழுவதற்கல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவில்லை. மனவடக்கம், புலனடக்கம் கைவரப்பெற்றவர். செயற்கரிய செயல்களை ஆற்றும் ஆற்றல் உடையவர். "ஞானமென்பது மோன வரம்பு" என்பதற்கிணங்க, மௌன நிலையில், யோகநிட்டையில் முழுமைத்துவத்தை - பூரணத்துவத்தை உணர்ந்தவர். மனதற்ற நிலையை அடைந்தவர். மும்மலங்களுமற்றுச் சிவமாகி விட்டவர். இன்பம் - துன்பம்; நன்மை - தீமை; விருப்பு - வெறுப்பு; வேண்டியவர் - வேண்டாதவர் ஆகிய இருமை நிலை களைக் கடந்தும், களைந்தும் நின்ற முற்றுந்துறந்த முனிவர் ஆக விளங்கினார்.

**சிவயோகசுவாமிகள்**

யாழ்ப்பாணக் குடாநாட்டில், மாவிட்டபுரம் என்னும் பதியிலே, ஆயிரத்து எண்ணூற்று எழுபத்திரண்டாம் ஆண்டு; மே மாதம், இருபத்தொன்பதாம் திகதி; அம்பலவாணர், சின்னாச்சி அம்மையார் தம்பதியருக்கு அருந் தவப்புதல்வராக சிவயோகசுவாமிகள் அவதரித்தார். கருவிலே திருவுடையர் ஆக விளங்கிய அந்த மகானுக்கு பெற்றோர் இட்ட பெயர் சதாசிவம். கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட தந்தையார், மஸ்கேலியாவில் வியாபாரத் தொழிலை மேற்கொண்டு வந்தார். தந்தையைச் சிறுபராயத்திலேயே இழந்த சதாசிவம் தந்தையின் தம்பியார் சின்னையா என்பவரின் பராமரிப்பில் கொழும்புத்துறையில் வாழ்ந்து வந்தார். சின்னையா சதாசிவத்தை சென். பற்றிக்ஸ் கல்லூரியில் சேர்த்து ஆங்கிலமொழி மூலக் கல்வி கற்க உதவினார்.

சின்னையா, கிறிஸ்தவர் என்பதால் யோசெப் என்னும் நாமம் பெற்றிருந்தார். கிறீஸ்தவச் சூழலில் வாழ்ந்து வந்தமையால் சதாசிவத்திற்கு யோகநாதன் என்னும் பெயர் இடப்பட்டது. கத்தோலிக்கப் பெயர், யோன் என்பதாகும். கல்வி கற்கும்போது விவேகியாகத் திகழ்ந்தார். ஏனைய மாணவர்களின் சந்தேகங்களைக் களைந்து, நிவிர்த்தி செய்வதில் வல்லுனராக விளங்கினார். எனினும், குடும்பநிலைமை காரணமாகப் படிப்பை இடைநிறுத்தி ஏதேனும் தொழில் ஒன்றைத் தேடலானார். அரச சேவையில் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள அலுவலகத்தில்; பண்டகசாலைப் பொருள் காப்பாளர் பதவி யோகநாதனுக்குக் கிடைத்தது. அவ்வேளை கிளிநொச்சி இரணைமடுக்குளத் திருத்த வேலைகள் பிரவுண் என்று அழைக்கப் படும் ஆங்கிலேய பொறியியலாளர் தலைமையில், நடைபெற்று வந்தன. யோகநாதன் தம் பணிகளை கடமையுணர்வோடு நேர்மையாகவும் வெகு கச்சிதமாகவும் ஆற்றி வந்தார்.

உத்தியோகம் பார்த்து வந்த காலப்பகுதியில் ஆன்மீகத்தில் நாட்டமுடையவராய், அகநோக்கில் தம் உட்சென்று, ஆழமான, அகத்தாய்வில் ஈடுபாடு கொண்டவராக; உயிரறிவை உள்ளுணர்வால் பெற முயற்சிப்பவராக யோகநாதன் காணப்பட்டார். அதேவேளை தமக்கெனக் குரு ஒருவரைத் தேடலானார். அவ்வப்போது ஓய்வுநேரங்களில் சைவத்திருமுறைகள், புராண இதிகாசங்கள் மற்றும் சைவத் தோத்திர சாத்திர நூல்கள் சிலவற்றையும் ஓதியும் உணர்ந்தும் வரலானார். யோகநாதன் உலகியல் வாழ்வைப் படிப்படியாகத் துறந்து; ஞானத் தேடலுக்கு தம்மைச் சீர்படுத்திக்கொண்டிருந்தார். ஆன்ம விடுதலையடைந்து பிறப்பு - இறப்புத் தொடர் நிகழ்வினை முடித்துக்கொள்வதையே மனிதப் பிறப்பின் நோக்கமும் பயனும் ஆகக் கொண்ட

*சேமிப்பு இல்லையென்றால் உழைப்பும் வீணே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகநாதன்; அப்பயனை அடைவதற்கான முயற்சியில் அல்லும் பகலும் தம்மை அர்ப்பணிப் புடன் ஈடுபடுத்தி வந்தார்.

## குரு - சீடர் உயிர்க்கலப்பு

யோகநாதன் தனது குருநாதனைக் கண்டு தரிசிப்பதற்கு உரிய தருணம்; இறைவன் திருவருளினால் கிடைக்கப்பெற்றது. செல்லப்பாச் சுவாமிகள் நெருப்பும் அதேவேளை தண்ணீரும் போன்றவராகக் காட்சியளித்தார். பெரும்பாலானவர்களுக்கு அவர் நெருப்பு. தாம் பூண்ட விசர்க்கோலம், அவரை எவரும் அணுகவிடாமல் செய்தது. அதனால் எதிலும் பற்று அற்றவராய் தாம் வாழுங் காலத்தை கழிப்பதற்கு, உதவியாக இருந்தது. செல்லப்பா சுவாமிகள் ஓர் உயர்நிலையை எய்திய சித்தர் பெருமான் என்பதை உணர்ந்து, அவரைத் தூய உள்ளன்புடன் தரிசித்து வந்தவர்களும்; விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் இருந்தனர். அவர்களுக்குச் சுவாமிகள் தண்ணீர் போன்று குளிர்ச்சியாக விளங்கினார். சுவாமிகளை உள்ளபடி உணர்ந்து அவரை மனம், மொழி, மெய்யினால் தரிசித்து வந்தவர்கள் பெரும்பாலும் கொழும்புத்துறையை வதிவிடமாகக் கொண்டவர்களாய்க் காணப்பட்டனர்.

கொழும்புத்துறை விதானையார் திருஞானசம்பந்தர் மற்றும் துரையப்பா ஆகியோர் சுவாமிகள்மீது அதீத பக்தி பூண்டவர்கள். கிளிநொச்சியிலிருந்து விடுமுறையில், கொழும்புத் துறைக்கு வருகை தந்த யோகநாதன்; திருஞானசம்பந்தர் மற்றும் துரையப்பா, இராமலிங்கர் ஆகியோருடன் இணைந்து செல்லப்பாச்சுவாமிகளைத் தரிசிப்பதற்கு நல்லூரடிக்குச் சென்றனர்.

நல்லூர்த் தேரடியில் செல்லப்பாச் சுவாமிகளைத் தரிசித்து, அமைதியாக நின்ற யோகநாதனை; சுவாமிகள் விழித்து உரத்த தொனியில் "யாரடா நீ" என்று அதட்டினார். இடியோசை போன்ற அதட்டல் பயத்தை ஊட்டாது, யோகநாதனுக்கு தீட்சை மந்திரமாக அருள் மழையாகப் பொழிந்தது. காந்தம் இரும்புத் துண்டினை ஈர்த்தது போன்ற ஓர் இனம் புரியாத அற்புத உணர்வு, குருநாதனுக்கும், சீடனுக்குமிடையில் ஏற்பட்டிருக்க வேண்டும். யோகநாதன் அந்தக் கணத்தில் எய்திய மனநிலையை, மாற்றத்தை, உள்ளுணர்வை; ஏற்பட்ட அதிர்வு அலைகளை எவரும் கற்பனை செய்துகூட விவரிக்கமுடியாது. அதற்குரிய பரிபக்குவம் எம்மிடம் இல்லை. குருவும் சீடரும் அக்கணமே உயிர்க்கலப்பு பெற்றுவிட்டனர்.

முதற் சந்திப்பிலேயே குருநாதரின் இடியோசை போன்ற "அந்தக் கர்ச்சனை"; "ஆரடா நீ" என்ற அந்த "அதட்டல் மிரட்டல்" யோகநாதனின் ஆத்மாவைப்பற்றி மூடி மறைத்திருந்த மலமாசுக்கள், அழுக்குகள், களிம்புகள் யாவற்றையும் அகற்றித் தூய்மைப் படுத்தியது. செல்லப்பாச்சுவாமிகள் தாம் தேடிக்கொண்டிருந்த உத்தம சீடன் கிடைக்கப் பெற்றமையால் ஏற்பட்ட மகிழ்ச்சியில், அப்பொழுது உதிர்ந்த மந்திர மொழி "யாரடா நீ" என்பதாகும். முதலில் அவ்வாறு "யாரடா நீ" என்று அதிர்ச்சி தரக்கூடிய வகையில் அதட்டினாலும்; அடுத்த கணமே குருநாதர் தமது கருணை கூர்ந்த திருமுகத்தால் சீடனைப் பார்த்து, "நல்லது, வா, உன்னைப் போன்ற ஆளைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று "வாக்கியப் பிரசாதம்" வழங்கினார். "உனக்கே பட்டம் சூட்டப் போகிறேன்; வா வா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மலைத்துநின்ற யோகநாதனை அழைத்து அருகில் நிறுத்தி அருளும் பொருளும் நிறைந்த அறவுரைகளைச் சீடனுக்கு உபதேசித்தருளினார். யோகநாதன்; சிவயோக சுவாமிகள் ஆகத் தன்மாற்றம் பெற்றார்.

தமக்கு ஏற்பட்ட மனோநிலை பற்றி, யோகர் சுவாமிகள் தமது "குருதரிசனம்", "ஆசானைக் கண்டேன்" - நற்சிந்தனை பாடல்களில் உள்ளம் உருக மனம் திறந்து வெளிப்படுத்தியுள்ளார்.

"ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரில்
பேசாதன வெல்லாம் பேசினான் - கூசாமல்
நின்றேன், நீ யாரடா வென்றே அதட்டினான்
அன்றேயான் பெற்றேன் அருள்".

நல்லூர்த் தேரடியில் நிகழ்ந்த குருதரிசனத்தின்போது, செல்லப்பாச்சுவாமிகளின் திருவாயிலிருந்து மலர்ச்சிபெற்று; சீடன் யோகசுவாமிகளின் செவியில் ஒலித்தவை, "ஆரடா நீ"; "தேரடாவுள்"; தீரடாபற்று" என்னும், ஆழ்ந்தகன்ற, நுண்ணிய; மிகுந்த பொருள் பொதிந்த ஞான அருள்வாக்குகள் ஆகும். அவற்றைப் பின்வரும் நற்சிந்தனைப் பாடல்களில் தெளிய வைத்துள்ளார்.

"கருத்தில் நினைந்துருகிக் கைகூப்பும் மெய்யடியார்
வருத்த மெல்லாந் தீர்க்கும் வடிவேல் - திருத்தலத்தில்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
ஆரடா நீ யென்றான் அவன்".

"தன்னையறியத் தவமுஞற்றும் மாதவரை
அன்னையைப் போலாதரிக்கு மாறுமுகன் - சந்நிதியில்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தேரடாவுள் ளென்றான் சிரித்து".

"வண்டு பண் செய்யும் வளம் பெருகு நல்லூரில்
மிண்டு மனத்தவரை மேனிலைக்குக் - கொண்டுவரும்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தீரடா பற்று என்றான் சிரித்து".

"யாரடா நீ", "தேரடா உள்", "தீரடா பற்று" இம் மூன்றும் வெளிப்பார்வைக்கு கடின தொனியில் அதட்டல் ஒலியாக விளங்கியபோதும் அவை தம்மைப் பற்றிய உண்மை நிலையை அறிவதற்கு, சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்துள்ளமையை யோகசுவாமிகள் புரிந்துகொண்டார்.

"நான் யார்?" என்ற வினா; ஞானத் தேடலில் ஈடுபாடுடையவர்கள் தம்மைத் தாமே கேட்கவேண்டிய முதல் வினாவாகும். "நான் என்பது, இந்த உடம்பா; உயிரா?; மனமா? கருவி கரணங்களா? இதற்குச் சரியான விடையை அறிந்து, தெளிந்த பின்னர்தான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் தமது ஆன்மீகப் பயணத்தைத் தொடரமுடியும். எனவேதான் குருநாதன் முதற் சந்திப்பிலேயே சீடனை நோக்கி, "யாரடா நீ" என்று உறைப்பாகக் கேட்டார்.

"தேகமே நான்" என்ற உணர்வோடு வாழ்கின்ற சாதாரண ஒருவரின் தேகாபிமான உணர்வை விலக்கி மேலாம், "ஆத்மாவே நான்" என்பதை உணரவைப்பதற்கான ஆய்விற்குள் புகுவதற்கான முதலாவது ஞான ஒலியே, "யாரடா நீ?" என்ற வினா வடிவத்தில் அமைந்த குருநாதரின் ஞானமொழியாகும். அடுத்து "ஆத்மாவே நான்" என்ற விடையைத் தேர்ந்து எடுப்பதற்கு, ஒருவர் தன்னுட் சென்று தேடுதல் செய்யவேண்டும். அந்த வழியை உணர்த்துவதாக. "தேரடா உள்" என உபதேசித்துச் சீடனை வழிப்படுத்தினார். அகத்தினுட் சென்று அறிவதற்குத் தடையாக உள்ள உலகப்பற்றுக்களை ஒழித்தற் பொருட்டு "தீரடா பற்று" என மூன்றாவது மந்திர மொழியைக் குருநாதன் சீடனுக்கு உபதேசித்தருளினார். இவை மூன்றும் அர்த்தமுள்ள ஞான வாசகங்கள் என்பதை உணர்வோமாக. (தொடரும்...

---

## வாழை இலையின் நடுவில் ஒரு கோடு போட்டு இரண்டா பிரிச்சு வச்சிருக்கே... அந்தக் கோட்டைப் போட்டது யார்?

புராண காலங்களில் வாழை இலையின் நடுவில் கோடு கிடையாதாம். இராமாயண காலத்தில் ஒரு முறை ராமன் சாப்பிடும்போது, அனுமனையும் தன்னுடன் ஒரே இலையில் சாப்பிடச் சொன்னாராம். இருவரும் எதிர் எதிராக அமர்ந்தார்களாம். அப்போதுதான் அணில் முதுகில் கோடு போட்ட மாதிரி, வாழை இலையின் நடுவிலும் தனது கையால் ஒரு கோட்டைக் கிழித்தாராம் ராமன்.

ராமன் இருந்த பக்கத்தில் மனிதர்கள் விரும்பி சாப்பிடும் உணவு வகைகளும், அனுமன் இருந்த எதிர் பகுதியில் குரங்குகள் விரும்பிச் சாப்பிடும் காய்கறிகளும் பரிமாறப்பட்டதாம். அப்படிப் பரிமாறிய அந்தப் பழக்கம்தான் இன்னும் நம்மிடையே தொன்றுதொட்டு தொடர்ந்து வருகிறதாம்.

வாழை இலையில் சாப்பிடும் எல்லோருக்கும், சாப்பிடுமுன் ஒரு நொடி குழப்பம் வந்தே தீரும். பரிமாறும்போது இலையை எப்படிப் போடுவது? இலையின் நுனி இடது பக்கமா வரவேண்டுமா? வலது பக்கமா?

இலையின் நுனி, சாப்பிட அமர்ந்திருப்பவருக்கு இடது கை பக்கமாக வருகிற மாதிரி போடவேண்டும். ஏன்? நாம் சாப்பிடும்போது, வலது கையால் பிசைந்து சாப்பிடுவதால், இலையின் வலது பக்கம் அதிக இடம் தேவை. சரி, உப்பு, ஊறுகாய், இனிப்பு இதையெல்லாம் அதிகமாக சாப்பிட்டால் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது. கொஞ்சமாகத்தான் சாப்பிட வேண்டும். அதனால்தான் இலையின் குறுகலான இடத்தில் வைக்கப்படுகிறது.

சாதம், காய்கறிகள் இவற்றையெல்லாம் நிறைய சாப்பிடலாம். அதனால் அவற்றை இலையின் அகலமான வலது பக்கத்தில் பரிமாற வேண்டும். சரி... இலையில் முதலில் வைக்கப்படும் இனிப்பை, பலர் கடைசியாக சாப்பிடுகிறார்களே.... இது சரிதானா?

இல்லை. முதலில் இனிப்பு பரிமாறப்படுவதற்கு முக்கியமான காரணம் இருக்கிறது. நாம் இனிப்பை எடுத்து வாயில் வைத்த அடுத்தநொடியில் அந்த இனிப்பு உடனடியாக உமிழ்நீருடன் கரைந்து ரத்தத்தில் கலந்து மூளைக்குச் சென்று வயிற்றில் ஜீரண சக்திக்கு தேவையான அமிலங்களை சுரக்கச்செய்ய உத்தரவிடுகிறது. அதனால்தான் ஜீரணம் எளிதாக நடைபெறுகிறது.

இலையைப் போடுவதிலிருந்து, எப்படிப் பரிமாறுவது, எதை முதலில் சாப்பிடுவது... எல்லாவற்றையும் முறையாக வகுத்துத் தந்திருக்கும் நம் முன்னோரை எப்படிப் பாராட்டுவது?

*நேசிப்பதைவிட சுகமானது நேசிக்கப்படுவது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை அமாவாசைத் தினம்

– திரு **சிவசங்கரநாதன்** அவர்கள் –

தை அமாவாசை நாள் சைவ மக்களாகிய நமக்குப் பல வகையிலும் சிறப்பும், புனிதமும் பெற்று விளங்கும் திருநாளாகத் திகழ்கின்றது. உத்தராயணம் தை மாதத்தில் தொடங்குகின்றது. தேவர்களுக்குப் பகற்காலம் ஆரம்பிக்கின்றது. சகல சுப கருமங்களும், மங்கள நிகழ்ச்சிகளும் நடைபெறச் சிறந்ததாகிய உத்தராயணத்திலே வரும் முதல் அமாவாசை தை அமாவாசை ஆகும். ஆடி அமாவாசை போன்று தை அமாவாசையும் பிதிரர்கள் என்றும் தென்புலத்தார் என்றும் கூறப்படுகின்றவர்க்கு அருங்கடன் செய்வதற்குரிய சிறப்புநாள் என்பர். இத்தினத்தில் தென்புலத்தாரை வழிபட்டுத் தர்ப்பணம், சிரார்த்தம், தானம் முதலியவற்றைச் செய்வதால் பிதிரர்கள் மகிழ்ந்து நமக்கு அனுக்கிரகம் செய்வார்கள். தை அமாவாசையில் விரதம் இருந்து வழிபாடு செய்வதால் பல நன்மைகள் கிட்டும். பல்வேறு துன்பங்கள் எதிர் பாராத கஸ்டங்களிலிருந்தும் காப்பாற்றப்படுவோம்.

நம் தாய் தந்தையர்களை அவர்கள் உயிரோடு இருக்கும்போது நன்கு பேணி மரியாதை செய்து மகிழ்வித்து வருவதுடன் அவர்கள் தேகவியோகமாகிய பின்பும் சிராத்தம் செய்தல், அமாவாசை பௌர்ணமி நாட்களில் அவர்களை நினைத்து விரதம் அனுட்டித்தல் என்பவற்றைப் பிள்ளைகள் மேற்கொள்ள வேண்டும் எனச் சைவ சமய நூல்கள் கூறுகின்றன. தென்புலத்தார் வழிபாட்டினை அருங்கடன் என்றும் இன்றியமையாத கடமை என்றும் நமது சமயம் உணர்த்துகின்றது.

அமாவாசை மாதந்தோறும் வருவது என்றாலும் தை அமாவாசையும் ஆடி அமாவாசையும் விசேஷமானவையாம் என்பதை அனைவரும் மனதிற்கொள்ள வேண்டும். தை அமாவாசை இன்னொரு சிறப்பையும் பெற்றுள்ளது. தேவி உபாசகர் அபிராமிப்பட்டருக்கு அம்பாள் திருக் காட்சி கொடுத்து அருளியது தை அமாவாசை தினத்தில் ஆகும். அமாவாசை அன்று முழு இருட்டாக இரவு நேரம் இருக்கும். ஆனால் அமாவாசையில் பூரண சந்திரப் பிரகாசத்தை ஏற்படுத்திய அதே சமயம் அபிராமிப்பட்டரின் தியானத்திலும் சந்திரப் பிரகாசத்தை ஏற்படுத்தி அவரின் பக்தியை உலகறியச் செய்தவள் அன்னை அபிராமி. அந்த அற்புதம் நிகழ்ந்தது ஒரு தை அமாவாசையில் ஆகும். தமிழ்நாட்டில் காவிரி நதியின் தென் கரையில் அமைந்து உள்ளது திருக்கடவூர் என்னும் சிவத்தலம். இங்கேதான் மார்க்கண்டேயருக்காக எம்பெருமான் காலனைக் காலால் உதைத்தருளினார் என்று புராணம் கூறும். தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தபோது பெற்ற அமுதக் குடத்தை வைத்து எடுக்க முடியாது இறைவனின் திருவருளை வேண்டி நின்றதும் திருக்கடவூரில் ஆகும். இத்திருத்தலத்தில் அமுதசடேசுவரர் என்னும் திருப்பெயரையுடைய இறைவனுடன் வீற்றிருந்து திருவருள் பாலிக்கும் அம்பிகையின் பெயர் அபிராமி.

*விடியல் என்பது கிழக்கில் இல்லை. நம் உழைப்பில் உள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமிப்பட்டர் இதே திருக்கடவூரில் பிறந்தவர். அன்னை அபிராமியை மறவாத அருட் சிந்தையராய் விளங்கினார். அன்னையின் புகழ் பாடுவதையே அரும்பணியாகக் கொண்டிருந்தார். தஞ்சாவூரை ஆட்சி செய்து வந்த சரபோஜி மன்னர் தை அமாவாசை தினத்தன்று காவிரி கடலோடு கலக்கின்ற காவிரி சங்கமத்தில் புனித நீராடி முடித்த பின்பு திருக்கடவூர் இறைவனையும் அன்னை அபிராமியையும் வணங்குவதற்காகத் தமது பரிவாரங் களுடன் மன்னர் வந்தவேளை அபிராமிப்பட்டர் அபிராமி அம்பாள் சந்நிதியில் தியானத்தில் ஒன்றித்திருந்தார். மன்னர் வந்ததைப் பட்டர் காணவில்லை. தரிசனம் முடிந்ததும் மன்னர் அபிராமிப்பட்டரைப் பற்றி விசாரித்தார். அவர் ஒரு பித்தர் என்று கூறப்பட்டாலும் அவருடன் பேச வேண்டும் என்ற விருப்பம் மன்னருக்கு ஏற்பட்டது. பட்டரின் தெய்வீகப் பொலிவு மன்னரை ஈர்த்திருக்க வேண்டும். அபிராமிப்பட்டர் தியானத்திலிருந்து விழித்தார். ஆனாலும் அம்பிகையின் அருளொளியில் ஆழ்ந்து மூழ்கிப்போய்ப் பேரானந்த திளைப்பிலேயே இருந்தார். மன்னர் அபிராமிப் பட்டரை நோக்கி இன்று என்ன திதி என்று கேட்டார். அதற்குப் பட்டர் இன்று பௌர்ணமி என்றார். மன்னர் அகன்று விட்டார்.

சுய நினைவு வந்ததும் அபிராமிப்பட்டர் நிதானம் தவறித் தாம் மன்னரிடம் அமாவாசையைப் பௌர்ணமி என்று சொன்னதை நினைத்து பெரும் அச்சம் கொண்டார். அன்னையிடம் ஓடோடிச் சென்று தன்னைக் காத்தருள வேண்டும் என விண்ணப்பித்தார். அபிராமியை வேண்டி அந்தாதி பாடத் தொடங்கினார். அன்று பௌர்ணமிதான் என்று நிரூபிக்கும்படி வேண்டினார். சூரியனும் மறைந்தான். அபிராமி அன்னை ஆனந்த ஜோதியாய் அருள் ஞானப்பிழம்பாய்ப் பட்டருக்குக் காட்சி கொடுத்துத் திருவருள் பாலித்தாள். அம்பிகை தனது காதை அலங்கரித்த திருத்தோட்டினைக் கழற்றி கிழக்குத் திசையில் வானத்தில் வீச அது பூரண சந்திரன்போலப் பொலிவுற்ற ஒளி வீசியது. இந்த அற்புதக் காட்சியை மன்னர் சரபோஜி உட்படச் சகலரும் கண்டு களித்தனர்.

அன்னை அபிராமியின் திருவருட் சிறப்பையும் அபிராமிப்பட்டரின் பக்தி சிறப்பையும் எண்ணியெண்ணி வியந்தனர். இவ் அற்புத நிகழ்வு நடந்தது தை அமாவாசை அன்றுதான். அபிராமி அந்தாதி பிறந்தது அமாவாசை பௌர்ணமியும் ஆனது. நாமும் அம்பிகையை வழிபட்டு அபிராமி அந்தாதி பாடி அருள்பெற்று உய்வு பெறுவோமாக! நாயன்மார்களுக்கு விழா எடுப்பதுபோல் அபிராமி பட்டருக்கும் சைவ மக்கள் விழா எடுத்து வருவது வழக்கம் பெற்றுள்ளது. அன்னை பராசக்தியை வழிபாட்டின்போது அபிராமியந்தாதி படித்துப் பயன் பெறுவோமாக.

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஜனவரி | 30 | தை 16 | செவ்வாய் | சண்டேஸ்வரர் |
| பெப்ரவரி | 03 | தை 20 | சனி | திருநீலகண்டர்.<br>தாயுமான சுவாமிகள் |
| பெப்ரவரி | 07 | தை 24 | புதன் | நயினாதீவு முத்துக்குமாரசாமி |
| பெப்ரவரி | 19 | மாசி 07 | திங்கள் | கச்சியப்ப சிவாச்சாரியார் |
| பெப்ரவரி | 26 | மாசி 14 | திங்கள் | திருவள்ளுவர் |

*எதிர்பார்ப்பை குறைத்துக்கொண்டால் ஏமாற்றம் ஒன்றும் பெரிதாக இருக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவிலை வரமாக்கிப் பேறாக்கிய ஸ்ரீமான் குமாரசாமிப் புலவரின் மகாமந்திரமே "கற்றாங்கு ஒழுகு"

(தொடர்ச்சி...

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

1922ஆம் ஆண்டு தைப்பூச நன்நாளிலே நிலையம் எடுத்து, விஜயதசமியன்று கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை என்ற நாமம் கொண்டு, சீராகவும், நேர்த்தியாக வும் வேயப்பட்ட நீட்சியான ஓலைக் கொட்டிலில் ஸ்ரீமான் குமாரசாமிப் புலவர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. அதுவே இங்கு ஒரு மாணவமய சமூகமுருவானது. கொக்குவில் மக்களில் பெரும்பாலானவர்கள் கைத்தொழில், விவசாயம், வர்த்தகம், புகையிலை சார்ந்த பல்தொழில் வல்லுநர்கள் ஆன காரணத்தினால், கல்வியில் அதீத நாட்டத்திற்காக, புலவர் அவர்கள் தினமும் தேவார பாராயணங்களோடு, நீதிநூல் பாடங்களையும் இசையோடு பாடிக்கொடுப்பார்.

ஆம்! "பாலுந் தெளிதேனும்
பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு
நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத்
தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா" என்பதை மாணவர்க்கு ஆழப்பதியுமாறு இராகத்தோடு பாடுவார். புலவர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் பல் கலைகளையும் கற்றுக்கொண்ட பேறிதனால், பாலர்கள் முதல் பருவ பதின்ம வயதானவர்க்கும் ஏற்ற தமிழ், சமயம், இலக்கியம், இலக்கணம், கணிதம், பொது அறிவு, மனனம், உறுப் பெழுத்து, வாய்ப்பாடு, பன்னவேலை, பண்ணிசை, சங்கீதம், புராணபடனம், கதாப்பிரசங்கம், நாடகம், சித்திரம், சுகாதாரம், விளையாட்டு ஆகிய பாடங்களை எளிதாக விளங்கும்படியாக அவரவர் வயதுக்கு ஏற்றவாறு தம்மை உருக்கியும் வருத்தியும் கற்பித்தார்.

சிறு கொட்டிலாக இருந்த பள்ளி நீட்சிபெறுமாறு மாணவர் தொகை அதிகரிக்கவே ஆசான்களை நியமிக்கவேண்டிய தேவையும் பொறுப்பும் ஏற்பட்டது.

இதன் பிரகாரம், குருமார்களின் வேதனக் கொடுப்பனவுகளுக்காகவும் மாணவ மணிகளின் ஆதார - ஆகார செலவுகளுக்காகவும் வாசலில் இரந்து மடிப்பிச்சையை வீடு வீடாகப்பெற்று, ஆசார ஆசான்களின் வேதன வேண்டுகையைப் புலவர் பொறுப்போடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றினார். இஃது ஒரு புண்ணிய கைங்கரியமாகும். மடிப்பிச்சை எடுப்பதென்பது சாதாரண விடயமன்று. தன்னிலையிலிருந்து இறங்கி இரந்து பணிந்து கைநீட்டி வாங்குவதாகும். எதற்காக? பொதுப்பணி விருத்திக்காக.

புலவருக்கு நாளிலும் பொழுதிலும் கல்விக்கான தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க அதனைச் சமாளிக்க முகம் கொடுப்பவராய் நிலை தளராமல் மனம் சோராமல் தமக்கிருந்த முதுசொமான காணிகளை விற்று ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலைக்கு உயிரூட்டினார்.

இவ்வேளையில் ஸ்ரீமான் சேர். பொன். இராமநாதன் அவர்கள் ஸ்தாபித்த மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மாணவிகளுக்குத் தேவாரப் பண்ணிசையும் சங்கீதமும் கற்பிப்பதற்குப் பாதுகாப்பானவரும் பொருத்தமானவரும் பயபக்தியானவரும் ஆன ஒருவரை தேடிய சந்தர்ப் பத்தில், ஸ்ரீமான் குமாரசாமிப் புலவரது பெயரையே யாழ்ப்பாண சமூகம் சிபார்சு செய்தது. சேர். பொன். இராமநாதனும் மிக மகிழ்ந்து சுமார் 12 வருடகாலம் பண்ணிசை ஆசிரியராகக் கல்லூரிக்கு வரம் சேர்த்தார்.

புலவரிடம் கல்விபயின்ற ஞானபண்டித வித்தியாசாலை மாணவனான செனெட்டர் நீதிராஜா அவர்களின் பேருதவியால் கிழக்கு நீள் மண்டபம் ஞானபண்டித வித்தியாசாலைக்கு ஆன சித்திகளை அள்ளிக்கொடுத்தது.

அதேபோல சேர். பொன் இராமநாத வள்ளலும், இந்து போர்ட் இராஜரட்ணம் அவர் களும் தக்க நேரத்தில் தக்க உபகாரங்களை நல்கி புலவருக்குப் பக்கபலமாக இருந்து கல்விப்பேறும் நல்வித்தையும் காட்டி பள்ளிக்கூடமதைத் தரம் உயர்த்த அரும்பாடு பட்டார்கள். தவத்திரு கிருபானந்தவாரியார் அவர்களின் ஆசீர்வாதமும், அருளுரையும் 1953இல் இப் பாடசாலைக்குப் பேறாகிட, பொன்விழா 1972இல் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 1982இல் புலவர் வானுலகின் வசமானார்.

பலரது செவிவழியாகப் பேசப்பட்டதன் வாயிலாக இவரது தாயின் பெயர் மூன்று விதமாக போற்றப்படுகிறது. அன்னப்பிள்ளை, முத்துப்பிள்ளை, சிவபாக்கியம். இது ஆராய்வுக் குரியது.

மேலும், யாழ் மாவட்டத்திலே சமயம், பண், புராணம், தீட்சை, கிரியை, பிணக்குகள், தமிழ் இலக்கியம், இலக்கணம், உடை, நடை, பாவனை, விவாக ஜோதிடம் தொடர்பான ஐயங்களை நேர்மையாகத் தீர்க்கும் ஒரு நீதிபதியாகவும் புலவர் அவர்கள் விளங்கினார்.

உதாரணமாக ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை என்ற பெயரில் வித்தியாசாலை- வித்தியாசாஃல என பழைய எழுத்து வரிவடிவமாகப் பாடசாலையில் பொறிக்கப்பட்டுள்ளது. இது ஒன்றுதான் 100 ஆண்டு பழைமையைக் காட்ட ஓர் அடையாளமாகும். அதேபோல் இப் பாடசாலையின் மகுடவாக்கியம் கற்றாங்கொழுகு என்பதாகும். இது சற்று எளிதாகி கற்றாங்கு ஒழுகு என்றும், கற்று ஆங்கு ஒழுகு என்றும் மாறினால் சுவை கெடுமே.

ஃல - இந்த - லையன்னா புலவரின் ஞாபகமாக 1000 வருடங்கள் என்ன சூரியர் சந்திரர் வாழுமட்டும் வாழ்வதாக. இந்த எழுத்தின் அழகுக்கு நிகர் எந்த மொழியிலும் இல்லை. என்னைப் போன்றவர்கள் ஃல - இந்த எழுத்தினைக் கவனத்தோடு காதல் செய்வார்கள்.

*புத்தகத்தைத் தலைகுனிந்து பார். உன்னை தலைநிமிர்ந்து நடக்கவைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரசாமிப் புலவரின் மேலதிகப் பணியாக 1920 - 1929 காலப்பகுதியில் லீவு கிடைக்கும் போதெல்லாம், பரமேஸ்வராக் கல்லூரியிலும் தேவாரப் பண்ணிசை ஆசிரியராகக் கடமையாற்றிய மகிமையால் பல மாணவர்கள் ஆன்மீக ஒழுக்க நெறியில் புகுந்து இல்லற மாண்மிய வரங்களைச் சொந்தமாக்கியுள்ளார்கள். உலகை வென்றும் உள்ளார்கள்.

அதிபர், அமரர் சிவபாதசுந்தரம் அவர்கள், பரமேஸ்வராக் கல்லூரியின் வளர்ச்சியில் குமாரசாமிப்புலவரின் ஆன்மீகப் பண் இசையின் பணியும் பங்கும் மகத்தானது என்று தனது ஏட்டில் பதிவிடுகின்றார்.

அதே சமயம் அளவெட்டியின் கண்ணமைந்த புராதனப் புகழ்பெற்ற பிள்ளையார் ஆலயங்களில் சங்கீத கதாகாலேட்சபம் செய்து மட்டிலாப் புகழ் பெற்றுள்ளார்.

மாருதப்புரவீகவல்லியால் ஸ்தாபிக்கப்பட்ட ஏழு விநாயகர் ஆலயங்களிலும் ஆற்றிய கதாப்பிரசங்கங்களினால் சைவ சமயம் தனித்துவமாகப் பேணப்பட்டது.

இணுவில், கந்தர்மடம், நீராவியடி, நல்லூர், சந்நிதி, சாவகச்சேரி, அளவெட்டி, மானிப்பாய், மூளாய், மாதகல், தீவகம், மாவிட்டபுரம், கொக்குவில், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், மட்டக்களப்பு, கொழும்பு, மலையகம் ஆகிய இடங்களில் சங்கீத உபந்நியாசம் பக்கவாத்திய சகிதம் புலவர் அவர்களால் நிகழ்த்தப்பெற்று சமயம் எழுச்சிபெற வழிசமைத்தார்.

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தின்கண் குமாரசாமிப்புலவர் அவர்களது தெய்வீகப் பணியைப்போற்றும் வகையில் பென்னாம் பெரிய படம் உரிய சமய சம்பிரதாய உடை நடை பாவனையோடு இருக்குமாறு வரையப்பட்டுள்ளது. இவரோடு இந்த ஆலயத்திலே பலமுறை வருகைதந்து கதாப்பிரசங்கம் நிகழ்த்திய திருமுருக கிருபானந்த வாரியாருக்கும் உரிய கௌரவம் அளித்து பெரியதொரு தெய்வாம்சமான படம் அழகாக வரையப்பட்டுள்ளது.

வாரியாரின் வருகையும், புலவரின் பணியும் இலங்கைக்குச் செழிப்பையும் சிவமய சேமிப்பையும், சரியை, கிரியை, யோக, ஞான விழுமியங்களையும் நல்கியது.

மேலும் தவத்திரு யோக சுவாமிகளின் அருட்கடாட்சமும், பிரசன்னமும் நற்சிந்தனா அனுகூலமும் புலவரைச் சித்திகரமாக்கியது.

இன்று ஞானபண்டித வித்தியாசாலையில் கல்வி கற்று சிகரம் தொடும் உள்நாட்டு, புலம் பெயர் சமூகத்தவர்கள் உள்ளக பௌதீக மேம்பாடு கருதிய செயற்திட்டங்களை வடிவமைத்து புலவரின் நாமத்தை மந்திரமாக்கியுள்ளார்கள். அவரது ஊஞ்சல் பாட்டு லாவண்யத்திலே மஞ்சவனப்பதி முருகன் பேறாகின்றான். (முற்றும்)

இனிவரும் காலத்தில் நீங்கள் பல்வேறு தெய்வீக வெளிப்பாடுகளைக் காண இருக்கிறீர்கள். இந்த ஆனந்தத்தை தெய்வீகத்தின் அருகாமையில்தான் அடைய முடியுமே தவிர வேறெங்கும் இல்லை. நான் உங்களைப்போல பேசுகிறேன், சிரிக்கிறேன், நடக்கிறேன், சாப்பிடுகிறேன் என்ற மாயையில் விழுந்து விடாதீர்கள். உடலைப் பற்றிய உணர்வுகளால் மயங்கிவிடாதீர்கள்.

*உழைப்பு வறுமையை மட்டும் விரட்டவில்லை. தீமையையும் விரட்டுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுர்யுகங்கள்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

இன்று நாம் வாழும் கலியுகம் பற்றி சற்று சிந்திப்போம். உலகின் கால அளவை 4 பிரிவுகளாக அதாவது சதுர்யுகங்களாக வகுத்துள்ளார்கள் எமது முன்னோர்கள். அவையாவன க்ருத, திரோத, துவா, கலியுகம் என்பனவாம். இவற்றுள் இப்போது நாம் வாழ்ந்துகொண்டிருப்பது கலியுகம். இஃது நீங்கள் யாவரும் நன்கு அறிந்ததே.

இந்த காலகட்டங்களின் தன்மைகள் யாதென நோக்கின் க்ருத யுகத்தில் அதாவது முதலாவது யுகத்தில் மக்கள் வாழ்ந்த சமுதாயத்தில் வீரம் தர்மம் நிலைத்திருந்தது. மக்கள், தேவர் யாவரும் நிம்மதியாக வாழ்ந்து வந்ததாகச் சொல்லப்படுகின்றது. இலக்கியங் களில் படித்தும் இருக்கின்றோம்.

தொடர்ந்து திரோதா யுகத்தில் மக்கள் சமுதாயத்தில் அதர்மமும் கலக்கப்பெற்று 75 விகிதம் தர்மமே நிலைத்திருந்தது. அடுத்து வந்த துவா யுகத்திலே வாழ்ந்த மக்கள் மத்தியில் 50 விகிதமே தர்மம் நிலைக்கத் தலைப்பட்டது. மிகுதி 50 விகிதமும் அநியாயம் அதர்மச் செயல்கள் இடம்பெற ஆரம்பித்துவிட்டன. பின்னர் தொடர்ந்து நாம் வாழும் கலி யுகத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். நீங்களும் நாமும்தான் பார்த்துக்கொண்டிருக்கின் றோமே இந்தக் காலகட்டத்தில் 75 விகிதம் அதர்மமும் 25 விகிதம் தர்மமும் நிலைக்கும் என எமது முன்னோரால் கூறப்பட்டுள்ளது. இது தவறு என்று சொல்லமுடியாத அளவுக்கு இன்று எமது வாழ்க்கை சான்றாக அமைகின்றது.

உதாரணமாக எமது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் நவீனம் என்ற போர்வை யில் 75 விகிதம் எமது அன்றாட வாழ்வு தாறுமாறாக நடந்துகொண்டு வருகின்றதை யாம் அவதானிக்கின்றோம். உதாரணத்துக்கு சமுதாயம் மத கலாசாரம் என்ற ஒவ்வொரு துறை யிலும் அதர்மமே தலைதூக்கி நிற்பதாம். எந்த ஒரு நாட்டையும் எடுத்துக்கொள்ளுங்கள். வெளிநாட்டுப் போர் என்ற அவசியமே தேவை இல்லை. ஆங்காங்கு உள்நாட்டுப் போர்கள் ஒரே நாட்டு மக்கள் தம்முள்ளே எத்தனை தீவிரமாக அடிபட்டுக்கொள்கின்றார்கள். நாடுகள் சிறியனவாக இருக்கலாம். ஆனால் அங்கு காழ்ப்புணர்ச்சியும் போரும் மிகப்பெரியதாக பெரும் அழிவைக் கொண்டுவந்து, ஏன் இந்நாட்டில் யாம் பிறந்தோம் என்ற அளவுக்கு மக் களைச் சிந்திக்க வைக்கின்றன. இதுதான் கலியுகத்தின் கோலம் என்று சொல்லப்படுகின்றதோ! ஆனால், இதனை இப்படியே யாம் விட்டுவிட முடியுமா அல்லது தாங்கிக்கொள்ளத்தான் முடியுமா. எனவே நாமும் தர்மத்தை நிலைநாட்ட எம் அளவில் முயற்சி செய்தல் வேண்டும். இதற்கு எமக்குப் பெரிய அந்தஸ்தோ அல்லது பட்டம் பதவியோ தேவையில்லை.

*இளமையில் சோம்பல் முதுமையில் வருத்தம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயத்தையும் ஒழுங்கையும் கொடுத்து உதவும் மனப்பான்மையும், புரிந்துணர்வையும் நாம் வளர்க்க வேண்டும். பேச்சோடு விட்டுவிடாமல் எமது செயல்களிலும் இந் நற்பண்புகளை யாம் வாழ்ந்துகாட்டவேண்டும். இந்த நற்பண்புகள் எத்தனை இனியவை! வரவேற்கத்தக்கவை என்பது உங்களுக்குத் தெரியாதது அல்ல. இவைதான் மனித விழுமியங்கள். இந்த நற் பண்புகள் ஒவ்வொரு வீட்டிலும் கிடைக்கப்பெற்றால் வீட்டில் நிம்மதி, அயலில் நிம்மதி, நாட்டில் நிம்மதி, ஏன் உலகிலே நிம்மதி கிடைக்கும். கலியுகத்தின் இருண்ட பக்கத்தை நாம் ஏன் சாடக்கூடாது. சிந்தித்துப் பாருங்கள்! உள்ளங்கை அளவான எமது இருதயத்தில் மலையளவு போராட்டம் ஏன்? சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? அதற்கு மாற்று மருந்து வேண்டாமா? எம்மளவில் தன்னும் நாம் நிம்மதியைத் தேடித்தான் ஆக வேண்டும். இனி எம் முன்னோர் வாழ்ந்த 3 படிமங்களிலும் என்னதான் நடந்தது என்று பார்ப்போமா?

அந்த விதத்தில் நாம் சற்று சிந்தித்துச் செயற்பட வேண்டும். பொறுமையையும் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கையும் நாம் கடைப்பிடிப்பதோடு வளரும் எமது சந்ததியினருக்கும் நாம் இதனை வலியுறுத்தியாக வேண்டும்.

அபிப்பிராய பேதமேற்பட்டபோது, க்ருத யுகத்தில் தேவர்களும் அசுரர்களும் வெவ்வேறு உலகத்தில் வாழ்ந்த வண்ணம் சண்டையிட்டார்கள்.

தொடர்ந்து வந்த த்ரேதா யுகத்தில் இவ்விரு சாராரும் ஒரே உலகில் வெவ்வேறு பகுதியிலிருந்த வண்ணம் சண்டையிட்டனர்.

அடுத்து வந்த 3ஆவது யுகத்தில் ஒரே குடும்பத்தில் வெவ்வேறு பகுதிகளிலிருந்து சண்டையிட்டார்கள்.

4ஆவது யுகமான கலியுகத்தில் ஒவ்வொரு மனிதனுக்குமுள்ளே தனித்தனி போராட்டங்கள் இடம்பெறுகின்றன. இது இன்றைய நிலை. ஒரு உதாரணத்துக்குச் சொல்லப் பட்டது.

சுருங்கச் சொன்னால் முதல் யுகத்தில் தேவர்கள் அசுரர்கள் என வெவ்வேறு உலகங்களிலிருந்து போராடினர். 2ஆவது யுகத்தில் ஒரே உலகில் வேறு பகுதிகளிலிருந்து போராடினர்.

3ஆவது யுகத்தில், ஒரே குடும்பத்தில் வெவ்வேறு மனிதர்களாக இருந்து போராடினர். இன்றைய கலியுகத்தில் மனிதர் தம்முள்ளே போராட்டம் நடத்தி நிம்மதியிழந்து வாழ்கின்றனர். இதுவே இன்றைய பரிதாபத்திற்குரிய நிலை.

இந்த வகையில் இன்று எமது மனதினுள்ளேயே தேவ அசுர யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருப்பதையும் உணர்கின்றோம். இந்நிலையை யாம் நீடிக்க விடக்கூடாது. என்றும் தர்மமே வென்றமை வரலாறு கூறும் உண்மை. எனவே நாம் இறை நம்பிக்கை இறை வழிபாடு மூலம் எம்மிடையே காணப்படும் அசுர குணங்களை அழித்து தேவ குணங்களை வளர்க்க வேண்டும். பொறுமை, புரிந்துணர்வு, இரக்கம், தியாகம் ஆகிய குணங்களை நாம் ஒவ் வொருவரும் பின்பற்றினால், கலியுகமும் பொன்யுகமாக மாற வாய்ப்புண்டு. ஏனெனில் சத்தியத்தின் பக்கமே இறையருள் கிட்டும், நியாயம் கிடைக்கும்.

நாம் மாத்திரமல்ல எமது இளைய சந்ததியினரையும் சத்திய வழியில் நடக்க வைப்பது எமது தலையாய கடமை ஆகும்.

***திறமைதான் ஏழையின் மூலதனம்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை அமாவாசை சிறப்புக்களும் பலன்களும்

– திரு க.கு.க. சிவபாலன் அவர்கள் –

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மார்க்கு அறியோய் நீ
வேண்டி என்னை பணி கொண்டாய்
வேண்டி நீ யாஅருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உந்தன் விருப்பன்றே.

அடியேன் விரும்பத்தக்கனவற்றையும் அறிபவன் நீ அவற்றை உன்பால் இரந்து கேட்க முழுவதையும் தருபவனும் நீயே. உன்னைக் காண விரும்பிய பிரமனும் திருமாலும் காணுவதற்கு அரியவனானவனும் நீயே. என்னை நீயே விரும்பி வந்து ஆட்கொண்டாய் நீ எதனை விரும்பி அருள்செய்தாயோ யானும் அதனையே விரும்புவது அல்லாமல் இன்னும் நான் விரும்பக்கூடியது யாதாகினும் இருக்குமாயின் அதுவும் உன்னுடைய விருப்பத்தின்படி நிகழ்வதல்லவா.

இறைவனது கருணையால் அமாவாசை, பௌர்ணமி, அட்டமி, நவமி, குளிகண்டம் மற்றும் ஒவ்வொரு விடயமும் சைவ சமயத்தில் மட்டுமே உள்ளது. அதன்மூலம் வழிபாட்டில் நல்ல நாட்களை தெரிந்து நலமுடன் வாழ்ந்து இறை அன்பு பெற்று நன்னெறியில் நடந்து நாமும் நம் சந்ததியும் நற்கதியடைவோம்.

தை அமாவாசை, ஆடி அமாவாசை, புரட்டாதி மாளய அமாவாசை ஆகிய தினங்களில் பிதிர் கடன்களை நம் முன்னோர்கள் ஆத்ம விமோசனம் பொருட்டு இறை வழிபாட்டுடன் பிரார்த்தனை செய்வதன்மூலம் நம் சந்ததிகளின் பிதிர் தோஷம் நீங்கவும், அவர்களது தீய பழக்கவழக்கங்கள் நீங்கவும் மாதம் ஒருநாள் வரும் அமாவாசை தினத்தை சைவ ஆசாரமாக இருந்து இறைவனை துதிப்போம்.

நாம் இறைவனை திருவாசகம் என்னும் தேனை சிவ வாசகமாக காலை, மாலை தினம் தவறாது ஓதி தொழ வேண்டும். பிரமதேவன் ஆலோசனைப்படி மகன் தட்சன் ஆயிரம் வருடம் கருணாநிதியாகிய சிவனை நோக்கி தவம் இருந்தான். ஏனெனில் பிரளய காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியும் அந்தமும் இல்லாதவர் சிவன். பிரம்மாவும் விஸ்ணுவும் அக் காலத்தில் ஒடுங்கி அழிந்தும் விடுவார்கள். அதனால் பிரமா தனது மகன் தட்சனுக்கு ஆயிரம் வருடம் தவம் இருந்து சிவனிடம் வரம்கேட்டால் எல்லாம் தருவார் எனக் கூறினார். அப்படி தவம் இருந்த தட்சனுக்கு முக்கண்ணன் தோற்றம் கொடுத்து என்ன வரம் வேண்டும் என தட்சனிடம் கேட்கிறார். தான் தட்சணாபுரி என ஓர் உலகம் அமைத்து அவ் உலகில் தேவர்கள், முனிவர்கள் பணி செய்யவும் ஆயிரம் யுக காலம் ஆழவும் பணிந்து வேண்டினான். மேலும் கைலாயம் போலவும் உங்கள் இடப்பாகம் இருப்பவளாகிய உமை தனது மகளாகவும் நீங்கள் மருமகனாகவும் வரவும் தனது பெயருடைய ஓர் உலகம் அமைத்து தரவேண்டும் என வேண்டினான்.

அவ்வாறு கேட்ட வரம் எல்லாம் கிடைத்தது தட்சன் மனைவியாகிய வேதவதியையும் திருமணம் செய்து அதன் வழியில் ஆயிரம் ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்தார்கள். தட்சன் தனது ஆயிரம் பிள்ளைகளையும் சிவனை நினைத்து தவம் இருக்கும்படி அனுப்பி உங்கள் பாட்டனாராகிய பிரம்மா செய்யும் படைக்கும் தொழிலை நீங்கள் செய்வதற்குரிய வரத்தை கேட்கும்படியும் எங்கள் தட்சணாபுரி உலகம் சீரும் சிறப்புடன் இருக்க வேண்டும் என்றும் கேட்குமாறு கூறினான். அத்தகைய தவத்தை செய்யப் போன ஆயிரம் பிள்ளைகளை யும் நாரதர் கண்டு எங்கு போகிறீர்கள் என வினவ, தந்தை சொன்னபடி சிவனிடம் முத்தி வரம் கேளுங்கள் அதுதான் சிறந்தது என்று கூறவும் ஆயிரம் பிள்ளைகளும் அவ்வாறே வரம் பெறப்போகின்றோம் என்றனர். அதன்படி சிவனிடம் முத்தி வரம்பெற்று அவன் தாள் அடைந்தனர். இதையறிந்த தட்சன் மீண்டும் ஆயிரம் பிள்ளைகளை உருவாக்கி அவர்களையும் முன்பு கேட்ட வரத்தையே கேட்கும்படி அனுப்ப நாரதரின் சொற்படி சிவனிடம் முத்தி வரம்பெற்று முத்தியடைந்தனர். இந் நிகழ்வுகள் நாரதரால் நடந்தது என அறிந்த தட்சன் நாரதரை அழைத்து அவரை திரிலோக சஞ்சாரியாக போகக் கடவது என சபித்தான். அச் சாபத்தின்படியாக நாரதர் குறிப்பிட்ட நேரத்துக்கு மேல் ஒரே இடத்தில் நிற்கமுடியாது.

இதனால் தட்சன் ஆண்பிள்ளைகளைப் பெற்றதனால் இவ்வாறு ஆகிவிட்டதென வருந்தி பின்னர் ஐம்பது பெண்பிள்ளைகளைப் பெற்றான். அதில் இயமதர்மராஜாவுக்கு பத்துப் பெண்களை திருமணம் செய்துகொடுத்தான். அதற்கு முன்னதாகவே பதின்மூன்று பெண்களை காசிப முனிவருக்கு திருமணம் செய்து கொடுத்தான். அக் காசிப முனிவரின்மூலம் பதின்மூன்று பெண்களும் சகல ஜீவராசிகள், தேவர்கள், மனிதர்கள் உட்பட எல்லாவற்றையும் படைத்தார்கள். நமக்கெல்லாம் மூத்த தந்தை காசிபர். அதனால்தான் அருணகிரிநாதர் திருப்புகழில் காசினியில் பிறவாதே என்றார். காசினியில் பிறந்தால் முத்தி அடைய முடியாது. இறந்தால் முத்தி அடையலாம். (காசி- உலகம்) மிகுதி 27 பெண் பிள்ளைகளும் முழு பௌர்ணமியை பார்த்து சந்திரனின் அழகைக் கண்டு மயங்கி நின்றார்கள். தனது 27 பெண் பிள்ளைகளும் பூரணச் சந்திரனை விரும்புகின்றார்கள் என்று நினைத்து சந்திரனை அழைப்பித்து தனது பெண் பிள்ளைகள் அனைவரையும் திருமணம் செய்யும்படி சொன்னதும் சந்திரனும் விருப்பத்துடன் ஏற்றுக்கொண்டான். தட்சன் பெண் பிள்ளைகளை தாரைவார்த்து

***நீ வீணாக்கும் ஒவ்வொரு நொடியும் உன்னை வறுமைக்குள் தள்ளிவிடும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கும்போது தனது பிள்ளைகள் அனைவரையும் ஒரேவிதமாக கவனிக்கும்படி கூறினான். சந்திரனும் ரோகிணியுடன் மட்டும் கூடிய அன்பு செலுத்தினான். இதைக்கண்ட மற்றப் பெண்கள் அனைவரும் தட்சனிடம் முறையிட்டார்கள். தட்சனும் சந்திரனை அழைத்தபோது ரோகிணியுடன் பிரசன்னமாகினான். மற்ற பெண்கள் எங்கே என தட்சன் வினாவ அவர்கள் சந்திர உலகத்தில் இருக்கின்றார்கள் என்று சந்திரன் கூறியதும் அவர்கள் நேற்றே என்னிடம் வந்துவிட்டார்கள் எனவும் எனக்கே பொய் சொல்லுகின்றாய் என்று கடிந்து நீ தேய்ந்து மறைந்து போவாய் என சபித்தான்.

முன்னர் தேய்பிறை, வளர்பிறை சந்திரனுக்கு ஏற்பட்டதில்லை. தட்சனின் சாபத்தால் தான் இந்நிலை சந்திரனுக்கு ஏற்பட்டது. சந்திரன் பிரமனிடம் ஓடிச்சென்று முறையிட்டான். பிரம்மா தட்சன் தன் சொல்லை கேட்கமாட்டான் என்று கூறி காத்தற் கடவுளாகிய விஷ்ணு விடம் போகும்படி கூறியதும் சந்திரன் விஷ்ணுவை நாடிச் சென்று முறையிட்டபொழுது நானோ தட்சனின் கீழ் பணி செய்கின்றேன் என்னால் ஒன்றும் செய்ய இயலாது எல்லோரையும் காக்கும் பரம்பொருள் ஆகிய சிவனிடம் போனால் அவர் கருணை உள்ளவர் உமக்கு உதவுவார் என அனுப்பிவிட்டான். தேய்ந்து உருமாறிப் போன சந்திரன் கைலாயம் சென்று நந்தியெம்பெருமானிடம் அனுமதி பெற்று இறைவனிடம் போய் தனக்கு நடந்த சம்பவங் களையும் அதன்மூலம் தனக்கு இட்ட சாபத்தைப் பற்றியும் கூறி தேய்ந்து மறையும் நாளும் நெருங்கிவிட்டது. எனக்கு சாப விமோசனம் அளிக்குமாறு மன்றாடினான். சிவனும் தட்சனது பெண்கள் எல்லோரையும் சமனாக கண்கலங்காமல் பார்க்கும்படி கூற இனிமேல் நான் இத்தகைய தவறு செய்யமாட்டேன் என்று கூறி பணிந்து நின்றான். நீ என்னைச் சரணடைந்த காரணத்தால் மீண்டும் அப் பெண்களை அடைந்து நாளொன்றிற்கு ஒரு பெண்ணுடன் இருக்கவும் வரம் கொடுத்தார்.

நீ தேய்ந்து தேய்பிறையாக ஒருநாள் மட்டுமே மறைந்து நீ மறையும் நாள் அமாவாசையான திதியாகவும் பின்னர் மறுநாள் தொடக்கம் வளர்பிறையாக வளர்ந்து ஒருநாள் முழு பௌர்ணமியாகவும் வருவாய் என வரம் கொடுத்தார். தட்சனின் காலத்தில் அவனது 27 பெண் பிள்ளைகள் (நட்சத்திரம்) சந்திரனை திருமணம் செய்து அவனது சாபத்தால் 26 கலைகளும் தேய்ந்து அமாவாசையாகவும் பௌர்ணமியாகவும், அட்டமி, நவமி, தசமியாகவும் மாற்றம் தோன்றியதாக புராண வரலாறுகள் கூறுகின்றன.

சந்திரனுக்கு ஒரு சந்தேகம். தான் மறையும் நாளில் தன்னை தட்சன் கொன்றுவிடு வானோ எனும் எண்ணத்தில் சிவபெருமானிடம் வினவியபொழுது நான் இருக்கும் வரையும் நீ இருப்பாய் எனவும் எம்மை வணங்குபவர்கள் உன்னையும் வணங்குவார் எனவும் அவனது சந்தேகத்தை போக்குமுகமாக தேய்பிறைச் சந்திரனாக இருந்த சந்திரனைத் தூக்கி தனது முடியின்மேலே வைத்துக்கொண்டார். அதனால்தான் சுந்தரமூர்த்தி நாயனாரின் முதல் தேவார முதல் வரியில் "பித்தா பிறைசூடி பெருமானே அருளாளாய்" என்று பாடியதும் அன்று முதல் சந்திரமௌலீஸ்வரராகவும், சந்திரசேகரர் எனவும் சிவபெருமானைப் போற்றித் துதிப்பதை நாம் அறியக்கூடியதாகவுள்ளது.

***அடுத்தவர்களுக்கு கெடுதல் நினைக்காதே. எல்லா நேரமும் நல்ல நேரமே.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானோடு கூடி சந்திரன் இருப்பதன் காரணமாக அழியக்கூடிய தன்மையில் இருந்தும் விடுபட்டு மாதம் 30 நாட்களில் 27 பெண்களுடன் நாள்பூராகவும் மிகுதி மூன்று நாட்களாகிய அட்டமி, நவமி, தசமி ஆகிய திதிகளில் சந்திரன் ஒரு பெண்ணிடமும் இல்லை. இத்திதி உள்ள நாட்களில் திருமணம் போன்ற நற்காரியங்கள் ஒன்றும் நிகழ்வதில்லை என்பதை அறியலாம். ஒவ்வொரு சைவ மக்களுக்கும் ஆடி அமாவாசை, புரட்டாதி அமாவாசை, தை அமாவாசை மாதாமாதம் வரும் அமாவாசைகளில் பிதிரகடனாகிய திதிகளில் தாய் தந்தை மற்றும் இறந்த ஆத்மாக்களின் வழிபாடு, பிரார்த்தனை செய்தல் நமக்கும் நமது பிள்ளைகளுக்கும் அதி உன்னதமான விரதமாகும். இத் தினங்களை நம் முன்னோர் சிறப் பாக அனுட்டித்தலின் காரணத்தால் நாமும் நம் சந்ததியினரும் பிதிர்தோஷம் நீங்க வழி ஏற்பட்டது.

ஆடி அமாவாசை, புரட்டாதி மாளயபட்சி அமாவாசை, தை அமாவாசை ஆகிய மூன்று தினத்திலும் ஓர் நீர்நிலையின் கரையில் சிவாச்சாரியாரை அழைத்து மூன்று பிண்டம் வைத்து காய்கறி சாமான்களுடன் அரிசியும் தானமும் எமக்கு முன்னோராக இருந்து எம்மை பேணிக் காத்து வளர்த்த தாய் தந்தையர் இறந்த ஆத்மாக்களை நினைத்து எமக்கு பிதிர்க்கடன் செய்யும் சிவாசாரியாரின் கையில் பயபக்தியுடன் கொடுக்க வேண்டும் என சைவசமயம் வலியுறுத்துகின்றது. மற்றைய மாதந்தோறும் அமாவாசைகளில் எமது இல்லங்களில் சைவமாகவும் நீராடி, பாகற்காய், வாழைக்காய் மற்றும் கறிகளுடன் பச்சையரிசி சாதம் சமைத்துப் படைத்து கற்பூர தீபம்காட்டி பஞ்சபுராணம் பாடி நீர் தெளித்து ஓர் இலையில் எல்லா பதார்த்தங்களையும் சேர்த்து ஒரு பிடி எடுத்து காகத்துக்கு வைத்து நமது இறந்த முன்னோராகிய தாய் தந்தை மற்றும் உறவினர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை செய்து நாமும் நமது முன்னோரும் இறைவன் ஆசி பெறுவோம்.

சைவசமயியாய் அறநெறி வழிகாட்டலிற்கு வழிகோளும் திருவாசகம் எனும் தேனை ஒவ்வொரு நாளும் ஓதி முத்திநெறியடையலாம் என்பதை உணர்த்தி நிற்கின்றது.

(தொடரும்...

## புகழ் பூத்த கந்தன் அருள் தமிழில் வீசும்

எல்லாரும் வந்துனது தாழ் பணிந்து ஏற்ற
எழில் குமரா வடிவேலா அருள் சுரந்து காட்ட
இல்லாமை இல்லாது இருள் களைந்து போக்க
இனிமையுறும் வாழ்வுயர்வு கொடுத்துதவும் வேலே
கல்லாதார் விழி கூடக் கடைக்கண்வழி தேடும்
கருத்தாழம் மிகுந்த கந்தன் அருள் கடல் போலஆகும்
பொல்லாத தீவினைகள் தான் பொசுங்கித் தேயும்
புகழ் பூத்த அருள் முருகா உன்மணம் தமிழில் வீசும்.

-சின்னப்பு தனபாலசிங்கம்.

*விடாமுயற்சியே வெற்றியைத் தேடித்தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைக்க முத்தி அளிக்கும் திருவண்ணாமலை

– திருமதி இந்திரா திருநீலகண்டன் அவர்கள் –

*அண்ணாமலை தொழுவார் வினை*
*வழுவா வண்ணம் அறுமே!*

எல்லாம் வல்ல உலக நாயகனாகிய நம் இறைவன் உண்ணாமுலை உமையாளொடு உடனாகி உறைகின்ற இடம்தான் திருவண்ணாமலை. பூமியிலுள்ள அனைத்து சிவ ஸ்தலங்களையும் விட அதி அற்புதம் வாய்ந்தது என்று ஆன்றோர்கள், அருளாளர்களால் மெய்ப்பிக்கப்பட்டது இத்தலம். திருவாரூரில் பிறக்க முத்தி திருத்தில்லையைத் தரிசிக்க முத்தி, காசியில் இறக்க முத்தி, அண்ணாமலையை நினைக்கவே முத்தி என்பார்கள். "அண்ணாமலையானுடைய தாமரைத் திருவடிகளை வணங்குகின்ற தேவர்களின் முடியிலுள்ள இரத்தினங்கள் கூட தம் ஒளியை இழந்துவிடுகின்றன. இருளை நீக்கும் கதிரவன்கூட இறைவன் முன்னே தன் பிரகாசத்தை குறைத்து விடுகின்றான்" என்று மணிவாசகர் திருவெம்பாவை என்ற திருப்பதிகத்திலே இறைவனைப் போற்றிப் பாடியிருக்கின்றார். அப்படியாயின் தேவர்கள்கூட வந்து வழிபட்ட தலமாக இத்தலம் பெருமை பெற்றது என்றால் ஆச்சரியமே! விஞ்ஞானிகள்கூட ஆராய்ச்சி செய்து இந்த இடம் உலகிலேயே அதிசக்தி கூடிய இடம் என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

நான்கு யுகங்களாக நெருப்பு மலையாக இருந்து குளிர்ந்த மலையே இத் திருவண்ணாமலை. இறைவனைப் பிரிந்த அன்னை அவனை அடைய காஞ்சிபுரத்தில் பம்பை நதிக்கரையில் சிவனை நோக்கி மண்ணாலான ஒரு சிவலிங்கம் அமைத்து தவம் செய்தபோது இறைவன் காட்சி கொடுத்தார். "சுவாமி தங்களை என்றும் பிரியாதிருக்க இடப்பாகத்தில் இடம் தர வேண்டும்" என்று வேண்ட, "நீ போய் திருவண்ணாமலையில் தவமியற்றுவாயாக!" என்று இறைவன் ஆசீர்வதித்தார். அம்மையும் அதன்படி திருவண்ணாமலை சென்று தவத்தைத் தொடருங்கால் கார்த்திகை பௌர்ணமி அன்று மலை உச்சியில் ஓர் ஒளி தோன்றி "உமையே நீ இந்த மலையை இடதுபுறமாகச் சுற்றிவா" என்று அசரீரி ஒலித்தது. அதன்படி அம்மை இடதுபுறமாக சுற்றி வர இறைவன் அவளை ஆட்கொண்டு தன் இடப்பாகத்தைக் கொடுத்து அர்த்தநாரீஸ்வரராகக் காட்சி அளித்தார். எனவே முதன்முதலில் அன்னைதான் கிரிவலத்தைத் தொடக்கி வைத்ததாகவும் கூறுவர். அர்த்தநாரீஸ்வரராகக் காட்சி கொடுத்த இடம்தான் "அடி அண்ணாமலை" என்று வலம் வரும் பாதையில் இருக்கிறது. ஒருமுறை திருமாலுக்கும்

*வறுமைக்குப் பிறகு வரும் செல்வமே வாழ்க்கையில் இறுதிவரை நிலைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மாவுக்கும் யார் பெரியவர் என்ற வாக்குவாதம் எழுந்தபோது, இறைவனின் அடி முடியைத் தேடிக் கண்டுபிடிப்பவர்தான் பெரியவர் என்ற அசரீரி ஒலித்ததும் இருவரும் அடி முடி தேடிப் புறப்பட்டனர். ஈற்றில் இருவரும் செருக்கடங்கி நின்றபோது, இருவருக்கும் இறைவன் லிங்கோற்பவராகக் காட்சி கொடுத்த பெருமையையும் இந்த திருவண்ணாமலையையே சாரும். தான் செய்த தவறினால் மனம் மிக வருந்தி ஈற்றில் திருவண்ணாமலையில் இருந்து வீழ்ந்து மாய்ந்துவிடப்போன அருணகிரிநாதரை முருகன் இரட்சித்து திருப்புகழைப் பாட வைத்ததும் இதே இடத்தில்தான். வியாசர் முதல் துர்வாசர் ஈறாக பல முனிவர்கள் தவமியற்றிய இடமும் திருவண்ணாமலையே. பதினாறு வயதிலே ரமண மகரிஷி முற்றும் துறந்து அங்கு சென்று பாதாள லிங்கத்தை வழிபட்டு நிஷ்டையில் இருந்து ஞானம் பெற்று "அஷ்ரரமண மாலை" மற்றும் பாடல்களையும் பாடி எமக்களித்ததும் இதே திருவண்ணாமலைதான். அவர் தனக்கு குரு வேறு யாரும் இல்லை இந்த மலைதான் என்று கூறியிருக்கிறார். இவரைப்போல் நூற்றுக்கணக்கான ஞானிகள், சேஷாத்திரி சுவாமிகள், ராம் சுரத்குமார், இசக்கி சாமியார், விசிறி சாமியார் என்று இந்த இடத்தை இருப்பிடமாகக் கொண்டு சமாதியாகி இறைவனுடன் ஒன்றாகியிருக்கிறார்கள். இங்கு "அண்ணாமலையார், ரமணமகரிஷி, சேஷாத்திரி சுவாமிகள் என்ற மூன்று லிங்கங்கள் இருக்கின்றது" என்றும் கூறுவார்கள். பாண்டவர் வனவாசம் செய்யும்வேளை அருச்சுனன் தவமியற்றியது இங்குதான். இத்தலத்தை தென் கைலாயம், முத்திதலம், அமுதகடல், சோணாச்சலம், இரத்தினகிரி, ஞான மலை, அருணகிரி எனப் பல பெயர்களால் அழைப்பார்கள்.

பிரம்மாவின் வேண்டுகோளின்படி பிரம்ம முகூர்த்தம் தொடங்கியதும் அண்ணாமலையில்தான். இங்கு பிரம்மமுகூர்த்தம் அதிவிசேடமாகக் கருதப்படுகின்றது. அதாவது எமக்கு ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாள். அந்த ஒரு நாள் இங்கு மார்கழி மாதம். இந்த மார்கழி முப்பது நாட்களும் அவர்களுக்கு பிரம்ம முகூர்த்தம். எங்கள் பிரம்ம முகூர்த்த வேளையில் மார்கழி மாதம் முழுவதும் நாம் போய் அண்ணாமலையானை வழிபடும் நேரத்தில் முப்பத்து முக்கோடி தேவர்களும் அதேநேரத்தில் இங்கு அண்ணாமலையானை வழிபட சூட்சுமமாக இறங்கி வருவார்களாம். அதேவேளையில் நாமும் இறைவனின் அருளைப் பெறுவதுடன் தேவர்களின் ஆசியையும் பெற வாய்ப்புள்ளது. எங்கள் ஜென்மாந்திர பாவங்களும் அதனால் நீங்கும் என்பார்கள் என்று அருணாசல புராணம் கூறுகின்றது.

இங்கு கிரிவலம் வருவதுதான் விசேடமாக நடைபெறுகிறது. ஏனெனில் மலையே சிவன். அதனால் இறைவனை கோவிலில் வலம் வருதல்போல் பதினான்கு கிலோமீற்றர் சுற்றளவு உள்ள மலையை நாம் வலம் வரவேண்டும். நிதானமாக வலம் வர எடுக்கும் நேரம் ஆறு மணித்தியாலங்கள். கிரிவலம் வர தொடங்குவதை நாம் கோபுர வாசலில் இருந்து அல்லது பிள்ளையார் முன்னிலையில் இருந்து தொடங்க வேண்டும். அறுகம்புல், வில்வம் அல்லது தர்ப்பைப்புல் இவைகளில் ஏதாவது கையில் எடுத்துக்கொண்டு வலம் வரலாம். அதை பின்னர் வீட்டிற்கு எடுத்து வந்து வைத்திருக்கலாம். வலம் வரும்போது அஷ்டதிக்குப் பாலகர்கள் பிரதிஷ்டை செய்து வழிபட்ட அட்டலிங்க ஸ்தலங்கள், சித்தர்,

*எவ்வளவு பெரிய பிரச்சனைக்கும் கையளவு மனதிடம்தான் தீர்வு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகியர் போன்றோரின் சமாதிக் கோயில்கள் என்று முப்பதுக்கும் மேற்பட்ட முக்கியமான இடங்களைத் தரிசனம் செய்து வலம் வரவேண்டும். கிரிவலத்தை ஆரம்பித்ததும் முதலில் வருவது இந்திரலிங்கம். அடுத்து அக்னிலிங்கம், சேஷாத்திரி சுவாமிகள், மாரியம்மன் கோவில் பார்த்ததும் ரமணமகரிஷியின் சமாதிக்கோயில், பின் ராம்சுரத்குமார் திருக்கோயில், எமலிங்கம், துர்வாசர் இடம், மஹாநந்தி அண்ணாமலையை நோக்கியபடி, திருப்பாதம், நேர் அண்ணாமலை கோயில் சூரியலிங்கம், வருணலிங்கம், அடி அண்ணாமலை, மணிவாசகர் திருவெம்பாவை பாடிய இடம், வாயுலிங்கம் சந்திரலிங்கம் நந்தியெம்பெருமான் குபேரலிங்கம் இடுக்குப்பிள்ளையார் இது ஒரு இரண்டு அடி இடம் அதற்குள்ளால் குனிந்து நின்று உடம்பை உருட்டிப் பிரட்டி வரவேண்டும் உடம்புக்கு நல்லது என்பர். இறுதியாக ஈசானிய லிங்கம் என்று கிட்டத்தட்ட முப்பதுக்கு மேற்பட்ட முக்கியமான ஸ்தலங்களைத் தரிசித்து கிரிவலத்தை பூர்த்தி செய்யலாம்.

வெறுங் காலுடன் நடப்பதுதான் விசேடம். இயலாதவர்கள் காலணியுடன் செல்வதில் தவறில்லை. கிரிவலம் வருவோம் என்று எண்ணி எடுத்து வைக்கும் முதல் அடியிலேயே உலகை வலம் வந்த பலன் கிடைக்குமென்றும், இரண்டாவது அடியிலேயே அனைத்து புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடிய பலன் கிடைக்குமென்றும், மூன்றாவது அடியில் பல வகை தான தர்மங்கள் செய்த பலன் கிடைக்குமென்றும் நம் முன்னோர் கூறியிருக்கிறார்கள். கிரிவலம் வரும்போது ஏதாவது உடல் சோர்வு, மனச்சோர்வு ஏற்பட்டு முடியுமா என்ற சந்தேகம் ஏற்பட்டாலும் அந்த எண்ணத்தை உதறித் தள்ளிவிட்டு திடமான மனதுடன் முழுவதும் அவனை நம்பி தொடங்கிவிட்டால் உசார் வந்துவிடும். "அருணாசல சிவ அருணாசலா அல்லது ஓம் நமச்சிவாய" என்ற மந்திரத்தைச் சொல்லிக்கொண்டோ ரமணமகரிஷியின் அஷ்ரரமண மாலையைப் பாடிக்கொண்டோ, வேறு எந்த சிந்தனையும் இல்லாமல் உண்ணாமலை அம்மனையும் அண்ணாமலையாரையும் சிந்தையில் இருத்தி மெதுவாக வலம் வர வேண்டும். இதனால் பிரணாயாமம் செய்த பலனும் கிட்டும். இவ்வாறு வலம்வரும்போது அண்ணாமலையிலிருந்து சிவந்த ஜோதிக்கதிர்கள் எப்போதும் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கும். இது கிரிவலம் வரும் அடியார்மீது படும்போது அவர்கள் நல்ல ஆரோக்கியத்தையும் கூடவே பெறுகிறார்கள். வலம் வரும்வேளையில் ஞானிகள், மேன்நிலை அடைந்த சித்தர்கள் என்று எங்களுடன் வரலாம். அதேவேளை நாமும் அவர்களுடன் கூடவே செல்லும் பாக்கியமும் கிட்டும். இது எம்மை அறியாமலேயே எமக்கு ஒரு சக்தியையும் பலனையும் அளிக்கும் என்பர்.

ரமணமகரிஷி வலம் வரும்போது அவரின் சீடர்களும் அவருடன் வலம் வருவார்கள். அந்தவேளையில் தான் அவரது அடியார்கள் "சுவாமி வலம் வரும்போது நாங்கள் பாடிக் கொண்டு வர ஏதாவது எங்களுக்கு எழுதித் தாருங்கள் என்று கேட்டபோது, அவரிடமிருந்து வெளிவந்த அந்த மணிமணியான வார்த்தைகள்தான் "அஷ்ரரமண மாலையாகியது". பாடலைப் பாடி மாலை சூட்டுவதாக அமைந்த இவ் வரிகளை அவரது அடியவர்கள் எழுதிக் கொண் டார்கள். பின்னர் இவற்றைப் பாடிக்கொண்டே வலம் வருவார்களாம்.

*ஏழ்மையிலும் நேர்மை இறைவனுக்கு பிடித்தமான செயல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிவலம் எல்லா நாட்களும் வரலாம். பௌர்ணமி காலம்தான் விசேடமான காலம். ஆனால் சித்ரா பௌர்ணமி, கார்த்திகை தீபம் இரண்டும்தான் மிகச் சிறந்த நாட்களாகக் கருதப்படுகின்றது. மற்றும் சிவராத்திரி, மாதந்தோறும் வரும் கார்த்திகை, மார்கழி, ஐப்பசி திருக்கார்த்திகை மாதங்கள் அண்ணாமலையைத் தரிசித்து கிரிவலம் வர உகந்த நாட்களாகக் கருதப்படுகின்றது. அதேபோல் கார்த்திகைப் பெண்கள் எம்பெருமான் குமரனை அணைத்தெடுத்துப் பாலூட்டி வளர்த்து இறைவன் அருள் பெற்றுய்ந்த நாள் என்றபடியால் திருக்கார்த்திகையும் விசேடமாகக் கருதப்படுகின்றது. இந்த இரண்டு நாட்களிலும் கிரிவலம் வருவதென்றால் இயலாத காரியம். லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் வருவார்கள். ஒவ்வொரு அடியாக அடிக்குமேல் அடி வைத்துத்தான் வலம் வரலாம் என்று கூறுவார்கள். கார்த்திகையில் வரும் தீபத்திருநாள் அன்று திருவண்ணாமலையில் தீபம் ஏற்றுவதுதான் மிகப்பிரமாண்டமாக விசேடமாக நடைபெற்று வருகின்றது. உலகிலுள்ள முக்கியமாக தமிழ் மக்கள், அங்கு போய்ச் சேர்வார்கள். அத்துடன் இந்தியாவில் எல்லா மாநிலங்களிலுமுள்ள அடியவர்கள் தீபத் திருநாளுக்கு முதல் நாளே வரத்தொடங்கி சுமார் முப்பது லட்சம் வரையில் தீப தரிசனம் காணக்கூடுவார்கள்.

தீபத்திருநாளுக்கு முன்பாகவே கொடியேற்ற வைபவம் நடைபெற்று திருவிழாக்கள் கோலாகலமாக நடந்துகொண்டிருக்கும். அந்த ஞானபூமியே விழாக்கோலம் கொண்டு காட்சியளிக்கும். தோரணங்கள், மலர் மாலைகள் அலங்காரம், மின் விளக்குகள் பார்க்கும் இடமெங்கும் இரவில் தேவலோகத்திலிருப்பது போன்றதொரு தோற்றம்தான் ஏற்படும். அண்ணாமலை அண்ணலின் கொடியேற்றத் திருவிழா என்றால் கூறவும் வேண்டுமா? திபத் திருநாளன்றும் முதல் நாளும் உள்ளே நுழைவதென்றால் அப்பப்பா உயிரைக் கையில் பிடித்துக்கொண்டுதான் செல்ல வேண்டும். அப்படி இருந்தும் வரிசையில் இடிபாடுகளுக்கிடையில் இரண்டரை மூன்று மணித்தியாலங்கள் அசைந்து அசைந்து சென்றுதான் அப்பனையும் அம்மையையும் தரிசிக்கலாம்.

இவ்வாறாக உள்ளே சென்றால் மணங்கமழும் மலர் மாலைகள், மாவிலைத் தோரணங்களால் உள்பகுதி முழுவதும் அழகாக அலங்கரிக்கப்பட்டு பூந்தோட்டம் போன்று காட்சியளிக்கும். இவற்றை ரசித்துக்கொண்டு இறைவன் சந்நிதியை அடைந்தால் மூலஸ்தானத்தில் சிவலிங்க உருவில் இறைவன் வீற்றிருக்கும் காட்சியைக் காண கண்கள் என்ன புண்ணியம் செய்ததோ என்று மெய்சிலிர்க்க மாணிக்கவாசகரின் பாடல்வரிகள் "காணொணாக் கோலம் நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே" என்ற பாடலை அசைபோட்டுக் கொண்டு கண்ணீரமல்க இறைவனுக்கு நன்றி கூறியபடி அம்மன் சந்நிதியை அடைந்தால் அங்கு அவள் "ஒரு பாகம் அகலாத சுகபாணியாக" அலங்கார நாயகியாக வீற்றிருந்து அருள் பாலித்துக்கொண்டிருக்கிறாள். அதை அடுத்து ஆனந்தக் கூத்தனை தரிசிக்கச் சென்றால், அங்கே "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும் பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும் அணிந்து" பலவிதமான இன மலர்களுக்கிடையே தன் பொன்னடிகளைத் தூக்கியாடும் அழகை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை எனலாம். இந்த வேளையில் அப்பர் சுவாமிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன மலர்கள் போதவிழ்ந்து மதுவாய்பில்கி நனைந்தனைய திருவடி என்தலை மேல் வைத்தார் நல்லூரெம் பெருமானார் நல்லவாறே" என்ற பாடல் வரிகளை நினைவு கூர்ந்தபடி திருக்கோயிலை விட்டு வெளியேறினோம்.


மறுநாள் காலையில் பரணி தீபம் ஏற்றுவார்கள். மாலையில் அர்த்தநாரீஸ்வருடன் பரிவார மூர்த்திகளையும் எழுந்தருளப்பண்ணி தீபம் ஏற்றுவார்கள். மக்கள் அலைமோதிக் கரைபுரண்டு இடிபட்டு இறைவனை கண்குளிரக் காண கூடுவார்கள். இரண்டாயிரத்து எழுநூறு அடி உயரமான மலையில் செம்பு, இரும்பு, கொப்பறை கொண்டு தயாரிக்கப்பட்ட கொப்பறை யில் சுமார் முந்நூறு கிலோ நெய்யில் ஆயிரம் மீற்றர் பருத்தித்துணி கொண்டு தீபம் ஏற்றுவார்கள். இந்த சுடரின் ஜோதி பல மைல்களுக்கப்பால் பல நாட்கள் தரிசிக்கக்கூடியதாக இருக்கும் என்று கூறுகின்றார்கள்.

அண்ணாமலையானுக்கு அரஹரோஹரா என்ற சத்தம் தீபம் ஏற்றியதுடன் வானைப் பிளக்கும். அடியவர்கள் பெறற்கரிய பேற்றினைப் பெற்ற சந்தோஷத்தில் இறைவனைப் போற்றுவார்கள். இவ்வாறாக தீபம் கண்ட மகிழ்ச்சியில் சிலர் அன்றே கலைந்து செல்லத் தொடங்குவார்கள். வேறு சிலர் அங்கேயே தங்கி இறைவனைத் தரிசித்து வசதிக்கேற்றவாறு செல்வார்கள்.

எனவே இத்தகைய பெரும்பேறைப் பெறுவதற்கு நாம் வாழ்வில் ஒரு முறையாவது திருவண்ணாமலை சென்று கிரிவலம் வந்து அண்ணாமலையாரையும் உண்ணாமுலை நாயகியையும் தரிசித்து அருளைப் பெற முயற்சிக்க வேண்டும். ஒரு முறை வாழ்வில் அப் பாக்கியம் கிடைத்தால் அவனருளால் மேலும் மேலும் அங்கு செல்லக்கூடிய வாய்ப்புக்கள் தானாகவே கிட்டும் என்பதும் ஒரு ஐதீகம். எனவே நாமும் முயற்சிப்போமாக!

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

## என்றும் நினைவில்...



சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கு தன்னாலான ஆதரவை வழங்கியவரும், தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை யின் நிர்வாக உறுப்பினராகவும் இருந்து சேவையாற்றிய ஓய்வுபெற்ற ஊழியர் (கைதடி முதியோர் இல்லம்) திரு ஜயாத் துரை அரசபிள்ளை அவர்கள் கடந்த 13.01.2024 அன்று அமரரான செய்தியறிந்து நாம் மிகுந்த துயரடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிக்கும் அவரது குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த துயரை தெரிவிப்பதோடு, அமரரின் ஆத்மா சந்நிதி வேலவனது பாதார விந்தங்களில் சாந்திபெற வேண்டி நிற்கின்றோம்.

*-பேரவையினர்-*

*ஆசையில்லாத முயற்சியால் பயனில்லை. முயற்சியில்லாத ஆசையால் பயனில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| செ. கவிதா | லண்டன் (வல்வெட்டி) | 15000. 00 |
| T. லக்ஷ்மன் | பருத்தித்துறை | 10000. 00 |
| டனாஸ் | லண்டன் | 15000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை | தேங்காய், 1மூடை அரிசி |
| சி. தங்கவடிவேல் (சிற்றி வெதுப்பகம்) | தும்பளை | 1மூடை மா |
| வ. பாலச்சந்திரன் | சிறுப்பிட்டி | 2000. 00 |
| ரஞ்சீவன் கேவதி | அச்சுவேலி | 1000. 00 |
| ப. அருந்தவராணி | கனடா | 50000. 00 |
| கா. குலேந்திரதாசன் | சங்கானை | 5000. 00 |
| கு. தயாநிதி | வல்வெட்டித்துறை | 9500. 00 |
| ர. கமலேஸ்வரி | மாசியப்பிட்டி | 5000. 00 |
| செ. தவராசா | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| திரு நந்தகுமார் குடும்பம் | உடுவில் | 3புட்டி அரிசி 5000. 00 |
| ப. கீதப்பிரியன் | நீர்வேலி | 7000. 00 |
| M. மாதங்கி | உடுப்பிட்டி | 5000. 00 |
| த. நாகரஞ்சன் | இளவாலை | 1புட்டி அரிசி 2000. 00 |
| அஸ்னா தயா | கனடா | 10000. 00 |
| கி. சிவேந்திரன் | கனடா | 10000. 00 |
| கு. ராஜேந்திரன் | யாழ்ப்பாணம் | 6000. 00 |
| பா. சிந்துஜன் | அல்வாய் | 5000. 00 |
| திரு சீவரெத்தினம் குடும்பம் | இணுவில் | 5000. 00 |
| நா. அரவிந்தன் | இணுவில் | 1000. 00 |
| கி. காவியா | வளலாய் | 5000. 00 |
| வி. சஞ்சீவ் | காரைநகர் | 100 பவுண்ஸ் |
| R. ஆருத்ரா | சுன்னாகம் | 2000. 00 |
| திரு ஜெயபாஸ்கரன் குடும்பம் | சுவிஸ் | 70000. 00 |
| ஆ. பவனேஸ்வரன் | யாழ்ப்பாணம் | தேங்காய் 7புட்டி அரிசி |
| திரு திவாகரன் குடும்பம் | சிங்கப்பூர் | 5000. 00 |
| R. விஜிதரன் | கொழும்பு | 1000. 00 |

*உண்பதற்காக வாழாதே. உயிர் வாழ்வதற்காக உண்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சீ. சயந்தன் | கெருடாவில் | 6000. 00 |
| கி. நிவாசினி | டென்மார்க் | 3000. 00 |
| சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 2000. 00 |
| சி. அன்புமலர் | வட்டுக்கோட்டை | 3000. 00 |
| பு. சேகரம்பிள்ளை | வட்டுக்கோட்டை | 3000. 00 |
| ஆ. கதிர்காமத்தம்பி | வல்வெட்டி | 1000. 00 |
| வ. இளம்பொன்னன் நினைவாக | உடுப்பிட்டி | 10000. 00 |
| ஐ. முருகதாஸ் | அராலி | 5000. 00 |
| அனுஜா சிவநடராஜா | புன்னாலைக்கட்டுவன் | 31000. 00 |
| இ. நேசராசா | பருத்தித்துறை | 20000. 00 |
| பிரசாந்தன் மேகலா | வவுனியா | 20000. 00 |
| கா. தெட்சணாமூர்த்தி | வடலியடைப்பு | 2000. 00 |
| ச. கனகலிங்கம் | சுன்னாகம் | 3000. 00 |
| த. திலீப்குமார் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| ஜெ. ஜனாஸ்ரிகா | தையிட்டி | 5000. 00 |
| சோ. தனராசா | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| திருமதி முரளிதரன் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| த. மிதுஷா | கொழும்பு | 5000. 00 |
| நரேன்குமார் குடும்பம் | கொழும்பு | 1000. 00 |
| திரு பிரியதர்ஷன் குடும்பம் | கொழும்பு | 1000. 00 |
| த. குமரன் | மாவிட்டபுரம் | 2000. 00 |
| மா. செந்தூரன் | அச்சுவேலி | 10000. 00 |
| S. காந்தன் | புலோலி | 10000. 00 |
| த. கபிலாஜினி, த. தருண் | கனடா | 5000. 00 |
| சி. நாகலிங்கம் | கரணவாய் | 2000. 00 |
| ப. பாலரூபன் | கிளிநொச்சி | 1000. 00 |
| தா. கௌரி | கிளிநொச்சி | 500. 00 |
| ச. ரங்கநாதன் | நவிண்டில் மரக்கறி, 3புட்டி அரிசி | 5000. 00 |
| திரு கான்ஸ்குகன் | உரும்பராய் வடக்கு | 5000. 00 |
| கௌரி சங்கர் | உரும்பராய் | 2000. 00 |
| யோ. விஜயானந் | உடுப்பிட்டி | 5000. 00 |
| இ. ஜெகன்நிவாசன் | இணுவில் 50கிலோ பருப்பு, 400 கிலோ அரிசி | |
| ஸ்ரீ சுதன் குடும்பம் | உரும்பராய் | 5000. 00 |
| மாயா ரியா | லண்டன் | 10000. 00 |
| திரு சிவனேசன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 1500. 00 |
| வி. விமலாதேவி குடும்பம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திரு மதனன் குடும்பம் | நல்லூர் | 2000. 00 |
| வை.ச. பரஞ்சோதி | கோண்டாவில் | 5000. 00 |

*பிறரைக் காட்டிலும் அதிகமாக அறிந்துகொள்ள முயலுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஜெயக்குமார் தேவிகா | கனடா | 5000. 00 |
| ச. கபிலன் | ஜேர்மன் | 5000. 00 |
| திரு தங்கராசா குடும்பம் | மயிலிட்டி | 15000. 00 |
| ஜிதேஸ் | கொக்குவில் | 1000. 00 |
| திருமதி ஆரியநந்தி | கொழும்பு | 3000. 00 |
| செ. சிவனேசன் | தும்பளை | 4000. 00 |
| சி. கணேஸ்வரன் | மல்லாகம் | 20000. 00 |
| திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | கோப்பாய் (U.K) | 10000. 00 |
| யோ. கபில்ராஜ் மூலம் சௌ. சஞ்சீவ் | தெகிவளை | 50000. 00 |
| திரு பிரபா மூலம் எழில் பிரகாஸ் | தாவடி (கனடா) | 50000. 00 |
| திரு பாலசுப்பிரமணியம் குடும்பம் | சுவிஸ் | மரக்கறி, பருப்பு, 12மூடை அரிசி |
| ஸ்ரீ சியாமளன் | சிறுப்பிட்டி | 1500. 00 |
| திரு கனகசபேசன் குடும்பம் | கனடா | 154700. 00 |
| K. ராஜேந்திரன் | வெள்ளவத்தை | 2000. 00 |
| L. காந்தரூபன் | நல்லூர் | 5000. 00 |
| N. குபேரன் | வவுனியா | 10000. 00 |
| வி. சுதர்சன் | இன்பர்சிட்டி | 20000. 00 |
| ந. வாசவன் | அச்சுவேலி | 1000. 00 |
| கு. வல்லவன் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| பா. செல்வக்குமார் | சாவகச்சேரி | 28000. 00 |
| V. தயா | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| வி. தயாநிதி | கிளிநொச்சி | 10000. 00 |
| கா. தங்கமலர் | கிளிநொச்சி | 500. 00 |
| தி. நட்சத்திரா | வண்ணார்பண்ணை | 1000. 00 |
| க. தர்மலிங்கம் | நீர்வேலி | 1000. 00 |
| ச. கர்ணிகன் | ஏழாலை | 1மூடை அரிசி |
| வே. செல்வா | மந்திகை | 3000. 00 |
| சு. அசித்தா | குப்பிளான் | 2000. 00 |
| ச. தர்மலிங்கம் | இணுவில் | 2000. 00 |
| செ. ரூபசௌந்தரதேவி | அச்சுவேலி | 4000. 00 |
| க. ஜேந்திரகுமார் | வசாவிளான் | 5000. 00 |
| ம. பரமானந்தம் | இணுவில் | 1000. 00 |
| மு. பரமேஸ்வரி | தையிட்டி | 500. 00 |
| திரு நவரத்தினராஜா குடும்பம் | அச்சுவேலி | 1000. 00 |
| யோகாம்பிகை | அச்சுவேலி | 10000. 00 |
| திரு அருணகிரிநாதன் குடும்பம் | அச்சுவேலி | 15000. 00 |
| திரு தனுஷன் | ஏழாலை | 1மூடை அரிசி 1000. 00 |
| சி. வைரவப்பிள்ளை | லண்டன் | 5000. 00 |

*துன்பங்களுக்கு இடையில்தான் வாய்ப்புக்கள் ஒளிந்திருக்கின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| யோகராசா காஞ்சனா | தும்பளை | 5000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் | பருத்தித்துறை | 10000. 00 |
| திரு ராமகிருஷ்ணா ஆசிரியர் மூலம் திருமதி | கா. ஜனனி கொழும்பு | 10000. 00 |
| உ. பானுஜா | சுவிஸ் | 1000. 00 |
| S. ரமேஷ் | கொழும்பு | 2000. 00 |
| உ. அனு | அவுஸ்திரேலியா | 3000. 00 |
| திரு இளந்தரியன் குடும்பம் | கனடா | 5000. 00 |
| ஆனந் குடும்பம் | கனடா | 1000. 00 |
| கு. தம்பிஜயா | யாழ்ப்பாணம் | 500. 00 |
| சி. மனோன்மணி | மானிப்பாய் | 10000. 00 |
| க. வைரமுத்து | அச்செழு | 5000. 00 |
| க. கலாவன் | சாவகச்சேரி | 1000. 00 |
| S. மகாராஜன் | வட்டுக்கோட்டை | 3000. 00 |
| க. நிரஞ்சன் | லண்டன் | 5000. 00 |
| செல்வி அ. கந்தையா | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| திருமதி நாச்சியார் செல்வநாயகம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| க. மனோகரன் | புன்னாலைக்கட்டுவன் | 10000. 00 |
| நீரஜா பிரசாந்தன் (மக்கள் வங்கி) | ஊரெழு | 20000. 00 |
| சுபத்திரா விஜயகுமார் | கோப்பாய் | 10000. 00 |
| Dr K. வேலாயுதமூர்த்தி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| பொ. குமாரசாமி குடும்பம் | அச்சுவேலி | 3000. 00 |
| து. நாகேந்திரம் | நல்லூர் | 12000. 00 |
| ச. கேசவன் | அவுஸ்திரேலியா | 100000. 00 |
| செ. மிகுந்தலா | கரவெட்டி | 2000. 00 |
| மண்டலேஸ்வரி சரவணமுத்து | கொழும்பு | 15000. 00 |
| திருமதி சிவசுப்பிரமணியம் | கோண்டாவில் | 150 டொலர் |
| திருமதி மனோன்மணி | கரணவாய் | 1000. 00 |
| செ. ஜெகதீஸ்வரன் | தாவடி | 15000. 00 |
| ர. கமலாதேவி | புத்தூர் | 5000. 00 |
| த. சுவேதிகா | கோண்டாவில் (கனடா) | 5000. 00 |
| திரு மோகன் குடும்பம் | கனடா | 10000. 00 |
| சு. அத்விகா | சாவல்கட்டு | 5000. 00 |
| க. துரைராசா | மீசாலை | 9000. 00 |
| அ. ரித்திக் | பிரான்ஸ் | 5000. 00 |
| திரு ஸ்ரீகரன் குடும்பம் | மானிப்பாய் | 5000. 00 |
| பா. பிரசாந் | தெல்லிப்பழை | 3000. 00 |
| தனுஷா நிஷாந்தன் | கொடிகாமம் (கனடா) | 10000. 00 |
| நிருஷா வெற்றிவேல் | கொடிகாமம் (கனடா) | 10000. 00 |

(தொடரும்...

*நீ உன் சிறகை விரிக்கும்வரை நீ எட்டும் உயரம் யார் அறிவார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப்பணிகள் (07.06.2023 தொடக்கம் 29.12.2023 வரை)

*– தொகுப்பு: சந்நிதியான் ஆச்சிரமம் –*

**07.06.2023 புதன்கிழமை**

யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினருக்கு 175,000. 00 ரூபா பெறுமதியில் குழாய்க்கிணறு அமைத்து வழங்கப்பட்டது.

**09.06.2023 சனிக்கிழமை**

01) கலைமகள் வீதி, புத்தூர் மேற்கு பிரதேசத்தைச் சேர்ந்த யா/ ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியில் கல்வி கற்கும் மாணவனுக்கும்

02) ஏழாலை, ஏழாலை மேற்கு பிரதேசத்தைச் சேர்ந்த யா/ இராமநாதன் கல்லூரியில் தரம் 09இல் கல்வி கற்கும் மாணவிக்கும் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

**18.06.2023 ஞாயிற்றுக்கிழமை**

01) மலையகம் - பூனாகலை, கபரகலை கிராமத்தில் ஏற்பட்ட மண் சரிவால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமில் வசிக்கின்ற மாணவர்களுக்கு 200,000. 00 ரூபா பெறுமதியான பாடசாலை சீருடைகள் வழங்கப்பட்டன.

02) பதுளை - மலையக சிறுவர் இல்லத்தின் பராமரிப்பில் கல்வி கற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவான 02 மாணவர்களுக்கு மடிக் கணினிகள் வழங்கப்பட்டன.

**21.06.2023 புதன்கிழமை**

01) பிரதேச வைத்தியசாலை - செல்வநாயகபுரம், திருகோணமலைக்கு 505,400. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டன.

02) வவுனியா - கல்லாறு ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலயத்துக்கு குடிநீர் வசதியின்மையால் 440,520. 00 ரூபா நிதிப்பங்களிப்பில் குழாய்க்கிணறு அமைத்து வழங்கப்பட்டது.

**23.06.2023 வெள்ளிக்கிழமை**

01) புன்னாலைக்கட்டுவன் பிரதேசத்தைச் சேர்ந்த புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவிக்கு 45,000. 00 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

*அதிகமாக வளைந்துகொடுப்பவன் ஆபத்தானவன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02) தொண்டைமானாறு வளர்மதி முன்பள்ளி மாணவர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பாவனைக்காக 55,000. 00 ரூபா பெறுமதியான குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டது.

**07.07.2023 வெள்ளிக்கிழமை**

01) காரைநகர், முல்லைப்பிளவை பிரதேசத்தைச் சேர்ந்த சிறுநீர் பாதிப்புக்குள்ளான வருக்கு மருத்துவச் செலவுக்காக 50,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

02) புத்தூர் கிழக்கு, புத்தூர் பிரதேசத்தைச் சேர்ந்த சிறுநீர் பாதிப்பிற்குள்ளான வருக்கு மருத்துவச் செலவுக்காக 50,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

03) பருத்தித்துறை, கற்கோவளத்தைச் சேர்ந்த புற்றுநோயால் பாதிக்கப்பட்டவருக்கு மருத்துவச் செலவுக்காக 50,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**10.07.2023 திங்கட்கிழமை**

மலையகம் - பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்தின் மரண செலவுக்காக 20,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**14.07.2023 வெள்ளிக்கிழமை**

01) வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு மாணவிகளுக்கும்

02) பளை பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 07இல் கல்வி கற்கும் மாணவிக்கும்,

03) எழுதுமட்டுவாள் பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 09இல் கல்வி கற்கும் மாணவிக்கும்,

04) சுன்னாகம் பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 08இல் கல்வி கற்கும் மாணவனுக்கும்,

05) சுழிபுரம், பொன்னாலை தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 10இல் கல்வி கற்கும் மாணவிக்கும் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

**19.07.2023 புதன்கிழமை**

01) திருகோணமலை - மூதூர் பிரதேசத்தில் உள்ள திருக்கரசை மாநகரம், சங்குவேலியில் அமைந்துள்ள ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய கட்டிட பணிக்காக 150,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

02) நெடுங்கேணி, சேனைப்பிலவு கிராமத்தில் அமைந்துள்ள உமையவன் அறநெறிப்பாடசாலை 154 மாணவர்களுக்கு 116,000. 00 ரூபா பெறுமதியான சீருடைத் துணியும் தையல்கூலி 32,000. 00 ரூபாவும் வழங்கப்பட்டது.

03) முல்லைத்தீவு - முத்தயன்கட்டு, கனகரத்தினபுரம் கிராமத்தில் உள்ள நம்பிக்கை விநாயகர் ஆலய கட்டிடப் பணிக்காக 150,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

04) மலையகம் - இங்கிரியாகல பிரதேசத்தில் வசிக்கின்ற ஊடகவியலாளரின் மருத்துவ தேவைக்காக 50,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

*சிந்திக்கத் தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவையில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**21.07.2023 வெள்ளிக்கிழமை**

01) வட்டுக்கோட்டை யா/ துணைவி அ.மி.த.க. பாடசாலைக்கு 25,000. 00 ரூபா பெறுமதியான எழுது பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

02) 225,000. 00 ரூபா பெறுமதியான 05 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

அ) வல்லை வீதி, தொண்டைமானாற்றைச் சேர்ந்த வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் தரம் 11இல் கல்வி கற்கும் மாணவன்

ஆ) சுன்னாகம் வீதி, புத்தூர் மேற்கு பிரதேசத்தைச் சேர்ந்த புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் தரம் 07இல் கல்வி கற்கும் மாணவி

இ) மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்தில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவி

ஈ) நல்லூர் பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 08இல் கல்வி கற்கும் மாணவி

உ) கரவெட்டி பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 10இல் கல்வி கற்கும் மாணவன்.

**24.07.2023 திங்கட்கிழமை**

01) பண்டாரவளை - தெமோதரை பிரதேசத்தில் உள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த T.M. சந்தியா என்பவருக்கு மருத்துவத் தேவைக்காக 50,000. 00 ரூபா வழங்கப்பட்டது.

02) பண்டாரவளை, அயிஸ்லெபி தோட்டம், குருக்குடிப்பிரிவு பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பால தண்டாயுதபாணி ஆலய கட்டிடப் பணிக்காக 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

03) ஹலிஎல, செரண்டிப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகள் ஆலய கட்டிடப் பணிக்காக 50,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**29.07.2023 சனிக்கிழமை**

நெடுங்கேணி - வேலன்குளம் பிரதேசத்தில் உள்ள சித்தி விநாயகர் ஆலய கட்டிடப் பணிக்காக 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**04.08.2023 வெள்ளிக்கிழமை**

01) யா/ கந்தரோடை கந்தையா வித்தியாசாலைக்கு 38,000. 00 ரூபா பெறுமதியான எழுது பொருட்கள் வழங்கப்பட்டது.

02) உடுப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் தரம் 11இல் கல்வி கற்கும் மாணவிக்கு 47,500. 00 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

**12.08.2023 சனிக்கிழமை**

01) கிளிநொச்சி, மலையாளபுரம், செஞ்சோலை மாதிரி கிராமத்தில் வசிக்கின்ற தெரிவு செய்யப்பட்ட 24 குடும்பங்களுக்கு 96,000. 00 ரூபா அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

*நேர் வழியில் அடையமுடியாததை ஒருநாளும் குறுக்குவழியில் அடையமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02) முல்லைத்தீவு - துணுக்காய், தேறாங்கண்டல் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 110 குடும்பங்களுக்கு 440,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**19.08.2023 சனிக்கிழமை**

மலையகம் - தெமோதரை, நெதர்வில் தோட்டம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ கதிரேசன் சுவாமி ஆலயத்துக்கு பல மில்லியன் செலவில் தேர் வழங்கப்பட்டது.

**26.08.2023 சனிக்கிழமை**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்து கற்கைகள்பீட சைவ சித்தாந்தத்துறை மாணவர்களின் கல்விச் சுற்றுலா மற்றும் திருத்தல யாத்திரைக்காக 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**08.09.2023 வெள்ளிக்கிழமை**

285,000. 00 ரூபா பெறுமதியான 06 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

01) புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில் தரம் 08இல் கல்வி கற்கும் மாணவி
02) சாவகச்சேரி மத்திய கல்லூரியில் தரம் 09இல் கல்வி கற்கும் மாணவி
03) புன்னாலைக்கட்டுவன் பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 11இல் கல்வி கற்கும் மாணவி
04) அல்வாய் வடமேற்கு பகுதியைச் சேர்ந்த தரம் 07இல் கல்வி கற்கும் மாணவி
05) மூளாயை சேர்ந்த யா/ விக்ரோரியாக் கல்லூரியில் தரம் 09இல் கல்வி கற்கும் மாணவி
06) வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவி

**15.08.2023 வெள்ளிக்கிழமை**

190,000. 00 ரூபா பெறுமதியான 04 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

01) அச்சுவேலி பத்தைமேனி பிரதேசத்தைச் சேர்ந்த அச்சுவேலி மத்திய கல்லூரியில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவி
02) அச்சுவேலி பத்தைமேனி பிரதேசத்தைச் சேர்ந்த அச்சுவேலி மத்திய கல்லூரியில் தரம் 05இல் கல்வி கற்கும் மாணவி
03) காட்டுப்புலம், கரவெட்டி பிரதேசத்தைச் சேர்ந்த வடமராட்சி மத்திய கல்லூரியில் தரம் 11இல் கல்வி கற்கும் மாணவி
04) வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி பிரதேசத்தைச் சேர்ந்த யா/ சிதம்பரக் கல்லூரியில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவன்
05) யாழ் மாவட்ட சமூக சேவைகள் அலுவலக கோரிக்கைக்கு அமைவாக முதியோர் தினத்தை முன்னிட்டு 25 சாரம், 25 சேலைகள் வழங்கப்பட்டன.
06) மலையக சிறுவர் இல்லத்திற்கான 35 யன்னல்களுக்கு 350,000. 00 ரூபா பெறுமதியான கிறீல்கள் பூட்டப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**17.09.2023 புதன்கிழமை**

கிளிநொச்சி, பொன்னகர் மத்தி பிரதேசத்தில் வசிக்கின்ற திருமுருகண்டி இந்து வித்தியாலயத்தில் தரம் 05, தரம் 11இல் கல்வி கற்கின்ற இரண்டு மாணவர்களுக்கு 02 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

**20.09.2023 சனிக்கிழமை**

01) திருகோணமலை, பாலையூற்று கிராமத்தைச் சேர்ந்த தி/ விபுலானந்தா கல்லூரியில் தரம் 08இல் கல்வி கற்கும் மாணவிக்கும்

02) திருகோணமலை, பூம்புகார் கிராமத்தைச் சேர்ந்த தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் தரம் 11இல் கல்வி கற்கும் மாணவிக்கும் 02 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

03) திருகோணமலை, மணற்சேனை, மல்லிகைத்தீவு பிரதேசத்தில் அமைந்துள்ள அருள்மிகு தங்கமுருகன் ஆலயத்துக்கு கட்டிடப் பணிக்காக 200,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

04) திருகோணமலை - கன்னியா, பீலியடி பிரதேசத்தில் அமைந்துள்ள அருள்மிகு நடனகாளி அம்மன் ஆலய கட்டிடப் பணிக்காக 75,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

05) திருகோணமலை பாரதி தமிழ் வித்தியாலயத்தின் அடிப்படை தேவைகளுக்காக (நீர், மின்னியல்) 100. 000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**22.09.2023 வெள்ளிக்கிழமை**

182000. 00 ரூபா பெறுமதியான 04 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

01) 01ஆம் வட்டாரம், முள்ளியவளை பிரதேசத்தைச் சேர்ந்த மு/ முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவி

02) முள்ளியவளை பிரதேசத்தைச் சேர்ந்த மு/ முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் தரம் 07இல் கல்வி கற்கும் மாணவி

03) புதுக்குடியிருப்பு - தேவிபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த மு/ வள்ளிபுனம் மகா வித்தியாலயத்தில் தரம் 07இல் கல்வி கற்கும் மாணவி

04) கிளிநொச்சி, பாடசாலை வீதி, அக்கராயன் பிரதேசத்தைச் சேர்ந்த மு/ அக்கராயன் மகா வித்தியாலயத்தில் தரம் 09இல் கல்வி கற்கும் மாணவி

**26.09.2023 செவ்வாய்க்கிழமை**

01) வவுனியா - கூமாங்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள சித்திவிநாயகர் முன்பள்ளி பாடசாலையின் கட்டிடப் பணிக்காக 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

02) முல்லைத்தீவு, கேப்பாபிலவு, பிலக்குடியிருப்பு பிரதேசத்தில் வசிக்கின்ற 03 குடும்பங்களுக்கு அடிப்படைத் தேவைகளான வெட்டுக்கிணறு கட்டுமானப் பணிக்காக 250,000. 00 ரூபா நிதியும், யன்னல், கதவுகள் பொருத்துவதற்கான செலவுகளுக்கு 60,000. 00 ரூபாவும் மின் இணைப்புக்காக 52,000. 00 ரூபாவும் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**29.09.2023 வெள்ளிக்கிழமை**

வடமராட்சி அபிவிருத்தி நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக பனம் விதை நடுகைச் செயற்றிட்டத்துக்கு 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**01.10.2023 சனிக்கிழமை**

01) அம்பாறை மாவட்டம் சமூக சேவைகள் அலுவலகத்தின் கோரிக்கைக்கு அமைவாக முதியோர் தினத்தை முன்னிட்டு 46,000. 00 ரூபா பெறுமதியான சேலைகள், சாரம் என்பன வழங்கப்பட்டன.

02) அம்பாறை - பொத்துவில், கோமாரி பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முருகன் முன்பள்ளி மாணவர்களுக்கு 45,000. 00 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

03) அம்பாறை - கோமாரி பிரதேசத்தில் அமைந்துள்ள மெதடிஸ்த மிசன் தமிழ் மகா வித்தியாலயத்தின் மலசலகூடம் திருத்துவதற்காக 95,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

04) அம்பாறை - உமிரி பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய கட்டிடப் பணிக்காக 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

05) மட்டக்களப்பு - கோட்டைக்கல்லாறு தெற்கு பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கந்தசாமி மாரியம்மன் ஆலய கோரிக்கைக்கு அமைவாக 12 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்காக 50,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**04.10.2023 செவ்வாய்க்கிழமை**

01) யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்துக்கு 650,000. 00 ரூபா பெறுமதியான நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டது. (450 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள்)

02) யாழ்ப்பாணம் - இணுவில் கிழக்கு பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட 31 குடும்பங்களுக்கு 93,500. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**08.10.2023 சனிக்கிழமை**

01) மன்னார் மாவட்டத்தில் 62 மாற்றுத்திறனாளிகள் குடும்பங்களைத் தெரிவு செய்து 217,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள், மாந்தை மேற்கு பிரதேசத்தில் உள்ள காத்தான்குளம் (M/31) கிராம நிர்வாக பிரிவில் உள்ள அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

02) 90,000. 00 ரூபா பெறுமதியான 02 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

அ) புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவன்

ஆ) முல்லைத்தீவு - கேப்பாபிலவு கிராமத்தைச் சேர்ந்த யா/ சென்ஜோன்ஸ் கல்லூரியில் உயர் தரத்தில் கல்வி கற்கும் மாணவன்.

*நம்பிக்கை இழந்தவன் வெல்வது கடினம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11.10.2023 செவ்வாய்**

01) தென் மாகாணம் - காலி மாவட்டம் உடுகம கல்வி வலயத்தை சார்ந்த தலங்கானாவில் அமைந்துள்ள கா/ சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள ஆலயத்துக்கு கருங்கற்கலிலான சரஸ்வதி, இலக்குமி ஆகிய இரு விக்கிரகங்கள், மணி, கலசம் மற்றும் பூசைக்கான உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

02) பதுளை - மாப்பாகல பிரிவில் உள்ள யூரித் தோட்ட குடியிருப்பில் ஏற்பட்ட மின் கசிவால் உடமைகள் முழுமையாக அழிவடைந்த 09 குடியிருப்புக்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கு 150,000. 00 ரூபா பெறுமதியான சமையல் உபகரணங்கள், படுக்கை விரிப்புக்கள், தலையணைகள் 14 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், பாடசாலைச் சீருடைகள், புத்தகப்பைகள் என்பன வழங்கப்பட்டன.

03) பண்டாரவளை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 102 மாணவர்களுக்கு (தரம் 01 தொடக்கம் தரம் 11 வரை) பண்டாரவளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தான மண்டபத்தில் வைத்து 127,500. 00 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

**15.10.2023 சனிக்கிழமை**

01) மன்னார் - திருக்கேதீச்சர பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பத்திற்கு 45,000. 00 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி வாழ்வாதார தேவைக்காக வழங்கப்பட்டது.

02) அநுராதபுரம் - கெக்கிராவ, வெறுங்குளம் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள பிள்ளையார் ஆலயத்துக்கு நவராத்திரி தின நிகழ்வை முன்னிட்டு 75,000. 00 ரூபா பெறுமதியான பூசைப் பொருட்கள் வழங்கப்பட்டது.

**20.10.2023 வியாழக்கிழமை**

01) மன்னார் - மடு, நானாட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவிக்கு 47,500. 00 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

02) சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியைச் சேர்ந்த குடும்பத்திற்கு மருத்துவத் தேவைக்காக 10,000. 00 ரூபா வழங்கப்பட்டது.

03) பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரிக்கு நவராத்திரி நிகழ்வுக்காக உணவுப் பொருட்களுக்காக 40,000. 00 ரூபா நிதியும், சிறுவர்தின நிகழ்வுக்காக 25,000. 00 ரூபா நிதியும் வழங்கப்பட்டது.

**25.10.2023 புதன்கிழமை**

01) வவுனியா - மன்னார் வீதி, நெளுக்குளம் பிரதேசத்தில் வசிக்கின்ற வவுனியா மகா வித்தியாலயத்தில் உயர் தரத்தில் கல்வி கற்கின்ற மாணவனுக்கு மருத்துவத் தேவைக்காக 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

02) புதுக்குடியிருப்பு - வேணாவில் பிரதேசத்தில் வசிக்கின்ற குடும்பம் ஒன்றிற்கு மருத்துவ தேவைக்காக 20,000. 00 ரூபா நிதியும், 4500. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

*மனிதனை மாற்றியமைக்கும் விதி அவனது ஒழுக்கமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03) கிளிநொச்சி - மலையாளபுரம் செஞ்சோலை மாதிரி கிராமத்தில் உள்ள குடும்பம் ஒன்றிற்கு மலசலகூட கட்டிட திருத்தப் பணிக்காக 75,000. 00 ரூபா வழங்கப்பட்டது.

04) கிளிநொச்சி - மலையாளபுரம் செஞ்சோலை மாதிரி கிராமத்தில் உள்ள குடும்பம் ஒன்றிற்கு விவசாயத் தேவைக்காக 45,000. 00 ரூபா பெறுமதியான மருந்துப் பம், 100 அடி பைப் வழங்கப்பட்டன.

**27.10.2023 வெள்ளிக்கிழமை**

01) ஆனைக்கோட்டை இந்து சமய விருத்தி சங்கத்தால் நடாத்தப்பட்ட சைவத் திருவிழாவில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசுப்பொருட்கள் வழங்குவதற்காக 40,000. 00 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

02) வடமராட்சி கிழக்கு பிரதேச மருதங்கேணி செயலகத்தின் கோரிக்கைக்கு அமைவாக சிறுவர்கள், சிரேஷ்ட பிரஜைகள், மாற்றுவலுவுடையோர்கள் தின நிகழ்வுக்காக 40,000. 00 ரூபா பெறுமதியான ஆடைகள் வழங்கப்பட்டன.

03) 142,000. 00 ரூபா பெறுமதியான 03 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

அ) செம்பியன்பற்று வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த யா/ உடுத்துறை மகா வித்தியாலயத்தில் உயர் தரத்தில் கல்வி கற்கும் மாணவன்

ஆ) வல்வெட்டித்துறை - ஊரணி குடியேற்றத்திட்டத்தை சேர்ந்த மாற்றுவலுவுடைய குடும்பத்சை சேர்ந்த தரம் 07இல் கல்வி கற்கும் மாணவி

இ) மன்னார் - சிவபுரம் திருக்கேதீச்சர பிரதேசத்தில் உள்ள பெண் தலைமைத்துவ குடும்பத்தைச் சேர்ந்த தரம் 09இல் கல்வி கற்கும் மாணவி

**29.10.2023 ஞாயிற்றுக்கிழமை**

01) முள்ளியவளை 01ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கலைமகள் வித்தியாலயத்தில் தரம் 07இல் கல்வி கற்கும் தாய் தந்தையை இழந்த மாணவனுக்கு 47,500. 00 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டதுடன், 3500. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டது.

02) கரடிப்பிளவு கிராமத்தைச் சேர்ந்த மு/ தண்டுவான் மகா வித்தியாலயத்தில் தரம் 07இல் கல்வி கற்கும் மாணவிக்கு 47,500. 00 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

03) கரடிப்பிளவு கிராமத்தைச் சேர்ந்த மு/ தண்டுவான் மகா வித்தியாலயத்தில் தரம் 08இல் கல்வி கற்கும் மாணவிக்கு 47,500. 00 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

04) முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு, பிலக்குடியிருப்பில் உள்ள செங்கதிர் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 10,000. 00 ரூபா சம்பளம் வழங்கப்பட்டதுடன் 3500. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

சம்பளம் தொடர்ச்சியாக மாதாந்தம் வழங்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

*சிக்கனம் என்பது சிறியதொரு வருமானம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**01.11.2023 புதன்கிழமை**

யா/ கெருடாவில் இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு 450,000. 00 ரூபா பெறுமதியான நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டது. (144 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்)

**03.11.2023 வெள்ளிக்கிழமை**

01) யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு 400,000. 00 ரூபா பெறுமதியான நிழற்பிரதி இயந்திரம் வழங்கப்பட்டது.

02) யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தரம் 06இல் கல்வி கற்கும் மாணவிக்கு 47,500. 00 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

**06.11.2023 திங்கட்கிழமை**

மலையகம் - பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த இஸ்லாமிய சகோதரர்க்கு 65,000. 00 ரூபா பெறுமதியான மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

**10.11.2023 வெள்ளிக்கிழமை**

அச்சுவேலி பிரதேசத்தைச் சேர்ந்த யா/ கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயத்தில் தரம் 05இல் கல்வி கற்கும் மாணவனுக்கு 47,500. 00 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

**14.11.2023 செவ்வாய்க்கிழமை**

01) கந்தசஷ்டி உபவாசம் அனுஷ்டிப்பவர்களுக்கு பழ வகைகள் (அப்பிள், ஒரேஞ், திராட்சை, பேரீச்சம்பழம், கதலி, கப்பல், இரதை, மருத்துவம், செவ்வாழை போன்ற பழ வகைகள்) 14.11.2023 தொடக்கம் 17.11.2023 வரை வழங்கப்பட்டது.

02) கொடிகாமம் - கொடிகாமம் வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு சுய பொருளாதாரத்திற்காக 135,000. 00 ரூபா பெறுமதியான பசுமாடு வழங்கப்பட்டது.

03) நெடுந்தீவு - நெடுந்தீவு மத்தி பிரதேசத்தில் உள்ள வன்றொண்டர் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கும் 75க்கு மேற்பட்ட மாணவர்களின் நலன்கருதி 277,000. 00 ரூபா பெறுமதியான 15செற் வாங்கு, மேசைகள் வழங்கப்பட்டன.

**24.11.2023 வெள்ளிக்கிழமை**

01) யா/ கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு இணைப்பாடவிதான செயற்பாட்டிற்காக நிதிக் கொடுப்பனவாக 60,000. 00 ரூபா வழங்கப்பட்டது.

02) யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்துக்கு நூலக வாரத்தை முன்னிட்டு சிறுவர்களுக்கு நூல்கள் வழங்குவதற்காக 15,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

*ஒருவர் உன்னைத் தாழ்த்தி பேசும்போது ஊமையாய் இரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**01.12.2023 வெள்ளிக்கிமை**

01) 475,000. 00 ரூபா பெறுமதியான 10 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.
அ) அச்சுவேலி மேற்கு, யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி தரம் 10 மாணவன்
ஆ) கரவெட்டி யா/ அரசினர் தமிழ் கலவன் பாடசாலை தரம் 05 மாணவன்
இ) மாலி சந்தி, அல்வாய் - யா/ நெல்லியடி மத்தியகல்லூரி தரம் 10 மாணவன்
ஈ) புத்தூர், யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி தரம் 10 மாணவி
உ) ஆவரங்கால், யா/ புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி தரம் 08 மாணவன்
ஊ) கரவெட்டி, யா/ ஹாட்லிக் கல்லூரி தரம் 10 மாணவன்
எ) கரவெட்டி, யா/ வடமராட்சி மத்திய கல்லூரி தரம் 07 மாணவன்
ஏ) நாவலடி, கெருடாவில் வடக்கு, யா/ சிதம்பராக் கல்லூரி தரம் 09 மாணவி
ஐ) புத்தூர், யா/ புத்தூர் மெதடிசன் தமிழ் கலவன் பாடசாலை தரம் 05 மாணவி
ஒ) குடத்தனை அம்பன் அமெரிக்க மிசன் தமிழ் கலவன் பாடசாலை தரம் 05 மாணவி

02) யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலய கோரிக்கைக்கு அமைவாக 20,000. 00 பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

**06.12.2023 புதன்கிழமை**

01) மலையகம் - பதுளை மாவட்டத்தில் பல பகுதிகளில் ஏற்பட்ட மண்சரிவால் பாதிக்கப்பட்ட 83 குடும்பங்களுக்கு 475,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

| | |
|---|---|
| ஹப்புத்தளை, இல. 10 தங்கமலை தோட்டம் | 34 குடும்பங்கள் |
| கல்பொக்க, L.L.G. தோட்டம் | 29 குடும்பங்கள் |
| ஹலிஎல, சொக்கத்தன்னை | 04 குடும்பங்கள் |

02) பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரியின் கோரிக்கைக்கு அமைவாக பாடசாலை தேவைக்காக 24,000. 00 ரூபா பெறுமதியான பிளாஸ்ரிக் கோவைகள் வழங்கப்பட்டன.

03) பண்டாரவளை, ஹப்புத்தளை பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களின் போட்டி நிகழ்வுகளில் தேசிய மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கு செல்வதற்கான செலவுக்காக 20,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**08.12.2023 வெள்ளிக்கிழமை**

332,000. 00 பெறுமதியான 07 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.
01) கரவெட்டி, யா/ பெண்கள் உயர்தரப் பாடசாலை தரம் 08 மாணவி
02) பூநகரி பிரதேசம் கிளி/ கிளிநொச்சி அ.த.க. பாடசாலை தரம் 07 மாணவன்
03) சுன்னாகம், யா/ கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் தரம் 05 மாணவி
04) சுன்னாகம், யா/ கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் தரம் 06 மாணவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05) வட்டுதெற்கு, யா/ வட்டு மத்திய கல்லூரி தரம் 05 மாணவி
06) வட்டுக்கோட்டை யா/ யாழ்ப்பாணக் கல்லூரி தரம் 11 மாணவன்
07) வட்டுக்கோட்டை, யா/ விக்ரோரியாக் கல்லூரி தரம் 11 மாணவி

**11.12.2023 திங்கட்கிழமை**

01) திருகோணமலை - கப்பல்துறை, சீனக்குடா பிரதேசத்தில் அமைந்துள்ள தி/ சரஸ்வதி வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக மைதான திருத்தச் செலவு, பாதுகாப்பு வேலி அமைத்தல் செலவுகளுக்காக வித்தியாலய முதல்வரிடம் 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**15.12.2023 வெள்ளிக்கிழமை**

01) யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்வி கற்கின்ற 10 மாணவர்களைத் தெரிவு செய்து 35,000. 00 ரூபா பெறுமதியான பாதணிகள் வழங்கப்பட்டது.

02) யா/ அல்வாய் இந்து தமிழ் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழாவிற்காக மாணவர்களுக்கு 100,000. 00 ரூபா பெறுமதியான புத்தகப் பைகள், கருவிப் பெட்டிகள், சாப்பாட்டுப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

**20.12.2023 புதன்கிழமை**

01) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் பல பகுதிகளுக்கும் 500,000. 00 ரூபா பெறுமதியில் 100 குடும்பங்களுக்கு அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் - பனிக்கன் குளம் (மு/74) 24 குடும்பங்கள்
மாங்குளம் - மாவீரர் வீட்டுத் தோட்டம் (மு/73) 40 குடும்பங்கள்
புலுமச்சிநாதகுளம் (மு/72) 17 குடும்பங்கள்
கரைத்துறைப்பற்று பிரதேச செயலகம் கேப்பாபிலவு குடியிருப்பு 07 குடும்பங்கள்

02) பண்டாரவன்னி, 04ஆம் கண்டம் பிரதேசத்தைச் சேர்ந்த 60 குடும்பங்கள், துழாமுறிப்பு கிராமத்தைச் சேர்ந்த 70 குடும்பங்களுக்கு 28,000. 00 பெறுமதியான இரவு உணவு வழங்கப்பட்டது.

**25.12.2023 திங்கட்கிழமை**

01) ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைக்கு ஏற்கனவே பொருத்தப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரம் பழுதடைந்தமையால் 345,000. 00 ரூபா பெறுமதியில் திருத்தி அமைக்கப்பட்டது.

02) கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு 500,000. 00 ரூபா பெறுமதியில் அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

பூநகரி பிரதேச செயலகம் - (கி/71) கரியாலை நாகபடுவான் கிழக்கு, கரியாலை நாகபடுவான் மத்தி, குமுழமுனை பிரதேசத்தில் உள்ள 100 குடும்பங்கள்.

*இன்று என்பதை நன்றாகப் பிடித்துக்கொள். நாளை என்பது விதியின் கையில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**28.12.2023 வியாழக்கிழமை**

01) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவின் பல பகுதிகளைச் சேர்ந்த 53 குடும்பங்களுக்கு திருமதி கனகமணி (ஜேர்மனி) அவர்களின் பிறந்தநாள் நினைவாக 265,000. 00 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

கரைத்துறைப்பற்று பிரதேச செயலகம்

பிலக்குடியிருப்பு ((மு/ 102) 18 குடும்பங்கள்

வற்றாப்பளை ((மு/ 101) 35 குடும்பங்கள்

02) முல்லைத்தீவு மாவட்ட முன்பள்ளிகளுக்கு 55,000. 00 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் (தண்ணீர்ப் போத்தல்கள், புத்தகப் பைகள்)

கரைத்துறைப்பற்று பிரதேச செயலகம்

பிலக்குடியிருப்பு செங்கதிர் முன்பள்ளி 10 மாணவர்கள்

கேப்பாபிலவு சூரி முன்பள்ளி 30 மாணவர்கள்

**29.12.2023 வெள்ளிக்கிழமை**

01) வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணி, முள்ளியான் கிராமத்தில் வசிக்கின்ற பெண் தலைமைத்துவ குடும்பம் தரம் 09இல் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா பாடசாலையில் கல்வி கற்கும் மாணவிக்கு 47,500. 00 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

02) உடுவில் தெற்கு, பட்டியோடை சுன்னாகத்தைச் சேர்ந்த பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு வீடு திருத்த வேலைக்காக 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

03) மலசலகூடம் அமைப்பதற்கு கரணவாய் வடக்கு, கொற்றாவத்தையைச் சேர்ந்த குடும்பத்திற்கு

15.09.2023 - 75,000. 00

04.10.2023 - 75,000.00 ரூபா நிதி இரு கட்டங்களாக ஆச்சிரம வாராந்த வெள்ளி நிகழ்வின்போது வழங்கப்பட்டது.

## கற்பகா அறநெறிப்பாடசாலை (மாமடுச்சந்தி, நெடுங்கேணி)

**05.08.2023 சனிக்கிழமை**

01) 40X10 கொட்டில் அமைப்பதற்காக 230,000. 00 ரூபா பெறுமதியான கூரைப் பொருட்கள் வழங்கப்பட்டது.

02) தண்டுவான், நெடுங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த அறநெறிப்பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இரண்டுபேருக்கு 91,000. 00 ரூபா பெறுமதியான துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

**17.09.2023 புதன்கிழமை**

இரு ஆசிரியர்களுக்கு 91,000. 00 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

*சிக்கனமும் சேமிப்பும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இரு கருவிகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08.10.2023 சனிக்கிழமை**

27 மாணவர்களின் குடும்பங்களைத் தெரிவுசெய்து 94,500. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

**29.10.2023 ஞாயிற்றுக்கிழமை**

01) 21 மாணவர்களின் குடும்பங்களுக்கு 73,500. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

02) ஆசிரியர்களுக்கு 12,000. 00 ரூபா பெறுமதியான சேலைகள் வழங்கப்பட்டன.

**31.10.2023 செவ்வாய்க்கிழமை**

01) யாழ்ப்பாண ஆலயங்களை தரிசிப்பதற்கு 75,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

02) முல்லைத்தீவு - நெடுங்கேணி தண்டுவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்கு இரு கட்டங்களாக நிதி வழங்கப்பட்டது.

25.10.2023 100,000. 00

07.11.2023 150,000. 00 வழங்கப்பட்டது.

## கரடிப்பிளவு - நெடுங்கேணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் பாடசாலைக்கு

**29.10.2023 ஞாயிற்றுக்கிழமை**

01) ஆசிரியர்க்கு 47500. 00 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

02) புரட்டாதி மாதத்திலிருந்து மாணவர்களுக்கான சத்துணவுக்காக 10,000. 00 ரூபா நிதி வழங்கப்படுகிறது.

## கதிர்காம பாதயாத்திரையினர்க்கு உதவிகள்

**03.06.2023 சனிக்கிழமை**

01) அம்பாறை மாவட்டம் - காரைதீவு பிரதேசத்தில் உள்ள நந்தவனப் பிள்ளையார் ஆலயத்தில் வைத்து உணவுப் பொதிகளும், ஒரு தொகை நிதியும் வழங்கப்பட்டது.

**12.06.2023 செவ்வாய்க்கிழமை**

உகந்தை குமண தேசிய பூங்கா ஊடாக செல்பவர்களுக்கு 715,000. 00 ரூபா நிதிப்பங்களிப்பில் உணவுப் பொதிகளும் குடிநீர் விநியோகமும் வழங்கப்பட்டது.

திருகோணமலை - செல்வநாயகபுரம் அறநெறிப் பாடசாலையின் புதிய கட்டுமானப் பணிக்கு

| | | |
|---|---|---|
| 01.07.2023 | திரு செல்வநாயகபுரம் | 200,000. 00 |
| 10.07.2023 | திரு செல்வநாயகபுரம் | 100,000. 00 |
| 19.07.2023 | திரு செல்வநாயகபுரம் | 100,000. 00 |
| 11.12.2023 | திரு செல்வநாயகபுரம் | 35,000. 00 |

*பிறரை நம்பி வாழ்பவருக்கு வறுமை என்றும் இருந்துகொண்டே இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05.08.2023 திரு செல்வநாயகபுரம் 200,000. 00

06.09.2023 திரு செல்வநாயகபுரம் 200,000. 00

05.10.2023 திரு செல்வநாயகபுரம் 200,000. 00

10.07.2023 இராசவீதி, கோப்பாய் நவமங்கை நிர்வாகத்தினருக்கு 50,000. 00

14.08.2023 50,000. 00 ரூபா நிதிகள் மாணவர்களின் கல்வி கட்டணமாக வழங்கப்பட்டது.

24.07.2023 நெடுங்கேணி ஒலுமடு வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினரிடம் உழவு இயந்திர (போக்குவரவு) எரிபொருள் செலவுக்காக 24.07.2023 20,000. 00 ரூபா வழங்கப்பட்டது.

ஆடி மாதத்திலிருந்து மாதாந்தம் கொடிகாமம், மந்துவில் கிழக்கு கண் பார்வையற்ற குடும்பம் ஒன்றிற்கு 02புட்டி அரிசியும், 15,000.00 ரூபா நிதியும் வழங்கப்படுகிறது.

கிளிநொச்சி, மலையாளபுரம் செஞ்சோலை மாதிரி கிராமத்தில் வசிக்கின்ற குடும்பம் ஒன்றிற்கு மலசலகூடம் அமைப்பதற்காக

17.09.2023 புதன்கிழமை 75,000. 00

02.10.2023 புதன்கிழமை 75,000. 00

வ/ நெடுங்கேணி மகா வித்தியாலயம், வ/ ஒலுமடு தமிழ் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி கற்கின்ற 83 மாணவர்களின் போக்குவரத்து நலன் கருதி, வவுனியா வடக்கு பிரதேச செயலக வேண்டுகோளுக்கு அமைவாக போக்குவரத்துக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

26.09.2023 செவ்வாய் (ஐப்பசி மாதம்) 100,345. 00

25.10.2023 புதன்கிழமை (கார்த்திகை மாதம்) 91,220. 00

தொண்டைமானாறு பிரதேசம் உள்ளடங்கலாக J/386 கெருடாவில் வடக்கு, J/385 கெருடாவில் தெற்கு, J/383 தொண்டைமானாறு தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள சிறுவர், கர்ப்பிணி தாய்மார்கள் உள்ளடங்கலாக 29 குடும்பங்களை தெரிவு செய்து சத்துமாவுக்கான உணவுப் பொருட்கள் (பயறு, சோளம், கடலை, கௌப்பி, உழுந்து, அரிசி, சீனி) என்பன மாதாந்தம் வழங்கப்படுகின்றது.

பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டின்கீழ் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றுவரும் 188 மாணவர்களுக்கு மாதாந்த கல்விச் செயற்றிட்ட உதவியாக நிதி அவர்களது வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டு வருகிறது.

யாழப்பாணத்தின் பல பகுதிகளையும் சேர்ந்த பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட 140 குடும்பங்களுக்கு மாதாந்தம் ஆச்சிரமத்தில் வைத்து அரிசி வழங்கப்பட்டு வருகின்றது.

*பேசிய பிறகு வருந்துவதைவிட பேசுவதற்கு முன் யோசிப்பது நன்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# தமிழ்ப் பெண் கவியரசிகள்

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

## பாண்டியன் மாலை பெற்ற பாவையர்

ஏகம்பவாணப் பிரபுவைப் பற்றியும் அவரது மனைவியைப்பற்றியும் முன்னமே நீங்கள் தொடர் கட்டுரைமூலம் படித்திருப்பீர்கள். சேர சோழ பாண்டிய மன்னர்கள் முதலியார் முடிநடப் போயிருக்கின்றாரோ? என ஏகம்பவாணரைக் குறித்துக் கூறியதையும், முதலியாரின் மனைவியார், அவர்கள் தம் கணவரை அவமதிப்பதாக எண்ணிச் சினங்கொண்டு, "மூவேந்தரின் முடிகளைப் பறித்து நடப் போயிருக்கிறார்" எனப் பொருள் படுமாறு ஓர் வெண்பா எழுதி விடுத்ததையும், அப் பாடல் கண்ட அவர்கள், அம்மையாரிடம் மன்னிப்புக்கேட்டுச் சென்றதையும் அந்தக் கட்டுரையின்மூலம் அறிந்திருப்பீர்கள். அந்த மூவரும் சென்ற பின்னர் யாது நிகழ்ந்தது என்பதை இந்தத் தொடரில் படியுங்கள்.

நிலங்களைச் சுற்றிப் பார்த்தபிறகு ஏகம்பவாணர் நன்னீராடிப் புனித வெண்ணீறணிந்து இறைவழிபாடு முடித்துக்கொண்டு இருக்கையை அடைந்தார். வீட்டுக்காரியங்களை மேற்பார்வையிடும் செயலாளர் தலைவர்களாகிய கருமத் தலைவர்கள் அரசர்களின் வருகையை அறிவித்ததோடு, அவர்கள் பரிகாச வார்த்தைகளையும் அதைக் கேட்டுச் சினங்கொண்ட அம்மையார் ஓர் பாடலின் வாயிலாக அவர்கள் நாணும்படி செய்ததையும் அம் மன்னர்கள் மன்னிப்புக் கேட்டுச் சென்றதையும் விபரமாகக் கூறினர்.

மன்னர்களின் நடத்தை பிரபுவைத் திடுக்கிடச் செய்தது. மனைவியாரிடம் வினவினார். "மன்னிக்குமாறு வேண்டுகோள் விடுத்தபின் அச் செய்கை மறந்துவிடத் தக்கதாகும்; ஆதலின் அதனை மனதில் கொண்டிலேன்; இதுவே தங்கள்பால் இயம்பாமைக்குக் காரணம்" எனத் தம் மனக்கருத்தை தெரிவித்தனர் அம்மையர். எனினும் ஏகம்பவாணருக்கு அவ்வளவோடு அவர்களை விட்டுவிட மனம் இசையவில்லை. அவர்களது ஏளனப் பேச்சை எண்ணுந்தோறும் சினம் மிகுவதாயிற்று. அவர்களது செருக்கை அடக்கத் தீர்மானித்தார்.

குறிய கால்களும் நெடிய கைகளும், பருத்து முன் சரிந்துள்ள சாலொத்த வயிறும், ஒளிவிட்டு எரியும் நெருப்புருண்டைகள் போன்ற கண்களும் உடைய பூதம் ஒன்று, ஏகம்பவாணர் கட்டளைக்கு அடங்கித் தொண்டு பூண்டு ஒழுகி வந்தது. அரிய பெரிய காரியங்களையும் எளிதில் செய்துமுடிக்கும் ஆற்றல் வாய்ந்தது. அந்தப் பூதத்தின் உதவியைக் கொண்டு அவனியாள் வேந்தரின் அகந்தையை அடக்குவது அவர்க்கு அரிதன்று. ஆகவே அந்தப் பூதத்தை ஏவினார். அவரது ஏவலை பெற்ற அந்தப் பூதம் இரவில் உறக்கநிலையில் ஒருவருக்கும் கட்புலனாகாதவாறு படுக்கைக் கட்டிலோடு அவர்களைத் தூக்கிவரக் கருதியது. முதலில் சேர அரசனைத் தூக்கிவந்து சிறையில் சேர்த்தது. மறுநாள் சோழனைக் கொண்டு

எண்ணங்களைத் தூய்மைப்படுத்துங்கள். உலகம் உங்கள் எண்ணங்களை வணங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. பின்னர் பாண்டியன்பால் சென்றது. அவனுக்கு அண்மையில் செல்லவும் அதனால் ஆகவில்லை. பாண்டியன் தரித்திருந்த வேப்ப மாலை அதற்கு இடையூறாய் இருந்தது. வேம்பு பேய் பூதங்களுக்குப் பகையல்லவா? ஆகவே ஏகம்பவாணருக்குத் தன் நிலைமையை உணர்த்தி நீங்கியது; அப்பூதம்.

இனி, பாண்டியனைச் சிறைப்படுத்த வேண்டின் அவன் தரித்துள்ள வேப்பமாலை அகற்றப்படல் வேண்டும். அந்த மாலை அவன் மார்பில் உள்ளவரை அவனைச் சிறைப்படுத்தல் ஆகக்கூடிய காரியமன்று. அதற்கேற்ற உபாயம் யாது என வாணர் ஆராய்ந்தார். தம்மிடம் இருக்கும் பணிப் பெண்களுள் நால்வரை அழைத்தார். எழில் நலமும், கல்வித் தேர்ச்சியும், சொல் வன்மையும் வாய்ந்த அவர்களை "நீங்கள் விறலியராகப் பாண்டியன்பால் சென்று, ஆடல் பாடல்களால் அவனை மகிழ்வித்து, அவன் அணிந்துள்ள வேப்பந்தாரினைப் பரிசிலாகப் வேண்டிப் பெற்று வாருங்கள்" எனக் கட்டளையிட்டு அனுப்பினார்.

செந்தமிழ்ப்புலமைச் செவ்வியர் நால்வரும் தென்னவர்கோன் அவைக்களம் சென்று, தங்கள் புலமை தோன்ற ஆடல் பாடல் நிகழ்த்தினர். மன்னன் மகிழ்வுடன் பரிசு வழங்கப் பல பொருள்களைக் கொணர்ந்தான். அவற்றைக் கண்டனர் அரிவையர். "வேண்டுவார் வேண்டுவது அளிக்கும் வேந்தே! நீர் தரக் கருதும் முத்தும் மணியும் பொன்னும் ஆகிய இவை எம்மால் வேண்டப்படுவன அல்ல" எனக் கூறி அப்பொருளில் விருப்பம் காட்டாராயினர். "ஆயின், உம்மால் வேண்டப்படுவன யாவை? உரைமின்" எனக் காவலன் கேட்டலும் அம் மாதருள் ஒருத்தி, "தலைவியின் விருப்பத்தைத் தலைவனிடம் நற்றாய் கூறல்" என்னும் பாவத்தில் பின்வரும் பொருள் பொதிந்த ஓர் அழகிய செந்தமிழ்ப் பாடல் கூறுகின்றாள்.

"தென்னவனே! மீனக் கொடியை உடையவனே! சிறந்த வில் வீரனே! மதுரைக்கரசனே! வளம் மிகுந்த பாண்டிய நாடனே! வண்டுகளுக்கு மாலையைக் கொடுத்த தமிழ் நாடனே! கரும்புபோல் பவளாகிய என் பெண் உன் வேப்ப மாலையில் நோக்கம் உடையவளாக இருக்கிறாள் அவள் நோக்கமற்றப் பொருள்களின்மேல் இல்லை"

தென்னவா! மீனவா! சீவிலிமாறா! மதுரை
மன்னவா! பாண்டி வளநாடா! - முன்னம்
கரும்புக்கு தாரளித்த துய்ய தமிழ் நாடா!
கரும்புக்கு வேம்பிலே கண்.

இப் பாடல் கேட்டதும் வழுதிக்கு திகைப்பு உண்டாயிற்று. "இவள் ஏன் வேப்பமாலையை விரும்புகிறாள்? பாண்டிய மரபினர் சின்னமாகிய இதனைப் பெறுதலால் இவள் அடையும் பயன் யாது? என எண்ணியவாறே மற்றவளை நோக்கினான் அரசன். உடனே அவளும் அதே பாவத்தில், "பசுமையான மலர்ப் பொழில்கள் சூழப்பெற்ற நெல் வேலிக்கு இறைவனே! தமிழராய்ச்சி மிக்கவனே! எனது மகள் மலர் மாலையையோ முத்து மாலையையோ விரும்புகிறாள் இல்லை. உனது வேப்பமாலையின்மீதே ஆசை கொண்டிருக்கிறாள்" என்னும் கருத்து அமைய ஓர் செய்யுள் கூறினார். மார்பைத் தார்க்கல்ல, முத்து வண்ணத்தார்க்கல்ல, வேப்பந்தார்க் காசைகொண்டு விட்டாளே - பூப்பைந்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்திருக்கும் நெல்வேலிச் சீவிலிமாறா! தமிழை ஆய்ந்திருக்கும் வீரமாறா!" அவள் அதைக் கூறி முடிக்குமுன் மற்றொருத்தி,

வேம்பா கிலுமினிய சொல்லிக்கு நீபுனைந்த
வேம்பா கிலும் உதவ வேண்டாவோ? - மீன்பாயும்
வேலையிலே வேலைவைத்த மீனவா, நின்புயத்து
மாலையிலே மாலை வைத்தாள் மான்.

"மீன்கள் தாவிப் பாயும் கடலின்மேல் வேலாயுதத்தை எய்த பாண்டியனே! உன் பெண்ணானவள் நீ தோளில் அணிந்துள்ள மாலையின்மேல் விருப்பங் கொண்டிருக்கிறாள். காய்ச்சிய சர்க்கரைப் பாகினும் இனிமையான சொற்களையுடைய அவளுக்கு வேப்ப மாலை யாகிலும் தரலாகாதா?" என வேண்டிக் கூறினாள்.

அனைவரும் ஒருமுகமாக வேப்பமாலையை வேண்டி நின்றது, பாண்டியன் உள்ளத்திலே சிந்தனை அலையை எழுப்பியது; அச்சம் தோன்றியது. "ஏகம்பவாணரின் சூழ்ச்சியோ இது!" என்னும் ஐயமும் எழுந்தது. இந்த எண்ணங்களினூடே ஒரு புரட்சியை அவன் மனதில் உண்டாக்கிவிட்டது. நாலாமவள் மொழிந்த மாற்றம், அவள் கூற்று இது:

"ஐயோ! மாதர்களே உங்கள் வேண்டுகோள் ஒரு பலனையும் பயவாது. நீங்கள் வேண்டும் வேப்பமாலையைத் தர அரசர் துணிவு கொள்வாரா? ஏகம்பவாணரின் பூதத்துக்கு அஞ்சியிருக்கும் அரசர் எவ்வாறு உங்களுக்கு அதனைக் கொடுப்பார்? அந்த மாலையல்லவா அவரைக் காத்து நிற்பது!" என வேந்தன் வெட்குமாறு பரிகாசமாகக் கூறினாள்.

இலகு புகழாறை ஏகம்ப வாணன்
அலகை வரும்வரு என் றஞ்சி - உலகறிய
வானவர் கோன் சென்னிமிசை வண்கை வளையெறிந்த
மீனவர்கோன் கைவிடான் வேம்பு.

அவமதிப்பதாக அவள் கூறியது அரசனால் பொறுக்க முடியாததாகவிருந்தது. அன்றியும், பரிசில் வேண்டிப் பாடிவரும் பாவாணர்க்குக் கொடை மறுப்பது மன்னர்க்கு மாண்புடைச் செயலாகாதென்றும் கருதினான். உடனே துணிவு கொண்டான். தன் உயிரையே தருதல்போல மாலையை எடுத்துக்கொடுத்து விட்டான்.

மாலையைப் பெற்ற மங்கையர் மன்னனை வணங்கி விடைபெற்றுச் சென்றனர். அன்றிரவே ஏகம்பவாணன் சிறைக்கோட்டம் அடைந்தான் பாண்டியன்.

பின்னர் தமிழ்வேந்தர் மூவரும் ஏகம்பவாணனிடம் தம் செய்கைக்கு வருத்தம் தெரிவித்துக் கொள்ளவே, அவரும் சிறை வீடு செய்ததுமன்றி, அவர்களைத் தம் விருந்தினராகக் கொண்டு நட்பு பாராட்டி உபசரித்து அனுப்பினார். காவலரும் களிப்புடன் தம் தம் நாடு நோக்கிச் சென்றனர்.

பெரிய குடும்பத்தைச் சேர்ந்த செல்வச் சீமாட்டிகளேயன்றிச் சாமானிய எளிய நிலைமையில் உள்ள மாதரும், முன்னாளில் கல்வி பயின்று புலமை பெற்றிருந்தனர் என்பதற்கு இந்த வரலாறு எடுத்துக்காட்டாக உள்ளது.

கவி இயற்றுவது என்பது - அதிலும் நின்ற நிலையில் - நினைத்தவுடன் - ஏடும் எழுதுகோலுமின்றி - தட்டுத்தடுமாற்றம் இன்றி - எழுதுதல் கற்றார் எனப்படுவோர் யாவர்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகூடுவதன்று; நெடுங்காலப் பயிற்சியாளர்க்கே அது சாத்தியமாகும். அன்றியும் சொல் அழகும் பொருளழகும் பொருந்த, கற்றோரும் போற்றத்தக்க கவிகளைச் சிறந்த புலமை வாய்ந்தோரே இயற்றவல்லராவர்.

பணிப்பெண்கள் பாடிய மேலே கண்ட பாடல்கள் எத்துணை சிறந்தவை என்பதை நோக்குங்கள். கம்பர், காளமேகம் போன்ற புலவர்களின் பாடல்களாக மதிக்கத்தக்கவாறு சொல்லழகும் பொருளழகும் பொருந்தப்பெற்றுள்ளன. அரைகுறைப் படிப்பாளிகள், கத்துக்குட்டிகள் - பாடிய பாடல்கள் இவை என்று எவரேனும் சொல்லத் துணிவார்களோ?

"கரும்புக்கு வேம்பிலே கண்", "வேலையிலே வேலை வைத்த மீனவர்", மாலையிலே மாலை வைத்தான் மான்" என்பன போன்ற சொற்றொடர்களில் அமைந்துள்ள நயத்தைப் பாருங்கள். அதுகொண்டு அப் பெண்மணிகளின் கல்வியின் அளவை நீங்களே மதிப்பிடுங்கள். இளைஞர்களே! நல்ல தமிழைப் படியுங்கள். (தொடரும்...

---

மகாபாரதத்தில், கர்ணன் கிருஸ்ணரைக் கேட்டான், "என் தாயார் நான் பிறந்த நேரத்தில் என்னை ஆற்றில் விட்டுவிட்டார். முறை தவறிப் பிறந்த குழந்தை என்றார்கள். இது என் தவறா? நான் சத்திரியன் அல்ல என்று கூறி துரோணாச்சாரியார் எனக்கு கல்வியைக் கற்றுத்தரவில்லை, பரசுராமர் எனக்குக் கற்றுக்கொடுத்தார். ஆனால் சத்திரியன் எனக் கூறி நான் படித்த எல்லா வற்றையும் மறக்க சாபம் கொடுத்தார், ஒரு பசு தற்செயலாக என் அம்பு மூலம் தாக்கப்பட்டது. அதன் உரிமையாளர் என்னுடைய தவறுக்காக என்னை சபித்தார். திரௌபதியின் சுயம்பரத்திலே நான் தேரோட்டியின் மகன் என்பதற்காக நான் அவமானப்படுத்தப்பட்டேன். குந்திகூட இறுதியாக தன் மற்ற மகன்களை காப்பாற்ற மட்டுமே என்னைத் தேடி வந்தார். இப்படி அனைவராலும் வஞ்சிக்கப்பட்டபோது துரியோதனனின் அன்பு மூலமாகவே எனக்கு எல்லாம் கிடைத்தது. ஆகையால் அவன் பக்கம் நான் நிற்பது எப்படித் தவறாகும்" எனக் கேட்டான்.

அதற்குக் கிருஸ்ணர் பதிலாக, "கர்ணா நீயாவது பரவாயில்லை. நான் ஒரு சிறையில் பிறந்தேன். என் பிறப்புக்கு முன்பே மரணம் காத்திருந்தது. நான் பிறந்த இரவு அன்றே என் பெற்றோரிடமிருந்து நான் பிரிக்கப்பட்டேன். சிறு வயதிலிருந்து வாள், இரதங்கள், குதிரைகள், வில், அம்புகள் ஆகியவற்றின் இரைச்சலை நீ கேள்விப்பட்டிருப்பாய். ஆனால் நானோ மாடு கொட்டில் சாணம் வைக்கோல் இவைகளுக்கிடையே வளர்ந்தேன். நடக்க ஆரம்பிக்கும் முன்னே என்னைக் கொல்ல பல முயற்சிகள் நடந்தன. நல்ல கல்வி இல்லை ஆனால் எல்லோரும் நான்தான் நடக்கும் பிரச்சனைகளுக்கெல்லாம் காரணம் என்கிறார்கள். துரியோதனன் போரில் வெற்றி பெற்றால் உனக்கு நிறைய பொருள் நாடு சேனை கௌரவம் கிடைக்கும். ஆனால் பஞ்ச பாண்டவர்கள் உடன் சேர்ந்து யுத்தம் செய்தால் எனக்கு என்ன கிடைக்கும்? கண்ணன்தான் இந்த போருக்கு காரணம் என்ற குற்றச்சாட்டு மட்டுமே மிஞ்சும். கர்ணா ஒன்றை நினைவில் கொள். ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் சவால்கள் உள்ளன. வாழ்க்கை எப்போதுமே இலகுவாகவும் எளிதாகவும் இருப்பதில்லை. ஆனால் மனச்சாட்டிப்படி தர்மத்தின்பால் நிற்பதே சரியானதாகும். எத்தனை முறை நாம் ஏமாற்றப்பட்டோம், எத்தனை முறை நாம் அவமானப்படுத்தப் பட்டோம். எத்தனை முறை வீழ்ச்சி அடைகிறோம் என்பது முக்கியமானது அல்ல. அந்த நேரத்தில் நாம் எப்படி மீண்டு எழுந்தோம் என்பதே முக்கியமானது. நம் வாழ்க்கையில் நடக்கும் தவறுகள் நம்மை தவறான பாதையில் போவதற்காக உரிமை கொடுக்கவில்லை. வாழ்க்கை என்பது ஒரு பாதை. சில நேரங்களில் கரடுமுரடாக இருக்கலாம். அதைக் கடப்பது நம் காலணிகளால் அல்ல நாம் எடுத்து வைக்கும் அடிகள் மூலமே என்பதை நினைவில்கொள்" என்றார் கிருஸ்ணர்.

*நான் இப்போது இருக்கும் நிலைக்கு நானே பொறுப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2023ஆம் ஆண்டு வாசகர் போட்டிக்கான விடைகள்

| | மாதம் | பக்கம் |
|---|---|---|
| 1. சுவாமி விபுலானந்தர் | வைகாசி | 17 |
| 2. இறைவன்மேல் நம்பிக்கையும், பக்தியும் வைத்து முயற்சி எடுக்க வேண்டும். | தை | 41 |
| 3. பஞ்சமா பாதகங்கள் | சித்திரை | 22 |
| 4. வீராசாமி முதலியார் | மாசி | 13 |
| 5. தடம் பதித்து நடப்பவன் | பங்குனி | 29 |
| 6. வில்வமரம் | சித்திரை | 09 |
| 7. சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம் | தை | 39 |
| 8. அனுபவம் | மாசி | 48 |
| 9. மக்களின் வாழ்வு மேம்பாட்டிற்கு சேவை ஆற்றுதலினூடாக | ஐப்பசி | 19 |
| 10. மந்திரம், ஸ்லோகம், தோத்திரம் சொல்ல நல்ல சிந்தனைகள் மூலம் | சித்திரை | 27 |
| 11. சித்சபை, கனகசபை, இராஜசபை, நிருத்தசபை, தேவசபை | ஆவணி | 12 |
| 12. பத்மை, இலக்சுமி | புரட்டாதி | 33 |
| 13. குமரகுருபரர் | ஐப்பசி | 36 |
| 14. திருக்கல்யாண உற்சவம் | ஐப்பசி | 17 |
| 15. சோமசுந்தரப்புலவர் | வைகாசி | 15 |
| 16. விபூதி, பசிதம், பஸ்மம், ஷாரம், இரட்சை | பங்குனி | 19 |
| 17. விதுரரின் மனைவி | வைகாசி | 19 |
| 18. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | பங்குனி | 35 |
| 19. நாரத முனிவர் | ஆனி | 13 |
| 20. பிருங்கி முனிவர் | வைகாசி | 39 |
| 21. அன்பு | புரட்டாதி | 20 |
| 22. நடுவுநிலைமை | ஆவணி | 05 |
| 23. அற்புத திருவந்தாதி, திருஇரட்டை மணிமாலை, மூத்த திருப்பதிகம் | ஆனி | 38 |
| 24. ரமண மகரிஷி | ஆடி சு. த. தகவல் | |
| 25. திருவாவடுதுறை | ஆடி | 31 |

*நீ பட்ட துன்பத்தைவிட, அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**1ஆம் பரிசு** — **யூ.பி. ஆனந்தம்**
கிளானை வீதி,
02ஆம் இடது ஒழுங்கை, கொல்லன்கலட்டி
தெல்லிப்பழை.

**2ஆம் பரிசு** — **திருமதி பாலசுந்தரம் தயாநிதி**
இல. 337/20B,சேர். பொன். இராமநாதன் வீதி,
சுன்னாகம்

**3ஆம் பரிசு** — **வே. குமாரசுவாமி**
சடையாளி,
காரைநகர்

## ஆறுதல் பரிசு பெறுவோர் விபரம்

1. **ருக்மணிதேவி ஆறுமுகம்**
   சிவன் வீதி,
   ஆவரங்கால்.
2. **பாலகிருஷ்ணன் சஞ்சிவன்**
   முடக்கந்தோட்டம்,
   அல்வாய்.
3. **T. சதானந்தன்**
   அம்மன் கோவிலடி,
   கோண்டாவில்மேற்கு, கோண்டாவில்.
4. **பா. நிர்மலாதேவி**
   280, பருத்தித்துறை வீதி,
   ஆனைப்பந்தி.
5. **திருமதி ஏகாம்பரம் ஜெயராணி**
   இல. 02, புறூடி ஒழுங்கை,
   யாழ்ப்பாணம்.
6. **திருமதி ச. சந்திரிகா**
   துறைமுக வீதி,
   மயிலிட்டித்துறை.
7. **திருமதி ஜெ. பாலசிங்கம்**
   "துவாரகை"
   சிவனடியான் வளவு,
   இமையாணன், உடுப்பிட்டி.
8. **திருமதி செ. வசந்தாதேவி**
   21/2, இராமலிங்கம் வீதி,
   திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.
9. **திருமதி மதுரை மீனாம்பாள் சிறீஸ்கந்தராசா**
   குச்சம் ஒழுங்கை,
   வல்வெட்டித்துறை.
10. **திரு இ. யாதவன்**
    பிரதேச செயலகம்,
    கரவெட்டி.

**வாசகர் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் மாசிமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது (23.02.2024) வழங்கப்படும்.**

*எதிர்க்க துணிவில்லாதவன் வெற்றியை எதிர்பார்க்க முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத வாராந்த நிகழ்வுகள்

**02.02.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு :-** "கந்தன் மகிமை"

**வழங்குபவர் :-** திரு சிவஞானம் பாலமுரளி அவர்கள்

[ஆசிரியர்]

---

**09.02.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

**16.02.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு :-** "மகாபாரதம்" (தொடர்)

**வழங்குபவர் :-** செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

[ஆசிரியர்]

---

**23.02.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் மாசி மாத வெளியீடு

**வெளியீட்டுரை :-** திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள்

[இளைப்பாறிய ஆசிரியர்]

**மதிப்பீட்டுரை :-** திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள்

[முதுநிலை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்]

314ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org